செந்தமிழ்ச் செல்வி

உள்ளுறை



அரசு

சிலம்பு-டுச] வள்ளுவர் ஆண்டு-உ0க0 கார்த்திகை, Dec. '79 [பரல்-௬

'செந்தமிழ்ச் செல்வி'

(செந்தமிழ்த் திங்கள் வெளியீடு)

இசைழாசிரியர் கூட்டத்து உறுப்பினர்கள்




அண்ணுமலைப் பல்கலைக் கழக நிறுவனர்
வள்ளல் செட்டிநாட்டரசர்
இராசா சர் அண்ணுமலை செட்டியார்

அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பொன்விழா (6, 7, 8-12-'79)



தமிழக ஆளுநர்
மேதகு
பிரபுதாஸ் பட்வாரி




இந்தியக் குடியரசுத் தலைவர்
மாண்பமை
நீலம் சஞ்சீவிரெட்டி



அண்ணாமலைப் பல்கலைக் கழகத்
துணைவேந்தர் நீதிபதி,
முனைவர் பி. எஸ். சோமசுந்தரம்


பொன்விழா நிகழ்ச்சிகள்



அண்ணாமலைப் பல்கலைக் கழக இணைவேந்தர்
செட்டிநாட்டரசர் இராசா சர் முத்தைய செட்டியார்
வரவேற்புரை நிகழ்த்துதல்



பல்கலைக் கழகப் பொன்விழாவைத் தொடங்கிவைத்துக்
குடியரசுத் தலைவர் மாண்பமை நீலம் சஞ்சீவி ரெட்டி
உரை நிகழ்த்துதல்



செட்டிநாட்டரசரின் திருமகனுர் முனைவர் எம். ஏ. எம். இராமசாமி
தலைமை நீதிபதி மாண்புமிகு இசுமாயில் அவர்களிடம்
பொன்விழா மலரை வழங்குதல்



தமிழக முதல்வர் மாண்புமிகு எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள்
பொன்விழாச் சிறப்புரை நிகழ்த்துதல்

செந்தமிழ்ச் செல்வி

திங்கள் வெளியீடு

சிலம்பு ருச	திருவள்ளுவர் ஆண்டு உ0கO, கார்த்திகை திசம்பர் 1979	பரல் ச

தமிழுணர்விற்கு ஒரு பல்கலைக் கழகம்

தமிழ்நாட்டில் மூத்த பல்கலைக்கழகமான சென்னைப் பல்கலைக் கழகம் இன்று 'ஒன்று பல வாயிடினும்' தமிழுணர்விற்கு ஒரே பல்கலைக் கழகமாகத் திகழ்வது தில்லையின் எல்லையில் அமைந் துள்ள அண்ணாமலைப் பல்கலைக் கழகம்தான்.

தமிழ் வளர்ச்சி ஒன்றையே கருத்தில் கொண்டு தமிழ் வளர்த்த, வளர்க்கும் மதுரையில் வீற்றிருக்கும் அங்கயற் கண்ணியின் பெயரில் செட்டிநாட்டரசர் அண்ணாமலைச் செட்டியார் 1920இல் மீனாட்சி கல்லூரியைத் தொடங்கினார்கள். தமிழ் தன்னாட்சி செலுத்தும் கல்லூரியாக முதலில் அது தொடங்கப் பெறினும் பின்னர்ப் பல துறைகளையும் இணைத்துக்கொண்டு 1929இல் அண்ணாமலைப் பல்கலைக் கழகமாகப் பரந்து விரிந்து வளர்ந்துள்ளது. இன்று அப் பல்கலைக் கழகத்தில் பல்வேறு துறைகள் இருப்பினும் அதற்குப் பேரும் புகழும் தேடித் தந்துள்ளது அதன் தமிழ்த் துறையும் அதற்கு அடிப்படையான தமிழுணர்வும்தான்.

ஒரு நாடு முன்னேற மக்களுக்கு நாட்டுணர்வும் மொழி யுணர்வும் வேண்டும். அவை இல்லையேல் அந் நாடு முன்னேற முடியாது. தமிழ் நாட்டில் நாட்டு விடுதலைக் கிளர்ச்சி முகிழ்த்த போது நாட்டுணர்வுடன் மாணவர்கள் முதன் முதல் கிளர்ந் தெழுந்தது அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலும் சென்னைப் பச்சையப்பன் கல்லூரியிலுமே. அதில் பங்குகொண்ட மாணவர்கள் இன்று நம்மிடையே உயர்ந்த நிலையில் இருக்கின்றனர் என்பதை நாம் காணுகிறோம்.

அவ்வாறே பைந்தமிழுக்கு ஒரு தீங்கெனில் பதைத்தெழு வதில் மேற்கூறிய இரண்டுமே ஒரே சமயத்தில் துடித்தெழும். இந்தியின் ஆதிக்கத்தை எதிர்த்து அண்ணுமலைப் பல்கலைக்கழகம் 1938 முதல் இன்று வரை பல முறை கிளர்ந்து எழுந்துள்ளது. அதன் உச்சக் கட்டமாக 1965இல் நடைபெற்ற இந்தியெதிர்ப்புக் கிளர்ச்சியின்போது இளங்காளையான மாணவர் இராசேந்திரன் காவலரின் துப்பாக்கிச் சூட்டிற்கு இரையாகித் தன்னின்னுயிரையும் ஈந்தார். அவர் நினைவு என்றும் அப் பல்கலைக்கழக மாணவர் களிடையே பசுமையாக இருக்கும் வகையில் அவருக்குப் பல்கலைக் கழகத்தின் நுழைவாயிலில் ஒரு சிலையும் நிறுவியுள்ளனர்.

பிறமொழிச் செல்வாக்கு தமிழ்மீது கூடுதலாகித் தமிழ் மொழியின் தனித்தன்மை சீரழிந்துபோன நிலையில் தனித்தமிழ் இயக்கம் கண்டவர் மறைத்திரு மறைமலையடிகளார். அவர்தம் இயக்கத்தில் பேரீடுபாடு கொண்ட அண்ணுமலைப் பல்கலைக்கழக மாணவர்கள் தமிழ்மக்களிடையே தனித்தமிழ்ப்பெயர்களை மக்களுக்குச் சூட்டி மகிழ்வதற்கு முன்னேடியாக நின்றனர். நாராயணசாமி நெடுஞ்செழியனுகவும், ராமையா அன்பழகனுகவும், சீனிவாசன் செழியனுகவும், கோதண்டபாணி வில்லாளனுகவும், ரங்கசாமி அரங்கண்ணலாகவும், சோமசுந்தரம் மதியழகனுகவும் மாறினர். இன்று இவர்கள் அனைவருமே தமிழ்நாட்டின் தலை சிறந்த தலைவர்களாகத் திகழ்கின்றனர்.

இத்தகைய தமிழுணர்விற்கு முதற்காரணமாக இருந்தவர் கொடை வள்ளல் அண்ணுமலை அரசரே. பலர் பொருளை ஈட்டு கின்றனர். ஈட்டியதைக் காக்கின்றனர். காத்ததை வகுக்கும் போதுதான் தன்னயத்துடன் 'தம்மில் தம்மனை தம்மக்கள்' என்று தமக்காகவே செலவிட்டு வாழ்ந்து மறைந்துவிடுகின்றனர். ஆனுல், பெருந்தகை அண்ணுமலைப் பேரறிவாளரின் திரு, பலர்க்கும் பயன் படும் ஊருணி யாயிற்று. உள்ளூர்ப் பழுத்த பயன்மரமாயிற்று.

அண்ணுமலை அரசர் தமிழுக்காகத் தோன்றினுர். தமிழுக்காக வாழ்ந்தார். தமிழன்னையை அரியணையில் அமர்த்தினுர். முத்தமி ழில் இயற்றமிழுக்குக் கல்லூரி கண்டார். அது பல்கலைக்கழகமாக மலர்ந்தது. இசைத் தமிழுக்காகக் கிளர்ந்தெழுந்தார். தமிழிசை இயக்கத்தையே கண்டார். நாடகத் தமிழுக்காக அவர் பெயரிலும் அவர்தம் மைந்தர் பெயரிலும் அரிய மன்றங்கள் அமைந்துள்ளன.

'இவன் தந்தை என்னேற்றுன் கொல்' என்று கூறுமளவிற்கு அண்ணுமலையரசரின் அருமைப் புதல்வராகத் தோன்றியுள்ள செட்டி

நாட்டரசர். முனைவர் மு. அ. முத்தையா செட்டியார் அவர்கள் தந்தை எவ்வழி, தாமும் அவ்வழி என்ற வகையில் நின்று தந்தையார் நிறுவிய அறநிலையங்களை அவருக்கும் மேலாக இன்று கட்டிக்காத்து வருகிறார். தந்தை ஒன்று என்றால் தனயன் பத்து என்கிற அளவில் இன்று அண்ணாமலைப் பல்கலைக்கழக வளாகம் முழுவதிலும் பற்பல புதிய எழில்மிகு கட்டிடங்கள் தோன்றவும் அவற்றில் புதுப்புது அறிவுத் துறைகள் வளர்ச்சியுறவும் வள்ளல் முத்தைய அரசர் காரணராக இருக்கிறார்.

எத்தனை ஆட்சிகள் மாறினும் சரி, தம் கண்ணனைய பல்கலைக் கழகத்தின் குறிக்கோளான தமிழ்வளர்ச்சியைப் பேணிப் பாது காத்து வருகின்றார். 'இந்தி கூடவே கூடாது' என்று நாற்பது ஆண்டுக் காலமாக உறுதியாகத் தலை நிமிர்ந்து நின்று நடுக்கம் சிறிதுமின்றி எதிர்த்து வருபவர் அவர். இத்தகைய அருளாளரை, தமிழ்மொழிப் பற்றாளரைத் தங்கள் இணைவேந்தராகப் பெற்றுள்ள அண்ணாமலைப் பல்கலைக் கழகத்து மாணவர்களின் பேறே பேறு.

தமிழிசை இயக்கத்தின் தோற்றத்திற்கும் தொடக்க நிலைக்கும் வள்ளல் அண்ணாமலையாரும் அரசர் முத்தைய வேளுமே காரண ராவர். விடாப்பிடியாகத் தமிழிசையை வளர்ப்பதற்காகத் தமிழகத் தில் ஆங்காங்கே மன்றங்களை அமைத்து ஆண்டுதோறும் தமிழிசை விழாக்கண்டு தமிழ்ப் பண்களை ஆயச்செய்து வருகின்றார். நாளும் தமிழிசை வளர்க்கும் நற்றமிழிசைத் தொண்டராகத் திகழ்பவர் செட்டி நாட்டரசர் முத்தைய வள்ளல் அவர்களே ஆவர்.

இவர்கள் கால்வழியில் நின்று இனித் தொடர்ந்து தொண் டாற்ற இருப்பவர் அரசர் முத்தையாவின் திருமகன் முனைவர் எம். ஏ. எம். இராமசாமி அவர்கள் ஆவர். இப் புகழ்க் குடும்பம் தமிழ்நாட்டிற்கும் மொழிக்கும் ஆற்றியுள்ள தொண்டு அளவிடற் கரியது; போற்றுதற்குரியது; மறக்க முடியாதது.

தமிழுணர்விற்கு வித்திட்டவர்கள் இவர்களாயினும் வித்து வெடித்து வேரூன்றி எழுந்து ஆலமரமாக விழுதுகள் விட்டுப் பரந்து விரிந்து வளர்ந்ததற்குக் காரணமானவர்கள் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ் வளர்க்கும் கலைச்செம்மல்களாக அமர்ந்த தமிழ்ப் பேரறிஞர்களே ஆவர்.

பல்கலைக் கழகமாக மாறுவதற்குமுன் மீனாட்சி தமிழ்க் கல்லூரி யாக இருந்தபோது முனைவர் உ. வே. சாமிநாத ஐயரவர்கள் கல் லூரித் தலைவராக விளங்கினார். பல்கலைக்கழகம் தொடங்கியபோது

தாகூர் சட்டப் பேராசிரியரான கா சுப்பிரமணிய பிள்ளை அவர்கள் அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தின் முதல் தமிழ்த்துறைத் தலைவ ராஞர். அவரைத் தொடர்ந்து ஈழத்துப் பெரும் புலவரான விபுலானந்த அடிகள், சொல்லின் செல்வர் ரா. பி. சேதுப்பிள்ளை, நாவலர் சோமசுந்தர பாரதியார், பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியார், மகாவித்துவான் ரா. இராகவையங்கார், நாவலர் ந. மு. வேங்கடசாமி நாட்டார், முனைவர். தெ. பொ. மீனுட்சி சுந்தரஞர், முனைவர். அ. சிதம்பரநாதன் செட்டியார், சதாசிவ பண்டாரத்தார், கோ. சுப்பிரமணிய பிள்ளை, மொழிப் பேரறிஞர் தேவநேயப்பாவாணர், உரைவேந்தர் ஔவை. சு துரைசாமிப் பிள்ளை, பேராசிரியர் லெ. ப. கரு. இராமநாதன் செட்டியார், முனைவர். வ. சுப மாணிக்கஞர் போன்ற பெரும் புலவர்கள் பணி யாற்றித் தமிழுணர்வை மாணவர்களிடையே வளர்த்தனர்.

'தமிழையும் தமிழ்ப் பண்பாட்டையும் உலகறியச் செய்வதே இப் பல்கலைக் கழகத்தின் தலைசிறந்த குறிக்கோளாக இருக்கும்' என்று அரசர் அண்ணுமலையார் பல்கலைக் கழகத்தைத் தொடங்கிய போது குறிப்பிட்டார்.

அவ் வெண்ணம் எவ்வாறு வெற்றி பெற்றுள்ளது என்பதை இலங்கைத் தமிழ்ப் பேரறிஞர் முனைவர். தவத்திரு. தனிநாயக அடிகளார் மகிழ்ச்சியோடு "கடந்த ஐம்பது ஆண்டுகளில் தமிழின் மறுமலர்ச்சிக்கான காரணத்தை ஆராயின் அண்ணுமலைப் பல்கலைக் கழகத்திற்கு முதலிடம் கொடுக்க வேண்டும். தனித்தமிழ் இயக்கம், தமிழ்ச் சொற்பொழிவுக் கலை, தமிழிசை இயக்கம், தமிழ் இலக்கியம், வரலாறு, சமயம், தத்துவம், பண்பாடு போன்ற துறைகளில் ஆராய்ச்சிக்கு அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தைப்போல வேறு எந்தத் தனி நிறுவனமும் பாடுபடவில்லை" என்று தெள்ளத் தெளியப் பாராட்டுகிருர்.

இப் பல்கலைக் கழகத்தின் வெள்ளிவிழா 9—2—1955இல் சிறப்பாக நடைபெற்றது. அந்த விழா நிகழ்ச்சிகள் படங்களுடன் 1955 இல் செல்வி சிலம்பு உகூ பரல் சுஇல் வெளியிடப் பெற்றுள்ளன.

இவ்வாறு தமிழ்மொழியின் ஆக்கத்திற்குப் பல்லாற்ருனும் பணியாற்றிவரும் அண்ணுமலைப் பல்கலைக்கழகம் இந்தத் திசம்பர்த் திங்கள் 6, 7, 8 ஆகிய நாள்களில் தன் பொன்விழாவை ஈடிணை யற்ற வகையில் சிறப்பாகக் கொண்டாடியது. தொடர்ந்து நூற்றுக் கணக்கான ஆண்டுகள் இப் பல்கலைக்கழகம் பணியாற்றி வாழ வேண்டுமென வாழ்த்துகின்ருேம்.

———

அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பொன்விழா

செட்டிநாட்டரசர் அண்ணாமலைச் செட்டியார் அவர்கள் அருட் கொடையால் தோன்றிய அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் பொன்விழா 1979 திசம்பர்த் திங்கள் 6, 7, 8 ஆகிய மூன்று நாட் களிலும் தில்லையம்பலத்தான் திருக்கண் பார்வையுடன் வியக்கத் தக்க வகையில் சீருடனும் செம்மையுடனும் நடைபெற்றது.

பொன் விழாவைக் கொண்டாடப் பல்கலைக் கழக வளாகம் முழுவதும் வண்ணம் தீட்டப்பெற்றுப் புதுப் பொலிவுடன் விளங் கியது. சிறப்புமிகு கட்டிடங்களான சாத்திரி மண்டபம், நூலகக் கட்டிடம் முதலான பலவும் பல்வகை வண்ண விளக்குகளால் அழகு படுத்தப்பெற்றிருந்தன. அமைதியான இருட்படலத்தைப் பல் வண்ண விளக்குகள் போக்கிப் பகலாக்கிக்கொண்டிருந்தன. மாண வர்கள் அனைவரும் மகிழ்ச்சியுடன் பொன்விழா நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டனர். தம் ஊரில் நடக்கும் தேர்த்திருவிழாவுக்குக் கூடுவதுபோலத் தில்லையின் எல்லைப் புறத்துச் சிற்றூர்களுட்படப் பல ஊர்மக்களும் விழாவில் கலந்துகொண்டனர். பாருலகில் பல்வேறு நாடுகளில் பரந்து சென்று வாழும் பல்கலைக் கழகப் பழைய மாணவர்கள் பொன் விழாவில் கலந்துகொள்ளப் பொலி வுடன் கூடினர். செட்டிநாட்டுப் பெருமக்கள் அனைவரும் தம் இன விழாப் போல் எண்ணிக் கூடியிருந்தனர். அருள் மழையால் உருவான அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் பொன் விழாவைக் காண வந்த வான்மழையும் நாளும் மும்மாரி பெய்து விழாவைச் சிறப்பித்தது ஈண்டுக் குறிப்பிட்டு மகிழ்தற்குரியது.

விழா நடப்பதற்கென ஐயாயிரம் பேருக்கு மேல் அமரத்தக்க அழகுமிகு கொட்டகை அமைக்கப்பெற்று அதற்கு ‘இராணி சீதை அரங்கம்’ என்று செட்டிநாட்டரசர் அண்ணாமலைச் செட்டியாரின் துணைவியாரின் பெயரும் சூட்டப்பெற்றிருந்தது.

அந்தக் கவின்மிகு அரங்கத்தில் மூன்று நாள்களிலும் காலை யிலும் மாலையிலும், பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்றன. நள்ளிரவுவரை கலை நிகழ்ச்சிகளும் நடந்தன.

பல்கலைக் கழகத்தின் பல்வேறு துறைகளும் தத்தம் கட்டிடங் களில் பயனுடைய காட்சிகளை அமைத்திருந்தன. கோகலே மண்ட

பத்தில் மாணவர்களின் கைவண்ணத்தைப் புலப்படுத்தும் வண்ண வண்ண ஓவியங்கள், அண்ணுமலைப் பல்கலைக் கழக வெளியீடுகள், மற்றும் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், தஞ்சை சரசுவதி மகால் நூலக வெளியீடுகள் கொண்ட காட்சியைத் தமிழ்த் துறையைச் சார்ந்த டாக்டர் ஆறு அழகப்பன் அழகுற அமைத்திருந்தார். பொன் விழாவையொட்டி அண்ணுமலைப் பல்கலைக் கழக மாணவர்களின் 'பொன் விழாச் சிறப்பு நாளிதழ்கள்' திரு. சோம லெ அவர்களின் திருமகனுரான திரு. லெ. சோமசுந்தரத்தை ஆசிரியர் குழுவில் கொண்ட ஆசிரியர்-மாணவர் குழு சிறப்பாக வெளியிட்டது. பொன் விழாச் செய்திகளை அன்றன்று சுவையாக விழாவில் கலந்துகொண்டோரும் மாணவர்களும் அறிந்துகொள்ளும் வகையில் பல்கலைக் கழகத்தின் பல்வேறு சிறப்புகளைத் தாங்கிக் கொண்டு அச் சிறப்பிதழ்கள் வெளியிடப்பெற்றன.

விழாவில் இந்தியக் குடியரசுத் தலைவர் மாண்பமை நீலம் சஞ்சீவ ரெட்டி, தமிழக ஆளுநர் மாண்பமை பிரபுதாசு பட்வாரி, தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் மாண்பமை எம். ஜி. இராமச்சந்திரன், உயர்நீதி மன்றத் தலைமை நீதிபதி முனைவர் எம். எம். இசுமாயில், நீதிபதி முனைவர் மகராசன் முதலாகப் பல்துறை அறிஞர்கள், அரசியல் தலைவர்கள், கவிஞர்கள் பலர் விழா நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு சிறப்புச் சொற்பொழிவாற்றினர்.

பொன் விழா நிகழ்ச்சிகள் 6-12-79 அன்று காலை 10 மணியளவில் இராணி சீதை அரங்கத்தில் குழலிசை மன்னர்கள் நாமகிரிப் பேட்டை கிருட்டிணன், மதுரை சேதுராமன், பொன்னுசாமி குழலிசையுடன் தொடங்கியது. டாக்டர். மதுரை சோமு அவர்கள் பாடிய கடவுள் வாழ்த்து முன் தொடரப் பல்கலைக் கழகத்தின் இணைவேந்தரான செட்டிநாட்டரசர் இராசா சர். மு. அ. முத்தையா செட்டியார் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினர்:

"இந் நன்னளில், சிறப்புமிக்க நம் குடியரசுத் தலைவர் அவர்களுக்கு, அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தின் சார்பாக மிக்க கிளர்ச்சியுடன் வரவேற்புக் கூறும் வாய்ப்புக் கிடைத்ததை நான் பெற்ற பெருமையாகக் கருதுகிறேன். ஏராளமான அலுவல்களுக்கிடையிலும் தம்முடைய பொன்னுன நேரத்தை ஒதுக்கி, இந்தப் பல்கலைக் கழகத்தின் பொன்விழாக் கொண்டாட்டங்களைத் தொடங்கி வைக்க இசைந்து இங்கே வந்திருப்பது அவர்களுடைய பெருந்தன்மைக்கு எடுத்துக்காட்டாகும். அவர்களுடைய வருகை, சிறந்த ஒரு தனிப்பட்ட மனிதரின் வருகையாகவும், அதே நேரத்தில், பழம்பெருமைமிக்க நம் நாட்டின் தலைவர் அவர்களுடைய

வருகையாகவும் இருப்பதால், நமக்கு இரட்டிப்பு மகிழ்ச்சி தருகிறது. அவர்களுக்கு என் சார்பிலும் பல்கலைக் கழகத்தின் சார்பிலும் மிக்க பணிவுடன் நன்றி கூறிக்கொள்ளுகிறேன்.

''பல்வேறு பெருமக்கள் கூடியிருக்கும் இந்தப் பேரவைக்கும் பல்கலைக் கழகத்தின் நன்றி உரியதாகும். தமிழ்நாட்டின் ஆளுந ராக மிக்க திறமையுடனும் மக்களுடைய ஆதரவுடனும் இருந்து வரும் பிரபுதாஸ் பட்வாரி அவர்கள் பல்கலைக் கழகத்தின் மதிப்பிற் குரிய வேந்தரும் ஆவார். அவருக்கு நாம் மிகவும் கடமைப்பட் டிருக்கிறோம். பல்கலைக் கழகத்தின் ஓர் உறுப்பாக இருந்து நன் முறையில் அறிவுரை நல்கியும் வழிகாட்டியும் வரும் அன்னாருக்கு நம் நன்றி உரியது. நம் அழைப்பை ஏற்று இங்கு வந்திருக்கும் இந்தியாவின் தவப்புதல்வர்களைக் காணும் பேற்றினை எண்ணிப் பெருமைப்படுகிறோம் இப் பல்கலைக் கழகத்தின் வளர்ச்சியில் அக்கறை காட்டி உதவிவரும் திறமைமிக்க நம் முதல் அமைச்சர் மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள், தம்முடைய ஏராளமான பணிகளுக்கும் முதன்மையான அலுவல்களுக்கு மிடையே இங்கே வந்து நம்மைச் சிறப்பித்து இருக்கிறார்கள்.

''தனித்தனியாகக் குறிப்பிடத்தக்க பலர் இங்கே வந்திருக்கிற போதிலும் நேரத்தின் அருமை கருதி நான் குறிப்பிடவில்லை.

''நான் இன்று சற்றுப் பெருமையோடு பேசுவதாக உங்களுக்குத் தோன்றலாம். அதைப் பொருட்படுத்த வேண்டாமென்று வேண்டிக் கொள்கிறேன். அதே நேரத்தில் மிக்க அடக்கத்துடன்தான் பேசுகிறேன் என்றும் தெரிவித்துக்கொள்கிறேன். இப் பல்கலைக் கழகம் என் தகப்பனார் ராசா சர் அண்ணுமலைச் செட்டியார் அவர்கள் நிறுவியது என்பதைக் குறித்து நான் பெருமைப்படுகிறேன். 1911ஆம் ஆண்டில் அவர் இங்கிலாந்திற்குச் சென்றபோது, இப்படி ஒரு பல்கலைக்கழகம் நிறுவ வேண்டுமென்று நினைத்தார் புறக்கணிக்கப்பட்டிருந்த தமிழ்க் கலைகளுக்கும், தமிழ்மொழிக்கும் புத்துயிர் கொடுக்க வேண்டுமென்று அவர் விரும்பினார். தமிழிசை யின் மறுமலர்ச்சியில் அவர் தீராக் காதல் கொண்டிருந்தார். இக் கொள்கைகளுக்குச் சிறப்பிடம் கொடுத்து, அதே நேரத்தில் அறிவியல், தொழில் நுட்பவியல் பாடங்களுக்கும் வகை செய்து இப் பல்கலைக்கழகம் ஏற்படுத்தியபோது பொதுமக்கள் அனைவரும் அந்த முயற்சியை ஆதரித்தனர். தமிழிலக்கியத்திலும் மிகவும் ஆழமான ஆராய்ச்சி தேவையென்று அவர் உணர்ந்தார். இப் பகுதியில் கோயில் கொண்டுள்ள நடராசப் பெருமானுடைய அரு

ளாலும், கலைமகளின் கருணையாலும் என் தகப்பனருடைய முயற்சிகள் யாவும் வெற்றி பெற்றுள்ளன.

''இந்தப் பல்கலைக்கழகத்தின் இணைவேந்தர் என்ற முறையில், என்னுடைய வணக்கத்துக்குரிய தந்தையாரின் முன்மாதிரியைப் பின்பற்றி நடந்துகொள்ள எப்போதும் முயன்றிருக்கிறேன். என் தந்தையாருடைய உள்ளத்தில் நிலைத்த இடம் பெற்றிருந்த இப் பல்கலைக்கழகத்துக்கு என்னாலான அனைத்தையும் செய்யவும் முயன் றிருக்கிறேன். இப் பல்கலைக்கழகத்தை நிறுவிய என் தந்தை யாருக்கு எப்போதும் அக்கறை இருந்ததைப் போல, எனக்கும் இப் பல்கலைக் கழகத்தைப்பற்றி அக்கறை இருந்து வருகிறது என்பதைப் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

''இந்த அளவில் குடியரசுத் தலைவர் அவர்களுக்கு மீண்டும் நல்வரவைக் கூறுவதில் பெருமிதமும் மகிழ்ச்சியும் அடைந்து, பொன்விழாக் கொண்டாட்டங்களைத் தொடங்கி வைக்கும்படி அவர்களை வேண்டுகிறேன்.''

அதன்பின் அண்ணாமலைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் முனைவர். நீதிபதி. பி. எஸ். சோமசுந்தரம் அவர்கள் வழிமொழியும் வகையில் வரவேற்றார்:

''நம் பெருமதிப்பிற்குரிய நிறுவனர்க்கு நன்றி செலுத்துதற்கு இப் பொன்விழா நல்லதொரு வாய்ப்பாகும். 'ஈட்டல், காத்தல், வகுத்தல்' என்பதையே தம் குறிக்கோளாகக் கொண்டது நம் செட்டிநாட்டரசர் குடும்பம். அதனைப் பெரிதும் கடைப்பிடிப்பவர் நம் இணைவேந்தர் டாக்டர். இராசா. சர். முத்தையா செட்டியார் அவர்கள். புகழ்மிக்க தந்தையின் புகழ்மிக்க மைந்தர்.

''இந் நன்னாளில் நிறுவனரின் துணைவியாரும் நம் இணை வேந்தரின் தாயாருமான இராணி சீதை ஆச்சியை நினைவில் கொள்ளவேண்டும், அதற்காகவே இந்த அரங்கமும் அவர் பெயரில் அமைக்கப்பெற்றுள்ளது.

''50 ஆண்டுகளுக்கு முன்னர் இருபது நூறாயிர ரூபாய்களையும் 20 நூறாயிர ரூபாய் மதிப்புள்ள சொத்துக்களையும் அரசர் அண்ணா மலையார் மனமுவந்து அளித்து இப் பல்கலைக் கழகத்தை நிறுவினார். தமிழ், வடமொழி, இசை போன்ற துறைகளுடன் தொடங்கிய பல்கலைக் கழகத்தில் இன்று முப்பதுக்கு மேற்பட்ட துறைகள் உள்ளன. அறிவியல், கலையியல் துறைகளுடன் சிறப்பான,

சட்டம், மருத்துவம் போன்ற துறைகளும் பணியாற்றுகின்றன, பணியாற்ற உள்ளன.

“இப் பல்கலைக் கழகத்தில் படித்துப் பட்டம் பெற்ற அறுபதாயிரத்துக்கு மேற்பட்டவர்கள் இன்று உலக முழுவதும் பரவியுள்ளனர். அவர்களனைவரையும் இணைத்து ‘அனைத்து நாட்டு அண்ணுமலையர்கள்’ அமைப்பைத் தொடங்கவிருக்கிறோம்” என்று கூறினர்.

அடுத்துத் தமிழ்நாடு ஆளுநர் மாண்புமிகு பிரபுதாஸ் பட்வாரி அவர்கள் ஆய்வுக்கூடங்களுக்கு அடிக்கல் நாட்டிப் பேசினர்:

“பல்கலைக் கழகங்கள் பட்டங்களை வழங்கும் அமைப்புகளாக மட்டும் இருத்தல் கூடாது. வாழ்க்கையில் எவ்வாறு நடந்து கொள்ளவேண்டும் என்பதைக் கற்றுத்தரும் அமைப்புகளாகவும் அவை இருக்கவேண்டும்” என்று அவர் கூறினர்.

“முன்பெல்லாம் பல்கலைக் கழகப் பட்டம் என்பது வேலை கிடைக்கத் தேவைப்படும் என்ற நிலை இருந்தது. ஆனால், முன்னேற்றமடைந்து வரும் நம் நாட்டில் பல்கலைக்கழகங்கள் அறிவு வளர்ச்சிக்கும், கல்வி வளர்ச்சிக்கும் பயன்பட வேண்டும். இந்த வகையில் அண்ணுமலைப் பல்கலைக் கழகம் சேவை செய்து வருகிறது. கிராமப்புற மக்களுக்கு உதவிசெய்வதில் இந்தப் பல்கலைக்கழகம் சிறப்பாகப் பணியாற்றி வருகிறது” என்று ஆளுநர் மேலும் பாராட்டினர்.

“கல்வி வளர்ச்சிக்குத் தனிப்பட்ட வள்ளல்கள் தமிழ்நாட்டில் பெரும் சேவை செய்து வருகிறார்கள். தமிழகத்தில் அரசு 51 கல்லூரிகள் நடத்துகிறது. தனிப்பட்டவர்கள் 136 கல்லூரிகளை நடத்துகின்றனர். இந்த எண்ணிக்கையிலிருந்து தனிப்பட்டவர்கள் கல்வி வளர்ச்சியில் கொண்டுள்ள அக்கறை நன்கு புலனாகும்.

“மாணவர்கள் குறுகிய நோக்கமில்லாமல் நாட்டு ஒற்றுமையைக் காக்கும் எண்ணத்துடன் படிக்கவேண்டும்” என்று மேதகு ஆளுநர் அவர்கள் மேலும் கேட்டுக்கொண்டார்.

தமிழக முதல்வர் மாண்புமிகு எம்.ஜி. இராமச்சந்திரன் அவர்கள் பொன்விழாச் சிறப்புரையாற்றினர்: “தமிழக அரசு அண்ணுமலைப் பல்கலைக்கழகத்திற்கு இந்த ஆண்டு ரூ. 52 நூறுயிரம் ஒதுக்கியுள்ளது. அண்ணுமலைப் பல்கலைக்கழக வளர்ச்சியில் அரசு

எத்தகைய அக்கறை கொண்டுள்ளது என்பதற்கு இது தக்க சான்ருகும். புகழ் வாய்ந்த பல பெரியார்களை உருவாக்கித் தந்த சிறப்பு அண்ணுமலைப்பல்கலைக் கழகத்திற்கு உண்டு'' என்று அவர் கூறினுர்.

''பல்கலைக் கழகங்கள், கல்லூரிகள், பள்ளிகள் ஆகியவற்றில் அரசியல் நெடி வீசுகிறது என்றும், இதனுல் மாணவர்களின் எதிர்காலமே பாதிக்கப்பட்டு விடுமோ என அச்சம் உருவாகியிருக்கிறது என்றும், இந்த அச்சத்தைப் போக்கப் பல்கலைக்கழகங்கள் முன்வர வேண்டும்'' என்றும் முதலமைச்சர் சொன்னுர்.

இந்தியக் குடியரசுத் தலைவர் மேன்மைமிகு. நீலம் சஞ்சீவரெட்டி அவர்கள் பொன்விழா நிகழ்ச்சிகளைத் தொடங்கிவைத்துச் சொற்பொழிவாற்றினுர்:

''அறிவு சார்ந்த அடிப்படையில் இந்தியாவின் பண்பாட்டுப் பான்மையை இணக்கப்படுத்துவதிலும், தேசிய ஒற்றுமைக்குத் தடைகளாக உள்ள கூறுகளை நீக்க உதவுவதிலும் வேகம் அளிக்கும் அமைப்புகளாகப் பல்கலைக்கழகங்கள் செயல்பட வேண்டும்'' என்று குடியரசுத்தலைவர் கூறினுர்.

''தேசிய ஒருமையையும், வலிமையையும், வளத்தையும் பாதிக்கக்கூடிய வகுப்பு வாதம், வட்டார உணர்வு, மொழிவெறி ஆகியவை அண்மைக்கால ஆண்டுகளில் வளர்ந்துள்ளன. இத்தகைய அபாயகரமான பிளவுப் போக்குகளை அகற்ற நாம் அனைவரும் முயல வேண்டும். தேசிய நலன் முதன்மையானதாகக் கருதப்படவேண்டும். அது நாட்டின் பாதுகாப்பு மற்ற சிறப்புமிக்க செய்திகளையும்விட முதலிடம் பெறவேண்டும்.

''இந்தியா விடுதலை அடைந்ததற்கு முன்பாகத் தமது மாணவப் பருவத்தின்போது மாணவர்களும், மற்றவர்களும் அந்நிய ஆட்சியை அகற்ற வேண்டும் என்ற பெருவிருப்பம் கொண்டிருந்தனர். இந்தியா விடுதலை அடைந்து 32 ஆண்டுகளுக்குப் பிறகு இன்று நம் குறிக்கோள்களை அடைவதற்கு அதே உணர்வு நமக்குத் தேவைப்படுகிறது. அரசியல் சுதந்திரத்திற்குச் சமூக, பொருளாதார உள்ளடக்கத்தைத் தருவதற்கான வழிவகைகள் பற்றி இளைஞர்கள்தாம் சிந்திக்க வேண்டும்'' என்று அவர் கூறினுர்.

வருங்காலத் தலைமையை உருவாக்கும் களமாகப் பல்கலைக் கழகம் செயல்படுவது குறித்துக் குடியரசுத் தலைவர் குறிப்பிட்டார்:

''இளைஞர்கள் கல்வி பயிலுகின்றபோது, அவர்களிடையே ஆக்க பூர்வமான சிந்தனையும், எதையும் காரண காரியத் தொடர்புடன் விவாதிக்கும் போக்கும் வளர வேண்டும். இந்தக் கருத்தில் பல்கலைக்கழகங்களுக்கு அடிப்படையான பொறுப்பு உண்டு.

''கிராமப்புற மக்களுக்கு வளமான வாழ்வு அமைவதிலும் பல்கலைக் கழகங்கள் ஆற்ற வேண்டிய பணி உண்டு. மக்களின் தேவைகள், நம்பிக்கைகள், விருப்பங்கள் குறித்து நெருக்கமாகத் தொடர்பு கொண்டு பல்கலைக் கழகங்கள் பணியாற்றினுல் இது சாத்தியமாகும்.

''சென்ற முப்பதாண்டுகளில் கல்வி எல்லாத் துறைகளிலும், எல்லா மட்டங்களிலும் கணிசமாக அபிவிருத்தி அடைந்துள்ளது என்ருலும், ஒவ்வோர் ஆண்டும் கல்விச்சாலைகளிலிருந்து வெளி வரும் மருத்துவர்கள், பொறியியலாளர்கள், விஞ்ஞானிகள் முதலியோருக்குத் தக்க வேலை வாய்ப்புகளை அளிக்க இயலவில்லை. பயிற்சி பெறும் இத்தகையவர்களைப் பயன்படுத்த ஒரு வழியைக் காண்பது அவசியம்'' என்று அவர் கூறினுர்.

''கிராமப்புறப் பகுதிகளில் ஏராளமான மக்களுக்கு மருத்துவ உதவிகளும், வசதிகளும் தேவைப்படுகின்றன. அதே சமயத்தில் பல மருத்துவர்கள் வேலையில்லாமலோ அல்லது மன நிறைவான வேலையற்றவர்களாகவோ அல்லது வெளிநாட்டில் வேலை தேடுபவர்களாகவோ இருக்கிருர்கள் இது கவலைதரும் நிலவரம். நாம் திட்டமிட்டுச் செயல்படுத்தும் பொருளாதார முறையைப் பின்பற்றுகிரேம். நமது கல்வித் துறையில் உள்ள இத்தகைய இக்கட்டான நிலைகளை விரைவில் அகற்ற வேண்டும்.'' என்று கூறினுர்.

தொடக்கத்தில் அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தின் நிறுவனர் இராசா சர் அண்ணுமலைச் செட்டியாரின் உருவப்படத்தைக் குடியரசுத் தலைவர் திறந்துவைத்தார்.

உயர் ஆய்வுக் கட்டிடத்தையும், பட்ட மேற்படிப்புக் கல்விக் கட்டிடத்தையும், கம்ப்யூடர் நிலையத்தையும் அவர் திறந்து வைத்தார்.

''அண்ணுமலைப் பகலைக்கழகம் 1929-1979'' என்ற புத்தகத்தைச் செட்டிநாட்டரசர் முத்தையா செட்டியார் வெளியிட்டு அதன் ஆசிரியரான திரு. கே. எஸ். நாகராஜனைப் பாராட்டிப் பேசினுர். அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தின் 50 ஆண்டு வரலாற்றை ஆங்கிலத்தில் அழகுற எழுதிய அதன் ஆசிரியர் தொடக்க முதல் பல்கலைக்கழகத்தோடு தொடர்புடையவர் என்ருர் செட்டிநாட்டரசர். பல்கலைக் கழகப் பழைய மாணவர் மண்டபத்திற்கான அடிக்கல்லையும் அவர் நாட்டினுர்.

குடியரசுத் தலைவர் உரை நிகழ்த்திய பின் பல்கலைக் கழகப் பதிவாளர் திரு. கௌரிசங்கர் நன்றிகூறப் பொன்விழாவின் தொடக்க நிகழ்ச்சி நிறைவுற்றது.

குடியரசுத் தலைவர் விடைபெற்றுச் சென்ற பின் சென்னை உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி முனைவர் எம். எம். இசுமாயில் அவர்கள் தலைமையில் விழா தொடர்ந்தது. அவர் அண்ணாமலைப் பல்கலைக் கழக முன்னாள் துணைவேந்தர் டி. எம். நாராயணசாமிப் பிள்ளை நினைவுக் கட்டிடத்திற்கான அடிக்கல்லை நாட்டித் தலைமை யுரையை நிகழ்த்தினார்.

நிதியமைச்சர் மாண்புமிகு கி. மனோகரன் அவர்கள் பெண்கள் விடுதிக்கான அடிக்கல்லை நாட்டினார். கல்வி அமைச்சர் மாண்புமிகு செ. அரங்கநாயகம் அவர்கள் மத்திய ஆய்வுக் கூடத்தைத் திறந்துவைத்துப் பேசினார். நடுவண் அரசு கல்வித் துறைச் செயலர் திரு. பி. சபாநாயகம், ஐ. ஏ. எஸ். அவர்கள் தாமோதரன் பட்ட மேற்படிப்புக் கட்டிடத்தைத் திறந்து வைத்தார்.

பொன்விழா மலரைச் செட்டிநாட்டரசரின் திருமகனாரான முனைவர் எம். ஏ. எம். இராமசாமி அவர்கள் வெளியிட்டார்.

முற்பகல் நிகழ்ச்சிகள் அத்துடன் நிறைவுற்றன.

பல்கலைக்கழகப் பணி பாராட்டு

பொன்விழா நிகழ்ச்சியில் முதல்நாள் பிற்பகல் 2 மணி யளவில் தொடங்கிய பாராட்டுவிழாவில் இலங்கை அரசு இந்து சமய அமைச்சர், மாண்புமிகு செல்லையா இராசதுரை அவர்களும் சென்னைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் முனைவர் ஜி. ஆர். தாமோதரன், மதுரைக் காமராசர் பல்கலைக்கழகத் துணைவேந்தர் முனைவர் வ. சுப. மாணிக்கம், காந்தி கிராம கிராமியப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் உயர்திரு. ஜி. இராமச்சந்திரன் ஆகியோர் பல்கலைக் கழகத்தின் பல்துறை வளர்ச்சியைப் பாராட்டிப் பேசினர்.

இராசா சர். முத்தையா செட்டியார் அவர்கள் தமிழ் ஆராய்ச்சி நிலையத்திற்கான அடிக்கல்லை நாட்டித் தமிழ்த்துறை, தமிழ் மொழி வளர்ச்சிக்கும் ஆக்கத்திற்கும் ஆற்றியுள்ள பணிகளை விரித்துரைத்தார். துணைவேந்தர் முனைவர் பி. எஸ். சோமசுந்தரம் பொன் விழாக் கட்டிடத்திற்கான அடிக்கல் நாட்டினார்.

பொன்விழாச் சிறப்புப் பட்டமளிப்பு விழா

பல்கலைக் கழகங்கள் வெள்ளிவிழா, பொன்விழா போன்ற விழாக்களின்போது நாட்டுக்கும் மொழிக்கும் பாடுபட்டவர்கட்கும்

சிறந்த பல்துறை அறிஞர்கட்கும் சிறப்பு முனைவர் பட்டம் கொடுத்துப் பாராட்டுவது வழக்கம். அம் முறையில் அண்ணுமலைப் பல்கலைக்கழகப் பொன்விழாவின்போது அறிஞர்கள் பதினைவர்க்கு டி.லிட்; எல்.எல்.டி; டி.எஸ்.ஸி என்ற சிறப்புப் பட்டங்கள் வழங்கப்பெற்றன. இந் நிகழ்ச்சி 6-12-79 பிற்பகல் 4 மணியளவில் இராணி சீதை அரங்கத்தில் நடைபெற்றது.

இந்திய தேசிய காங்கிரசின் முன்னுள் தலைவரும் அரசியல் தலைவருமான திரு. ஜே. பி. கிருபளானி அவர்கட்கும், மற்றும் சிலம்புச் செல்வர் முனைவர் ம. பொ. சிவஞானம், முனைவர் வ. சுப. மாணிக்கம், திரு. எம், ஏ. எம். இராமசாமி, திரு. வைத்தி சுப்பிர மணிய ஐயர், முனைவர் தெ. பொ. மீனுட்சிசுந்தரனுர், முனைவர் டி. எம். பி. மகாதேவன், முனைவர் எஸ், ஜி. மணவாளராமானுசம், முனைவர் எஸ். பி. ஆதிநாராயணு, இசைப் பேரறிஞர் மதுரை சோமு ஆகியோருக்கும் டி. லிட். பட்டம் வழங்கப்பெற்றது.

உச்சநீதிமன்ற நீதிபதி. வி. ஆர். கிருஷ்ணய்யர், தமிழக உயர்நீதி மன்றத் தலைமை நீதிபதி உயர்திரு. எம். எம். இசு மாயில், நீதிபதி எஸ், மகராசன், அண்ணுமலைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் நீதிபதி பி. எஸ். சோமசுந்தரம் ஆகியோருக்கு, 'எல்.எல்.டி' பட்டமும், சென்னைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் திரு. ஜி. ஆர். தாமோதரனுர்க்கு 'டி.எஸ்.ஸி' பட்டமும் வழங்கப் பெற்றன.

அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தின் வேந்தர் என்ற முறை யில் தமிழக ஆளுநர் மேதகு பிரபுதாஸ் பட்வாரி அவர்கள் இச் சிறப்புப் பட்டமளிப்பு விழாவிற்குத் தலைமை தாங்கிப் பட்டங்களை வழங்கிப் பாராட்டி மகிழ்ந்தார். இணைவேந்தர் செட்டிநாட்டரசர் முத்தையா செட்டியார் விழாவில் பங்கேற்று இறும்பூதெய்தினர்.

பழைய மாணவர் பாராட்டுவிழா

பொன்விழாவின் இரண்டாவது நாள் விழா காலை 9 மணி யளவில் பழைய மாணவர்கள் தங்கள் பசுமை நினைவுகளை எடுத்துக் கூறிப் பல்கலைக் கழகத்தை நிறுவியவர்களுக்கும் பழைய ஆசிரியர் கட்கும் நன்றி கூறும் விழாவாக அமைந்தது.

இணைவேந்தர் முத்தையா செட்டியார் பழைய மாணவர்களை வரவேற்றுப் பேசுகையில் அப் பல்கலைக் கழகத்தில் பயின்ற மாண

வர்கள், உலகின் பல பகுதிகளிலும் பல உயர்ந்த பொறுப்புக்களில் இருப்பதையும் எடுத்துக் கூறினர்.

விழாவிற்குப் பழைய மாணவரும் இந்திய உச்சநீதி மன்றத்தின் நீதிபதியுமான முனைவர் வி. ஆர். கிருஷ்ணையர் தலைமை தாங்கினர். அவருடைய ஆங்கில உரை சொற்செறிவும் பொருட் செறிவும் மிக்கு, மிக உயர்ந்த கவிதை நடையில் அமைந்திருந்தது.

தொடர்ந்து முனைவர் வைத்தி சுப்பிரமணிய ஐயர் பேசிய பின் முனைவர் நீதிபதி மகராசன் அவர்கள் தலைமைப் பொறுப்பேற்றுத் தம் பழைய நாள் நினைவுகளை அழகுற எடுத்துக் கூறினர்.

மற்றும் இராம. அரங்கண்ணல், 'விடுதலை' ஆசிரியர் கி. வீரமணி, தமிழக அரசுக் காவல் துறைத் தலைவர் திரு. பொன். பரமகுரு ஐ. பி எஸ். ஆகியோர் உரை நிகழ்த்தினர்

துணைவேந்தர் நன்றிகூற நிகழ்ச்சி இனிது முடிந்தது.

பொன் விழாக் கவியரங்கம்

இரண்டாம் நாள் மாலை 5 மணியளவில் முனைவர் நீதிபதி எஸ். மகராசன் அவர்கள் தலைமையில் பொன்விழாக் கவியரங்கம் நிகழ்ந்தது. இவ் விழாவில் 'அமுத சுரபி' நடத்திய பொன்விழாக் கவிதைப் போட்டியில் பரிசு பெற்ற இரு மாணவர்கட்குத் தங்க, வெள்ளிப் பதக்கங்களைத் துணைவேந்தர் வழங்கினர்.

கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளையின் பேரர் திரு. குற்றாலம் பாவேந்தரின் மகன் பா. க. மன்னர்மன்னன், முனைவர் உளுந்தூர்ப் பேட்டை சண்முகம், பேராசிரியர் சிற்பி பாலசுப்பிரமணியம், பேராசிரியர் அப்துல் ரகுமான் ஆகியோர் அண்ணாமலையரசரின் பல்வகைப் பண்புகளைப் பாராட்டி மரபுக் கவிதைகளையும் புதுக் கவிதைகளையும் அரங்கேற்றினர்.

செட்டிநாட்டரசர்க்குப் பாராட்டு

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் இணைவேந்தராகத் திகழும் செட்டிநாட்டரசர் மு. அ. முத்தையா செட்டியார் அவர்கள் தம் தந்தையாரின் வழிநின்று அவரைப் போலவே அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தைப் புரந்து வருவதைப் பாராட்டிப் பேரறிஞர் பலர் பேசினர்.

திரு குமரி அனந்தன், பேராசிரியர் மோனிகா டேவிட், திரு. டி. ஏ. வி. இராகவன், திரு. ஆர். கலியபெருமாள், திரு. சிங்காரம் முதலியோர் பாராட்டுரை ஆற்றினர். பலர் வாழ்த்திதழ்கள் படித்தளித்தனர்.

மாணவர் விழா

பொன்விழாவின் மூன்ருவது நாள் பல்கலைக்கழகத்தில் தற்போது பயிலும் மாணவர்கள் பங்கேற்றனர். சொற்பொழிவுகள், கவியரங்கம், கலை நிகழ்ச்சிகள் முதலியவை நடைபெற்றன.

மூன்று நாள் விழாக்களிலும் மாணவர்கள் அமைதியுடன் பங்கேற்று விழாவைச் சிறப்பித்தனர். அவர்களுடைய அமைதியையும் நற்பணியையும் கண்டு மகிழ்ந்து தமிழக ஆளுநர் பிரபுதாஸ் பட்வாரி அவர்கள் தனிப்பட்ட முறையில் பாராட்டு தெரிவித்தார்.

கழகப் புத்தகக் காட்சி

இப் பொன்விழாவில் சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகத்தின் புத்தகக் காட்சி யொன்று அமைக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. இக் காட்சியினைக் கண்ட அறிஞர்கள் வெளியிட்ட கருத்துரைகள் வருமாறு :

''கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்தாகக் காட்சிகள் அமைந்திருக்கின்றன. சரஸ்வதி நூலக வெளியீடுகளும் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழக வெளியீடுகளும்—தமிழ்த்துறை வளர்ச்சியில் எத்துணை அளவில் புதிய புதிய நூல்கள் கிடைக்கின்றன என்பதை அறிவிக்கின்றன.''

ரம்போலோ மாஸ்கரேனஸ்.

''சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினர் தமிழகத்தின் விலை மதிப்பற்ற சொத்தினையே பதிப்பித்துப் புகழ்பெற்றவர்கள். அவர்கள் மொழிக்குச் செய்யும் சேவை உலகு தமிழ் மயமாக ஆவதற்குச் செய்யும் சேவையாகும்.''

நலங்கிள்ளி.

அன்னை அண்ணுமலை

[திரு. சு. சுவாமி ஐயா, எம்.ஓ.எல்.]

அன்னையவள் கடந்துவந்த ஆண்டுகளோ
ஐந்துபத்தே ஆனாலும் அழகுகுன்ருள்
முன்னையவள் பெற்றனவோ முப்பதுவாம்
முடியாத பேற்றினுள் முதிர்வில்ஒன்ருய்ப்
பின்னையவள் பெற்றனவும் பேணுகின்ருள்
பெட்புடனே முன்தவமும் இளையசெல்வம்
அன்புடனே அஞ்சல்வழி அரியகல்வி
அகன்றுநின்றே எங்கணுமே அங்கைகொட்டி, (1)

ஆண்டினில் முதியவரும் அணைத்திடவே
அன்புடனே தாவுகின்ருள் அருமைகாட்டிப்
பூண்டிடும் பல்கலைகள் பொலிந்திடுவாள்
பொற்புடையாள் என்றுமே புகழும்கொள்வாள்
நீண்டுநின்று சான்ருேரை நேர்ந்திடுவாள்
நிழல்தருவாய் நின்றிடுவாள் நிகரொன்றில்லாள்
தாண்டுகின்ற ஐம்பதினில் தனிப்பேற்ருள்
தந்திடுவாள் மருத்துவத்தைத் தப்பாதின்றே. (2)

அன்பினண்ணு மலையரசர் அரியசெல்வி
அன்னவளே தான்கொண்டாள் அத்தன்பேரே
மன்னனவன் தன்மகட்கு மகட்கொடையாய்
மாண்புடனே இருபத்து லக்கம்மேலும்
அன்புடனே உவந்தளித்த அறக்கொடையே
ஆர்கின்ற சீதனமாய்ப் பெற்றுக்கொண்டாள்
இன்புறவே இணைவேந்தர் இளையநங்கை
இன்றுமவள் பிறந்தகத்துச் சீரைப்போற்றும். (3)

முத்தான துறைகளாம் முப்பத்து
மூன்றுடனே விரிந்தின்று முதிர்ந்துதோன்றும்
வித்தான ஆலதனுள் விரவியுள்ளே
விழுதுடனே நிழல்தருமால் வியப்பயாண்டும்
சித்தான தத்துவமாய்ச் சீருடனே
சிதம்பரத்தே ஆடுகின்ற சிவனேபோன்று
நித்தியமாய் மீனுட்சி நின்றிடுவாள்
நீளுலகு வாழ்ந்திடவே நெடியகாலம். (4)

முனைவர் (டாக்டர்) ராஜா சர் முத்தைய செட்டியார் அவர்களுக்கு

வாழ்த்து மலர்

[புலவர் : சோம. இளவரசு]

மழைகொடுக்கும் கடல்கொடுக்கும் மண்கொடுக்கும்
மனிதர்களில் கொடைகொடுக்கும் மாட்சிவேறு
விழைவதற்கு யாருமில்லை என்றுதேடி
விரைவாக அணைந்தஅண்ணா மலையார்நாளும்
இழைத்தபெரும் தவத்தாலே எமக்குவாய்த்த
எழிலரசே! இந்நாட்டில் கல்விப்பச்சை
தழைப்பதற்கே வாழ்கின்ற ஞாயிருகத்
தகைசான்ற முத்தையவேள் வேந்தேவாழி! (1)

இந்நிலையம் தோற்றமுறும் காலப்போதில்
இளங்கதிராய் எத்துணையோ உதவிசெய்தாய்!
பின்னரிந்தக் கலைக்கழகம் வளர்ந்தகாலை
பெரியவிழா வெள்ளிவிழா நடத்திவைத்தாய்!
இன்றைக்கோ பொன்விழா நடத்துகின்றாய்!
எல்லாமுன் திருக்கரத்தின் மாட்சியாகும்!
மன்னருளால் நூற்றாண்டு விழாவும்உன்கை
மகிழ்வாகச் செய்துயர நீடுவாழி! (2)

எப்போது பிறந்தவளென் றறியவொண்ணா
எழில்மொழியைக் காக்கின்ற அருமைச்செல்வா!
முப்போதும் தமிழகத்தார் வாழ்வைஎண்ணும்
முழுநிலவே! பவளவிழாக் கண்டநல்லோய்!
இப்போதும் உமைப்பார்த்தால் இருபத்தைந்தே
எனுமாறு பழுத்தநறும் தொண்டேசெய்வாய்!
தப்பேதும் நினைக்காத தந்தைஎன்போம்!
தமிழ்த்தாயோ மூத்தமகன் நீயேஎன்பாள். (3)

கோடிகளின் தலைவன்நீ! எங்கள்உள்ளக்
கோயிலுக்கோர் தெய்வம்நீ! தில்லைமண்ணின்
நாடிக்கு நீயன்றி நலமேஇல்லை!
நன்னீரும் உன்குலத்தார் தந்தசெல்வம்!
தேடிப்போய்க் கல்விநலம் வாங்கமாட்டாத்
தில்லைநகர் மக்கட்குத் தொடக்கம்தொட்டுப்
பீடுபெறு கல்விவரை தந்தஉங்கள்
பெருமைமிக வாழ்த்துகின்றோம்! வணங்குகின்றோம்! (4)

———

முத்தமிழ்க் காவலருக்கு முனைவர் பட்டம்

மதுரைக் காமராசர் பல்கலைக் கழகம் 29—11—79 இல் ஒரு மாண்பினை வரித்துக்கொண்டது. அஃது அறிஞர் திரு. கி. ஆ. பெ. விசுவநாதருக்கு முனைவர் (டாக்டர்) பட்டம் வழங்கியதேயாகும்.

அறிஞர் கி. ஆ. பெ. வி. அவர்கள் நாடறிந்த நல்லறிவாளர். நயத்தகு நாவீறர்; 'முத்தமிழ்க் காவலர்' முனைப்புடைய தொண்டர். தமிழகப் புலவர் குழு அமைப்பாளர்; தமிழ் நாட்டின் மூலை முடுக்கெல்லாம் தமிழ் முழக்கம் செய்துவரும் அரிமா!

ஆயிரம் பிறை கண்ட அறிஞராம் இவர் 10-11-1899 இல் பிறந்தார். அறிவுக்கு உணவு, தமிழ் மருந்துகள் இன்னபிற அரிய ஆராய்ச்சி நூல்களைப் படைத்துள்ளார். முத்தமிழ்க் காவலராம் இவர் 'தமிழர் நாடு' என்னும் திங்கள் இதழினைச் சிறப்புற நடத்தி வந்தார்.

அறிஞர் கி. ஆ. பெ. வி. அவர்கள் நாடு, மொழி, இனப் பற்றாளர். இவற்றின் முன்னேற்றமே தமது மூச்சாகக் கொண்டு உழைக்கும் முழுத்தொண்டர். இவர்தம் பேராண்மை இந்தி எதிர்ப்பின்போதும், வானொலிப் பெயர் மாற்றப் போராட்டத்தின் போதும் நன்கனம் விளங்கிற்று.

''இந்திக் கிளர்ச்சி வீறிட்டது; நாயக்கர் சிறை புகுந்தார்; அவ்வேளையில் அக் கிளர்ச்சியை விசுவநாதன் நடத்திய முறையும் ஒழுங்கும் நேர்மையும் திறமும் என்னை வியக்கச் செய்தன. 'விசுவநாதன் ஓர் இயக்கத்துக்குத் தலைமை பூண்டு அதை நடத்தும் ஆற்றலுடையவர்' என்பது நாட்டுக்குச் செவ்வனே புலப்பட்டது. அவரது ஒழுங்கும் நேர்மையும் திறமும் என் வாழ்த்துக் குரியன'' என்று தமிழ்த் தென்றல் திரு. வி. க. அவர்களால் பாராட்டப்பெற்ற பெருமையர் கி. ஆ. பெ. வி. இப் பெருந்தகையாளர் தமிழகப் புலவர் குழுவினை அமைத்துப் பணியாற்றத் துவங்கிய காலை, புலவர் குழு கட்டிடக் கூடத்தில் பழம்பெரும் புலவர்களின் திருவுருவப் படங்களை அமைக்க விரும்பி நம் கழகம் சேர்த்துவைத்திருந்த அப் படங்களின் மூலநிழற்படிகளை (Negatives) வாங்கிச் சென்றதும் ஈண்டு நினைவுகூரத்தக்கது.

இவர்தம் நற்றமிழ்த் தொண்டை மதித்து மதுரைக் காமராசர் பல்கலைக் கழகம் முனைவர் பட்டம் வழங்கிய பெருமையை நினைந்து பெருமிதப்படுகிறோம். முத்தமிழ்க் காவலரவர்கள் நிறைபல ஆண்டுகள் வாழ்ந்து நல்ல பல தொண்டுகள் புரிய நெஞ்சார வாழ்த்துகிறோம்.

———

முத்தமிழ்க் காவலருக்கு முனைவர் பட்டம்
(29—11—'79)



தமிழக அரசின் கல்வி அமைச்சரும், மதுரைக் காமராசர்
பல்கலைக் கழக இணைவேந்தருமான மாண்புமிகு
செ. அரங்கநாயகம் அவர்கள் முத்தமிழ்க் காவலர்
கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கட்கு முனைவர் பட்டம் வழங்குதல்



மதுரைக் காமராசர் பல்கலைக் கழகத்
துணைவேந்தர்
முனைவர் வ. சுப. மாணிக்கம்

மூன்றாவது
சென்னைப் புத்தகச் சந்தை
1—12—79 முதல் 10—12—79 வரை



சென்னை, அண்ணாசாலையிலுள்ள கலைக்கல்லூரி வளாவில் இவ்வாண்டு நடைபெற்ற புத்தகச் சந்தையில் இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் ஐம்பதிற்கு மேற்பட்ட புத்தக வணிகர்களும் பதிப்பாளர்களும் கலந்துகொண்டனர்.

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகமும் ஒரு விற்பனை அரங்கு (Stall) அமைத்து அரிய பல நூல்களைக் காட்சிக்கும் விற்பனைக்கும் ஏற்பாடு செய்திருந்தது. சந்தை குறுகிய காலமே நடைபெற்றாலும் நாடோறும் எண்ணற்ற நூல் அன்பர்கள் வருகை தந்தனர். இவ்வாண்டு பன்னாட்டுக் குழந்தைகள் ஆண்டான (International Year of the Child) மையால் சின்னஞ்சிறு சிறார்களும் தத்தம் பெற்றோருடன் ஆர்வத்துடன் சந்தைக்கு வருகைதந்து தங்கட்கு வேண்டிய நூல்களை வாங்கிச் சென்றது கண்ணுக்கினிய காட்சியாக இருந்தது.

இவ் ஆண்டில் 50,000க்கு மேற்பட்ட பேர்கள் சந்தையினைப் பார்வையிட்டனர்.

முத்தமிழ்க் காவலர், கலைமாமணி கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள் முனைவர் (டாக்டர்) பட்டம் பெற்றமைக்குப் பாராட்டு வாழ்த்து

[தமிழகப் புலவர் குழு உறுப்பினர், பேராசிரியர், பைந்தமிழ்ப்பாவலர் அ. கி. பரந்தாமனார் எம்.ஏ., சென்னை.]

இந் நாட்டில் தமக்கென வருவாய் தேடிக்கொண்டு, தம் குடும்பத்தைப் புறக்கணிக்காது, பணப் பேரவா இன்றி, ஒழுக்கமே விழுப்பமாகக் கொண்டு தூய வாழ்க்கையோடு அமிழ்தினும் இனிய தமிழ்மொழிக்கும் தொன்மைமிக்க தமிழ்நாட்டுக்கும், பல்லாற்ருனும் நல்ல முறையில் தொண்டாற்றும் நன்மக்கள் மிகமிகச் சிலரேயாவர். அச் சிலருள் புகையிலைப் பெரு வாணிகம் நடத்திக் கொண்டு ஒழுக்கமுடன் தமிழ்ப்பற்றும், மக்கள் முன்னேற்ற எண்ணமும் கொண்டு எழுத்தாலும் அரிய நாவன்மை மிக்க பேச்சாலும் தொண்டாற்றும் திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் ஒருவர் என்பது நாமும் அறிவோம்; நாடும் அறியும்; ஏறக்குறைய 45 ஆண்டுகளுக்கு முன்பு வித்துவான் திரு அமிர்த சுந்தரனார் திரு. கி. ஆ. பெ. வி. அவர்களைப் பற்றிப் பாடிய பாடல் அன்னார் மணிவிழா வாழ்த்துரை நூலில் வெளியிடப்பட்டிருக்கிறது. அப் புலவர் கி. ஆ. பெ. வி. அவர்களை அப்படியே படம் பிடித்துக் காட்டியுள்ளார். அப் பாட்டின் அடிகள் கீழ் வருமாறு :

''இளமையும் அழகும் இயைந்தநற் பண்பும்
கல்வியும் செல்வமும் கவின்பெறும் புகழும்
அரசியல் அறிவும் அருந்தமிழ்த் தொண்டும்
எழுத்து வன்மையும் இன்சொல் திறமையும்
ஒழுக்க முடைமையும் ஒருசொல் காத்தலும்
உழவுத் தொழிலும் உயர்ந்த வணிகமும்
ஆக்க வேலைகள் அமைத்துச் செய்தலும்
அன்னியர் புரியும் சூழ்ச்சி யறிதலும்
எல்லாப் பண்பும் ஒன்ருய் அமைந்த
நல்லான் விசுவ நாதன் ஒருவனே''

மேற்கண்ட ஆசிரியப்பாவில் இரத்தினச் சுருக்கமாய்க் கூறிய அனைத்தும் உண்மையேயன்றி வெறும் புகழ்ச்சியன்று. அன்று

பாடியது இன்றும் பொருந்தும். இன்றும் கி. ஆ. பெ. வி. 80 ஆண்டு இளைஞராகவே திகழ்கிறார். ஒரே ஒரு மாற்றம் பெற்றுள்ளார். இப்போது அவர் சில ஆண்டுகளாகப் புகையிலை வாணிபம் செய்வதை நிறுத்திவிட்டார். அதனால் முழுநேரத்தையும் தொண்டிலேயே ஈடுபடுத்தி வருகிறார்.

திரு. கி. ஆ. பெ. வி. அவர்கள் குடும்பம் பெரிது. இவர் தம் தந்தையார் கி. ஆ. பெரியண்ணப்பிள்ளை. தாயார் சுப்பம்மாள். இவர் பிறந்தநாள் விகாரி ஆண்டு ஐப்பசித் திங்கள் 26ஆம் நாள் (10-11-1899) இவர்தம் மனைவியார் இவரோடு ஒத்துழைக்கும் ஒப்பரியபண்புமிக்க பெண்மணி சுப்புலட்சுமி அம்மையார். இவருக்கு ஆண்மக்கள் மூவரும் பெண்மக்கள் ஐவரும் உளர்.

இவரது பள்ளிக்கூடம் கடையிலிருந்த திண்ணையே. இவருக்குத் தமிழ் எழுத்துக்களை மணலில் எழுதிக் கற்பித்தவர் அறிஞர் முத்துசாமிக் கோனார். இதற்கு மேல் கற்றுக் கொண்டவை அனைத்தும் இவர்தம் தந்தையாரிடமேயாகும். மேலும் கற்க ஆர்வம் ஏற்பட்டபோது நாவலர் வேங்கடசாமி நாட்டார், மறைமலையடிகள், திரு. வி. க. போன்றவர்களிடம் நெருங்கிப் பழகித் தமிழறிவு பெற்றார். திருக்குறளை எழுத் தெண்ணிப் படித்தவர் இவர். எனவே, இவர் சமூகம், வாணிகம், கல்வி, கைத்தொழில் இவற்றில் ஈடுபட்டிருப்பதோடு எழுத்து, பேச்சு முதலியவற்றிலும் சிறந்து ஏறக்குறைய அறுபதாண்டுகளாய்ப் பேரும் புகழும் சீரும் சிறப்பும் பெற்று விளங்குகிறார்.

இவர்தம் மணிவிழா வாழ்த்துரை நூலில் நாட்டுத் தலைவர்களும் பேரறிஞர் பெருமக்களும் அன்பர்களும் பாராட்டி யுள்ளார்கள். இந்திய நாட்டின் மாபெருந் தலைவராய்த் திகழ்ந்து மறைந்த தமிழகச் செம்மல் காமராசர் இவரைப் பற்றிக் கூறுகையில் "திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் நகைச்சுவையோடு மக்கள் மனம் கவரும் வகையில் பேசும் ஆற்றல் படைத்தவர்; தமிழ்மொழியின் ஆக்கம் கருதி மனந்தளராது உழைத்துவருபவர்" என்று குறிப்பிட்டிருக்கிறார். மதுரைப் பசுமலைச்செல்வர் முனைவர் ச. சோமசுந்தர பாரதியார் இவரைத் தமிழ்ப்புலவரென்றே பாராட்டியுள்ளார். காலஞ்சென்ற தமிழ்ப்பேராசிரியர் சிதம்பரநாதச் செட்டியார், "திருக்குறளைப் பாமரரும் எளிதில் அறிந்து துய்க்கும் வண்ணம் செய்துள்ள தொண்டுகள் மிகப்பல, என்று குறிப்பிட்டிருப்பதோடு முத்தமிழின் வளர்ச்சிக்காகவும் உழைத்து வருபவர்" என்று இவருக்குப் புகழ்மாலை சூட்டியுள்ளார்.

கி. ஆ. பெ. வி. அவர்கள் தமது மணி விழாவில் தமிழ்மொழி, தமிழ்இசை, நாடகம், தமிழ்மருத்துவம், தமிழகம் ஆகிய ஐந்தும் உலகில் உயர்ந்த இடத்திலிருந்து விளங்குதல் வேண்டும் என்று கருதிப் பல்துறையறிஞர் நாற்பத்தொன்பதின்மர் அடங்கிய தமிழகப்புலவர் குழுவை மதுரைப் பசுமலை ச. சோ. பாரதியார் இல்லத்தில் அவரது தலைமையில் 1958இல் நிறுவி, இருபதாண்டு களாய்க் கட்டிக்காத்துப் பேணிவருகிறார்கள். இக் குழு தமிழக மாவட்ட நகரங்களிலும், திருப்பதி, பெங்களூர், பம்பாய், தில்லி ஆகியவற்றிலும் உலாச் சென்றது. ஆங்காங்குள்ள மக்களுக்குத் தமிழ், தமிழ்நாடு, தமிழ்க்கலை முதலியவற்றைப் பற்றிப் புலவர் பெரு மக்கள் சொற்பொழிவாற்றி மகிழ்வித்தார்கள்.

இப்போது இக் குழுவின் தலைமையலுவலகம் உள்ள திருச்சி நகரில் ஆண்டுக்கு இருமுறை கலைமகள் வாரத்தில் ஒரு முறையும், தமிழ்ப் புத்தாண்டு வாரத்தில் ஒரு முறையும் கூடுகிறது. இக் குழுவுக்கென அமைந்துள்ள மாளிகையில், நூல்நிலையமும் தங்கும் அறைகளும் உண்டு. இதற்குரிய சொத்து இப்போது ஏறக்குறைய இரண்டு நூறாயிரம் ரூபா பெறுமானது ஆகும்.

இப் பெருந்தொகை திரு. கி. ஆ. பெ. வி. அவர்களே தம் சொற்பொழிவால் ஈட்டியது என்பது குறிப்பிடத்தக்கது. இச் சொத்தின் வருவாயிலிருந்து உறுப்பினர்களுக்குப் போக்குவரத்துச் செலவுத்தொகை கொடுக்கப்படுகிறது. புலவர் குழுவின் 47 ஆவது கூட்டம் 1979 செப்டெம்பர் 22, 23 இல் முறையே நாகர்கோயி லிலும், பாளையங் கோட்டையிலும் நடைபெற்றது.

முத்தமிழ்க்காவலர் வேறு பெரிய நிறுவனங்களிலும் தலைவ ராக இருந்து வருகிறார். இவ்வளவு வேலைகளுக்கிடையே எழுத்துப்பணியும் செய்துவருகிறார். இவர் இயற்றிய நூல்கள் வருமாறு: 1. தமிழ்ச்செல்வம் 2. வள்ளுவர் உள்ளம் 3. வள்ளு வரும் குறளும் 4. வானொலியிலே 5. திருக்குறள் புதைபொருள் 6. எண்ணக்குவியல் 7 ஐந்து செல்வங்கள் 8. தமிழ் மருத்துவம் 9. மும்மணிகள் 10. அறிவுக்கு உணவு என்பன. இவருடைய பேச்சிலும் கட்டுரையிலும் எளிமை தெளிவு கருத்துச் செறிவு ஆகியவை மிளிரும்.

இக் காவலர் அவர்களின் நாடகத்தொண்டுக்காக, சென்னை இயலிசை நாடக மன்றத்தினர் 'கலைமாமணி' என்னும் பட்டமளித் துச் சிறப்பித்தனர். மதுரைக் காமராசர் பல்கலைக்கழகம் நாட் டுக்கும் மொழிக்கும் ஏறக்குறைய அறுபது ஆண்டுகளாய் இவர்

செய்துவரும் நற்றொண்டுகளை மதித்து, இம் மக்கள் தலைவருக்கு 29—11—1979 இல் முனைவர் (டாக்டர்) பட்டமளித்துப் பாராட்டியது. எத்துறைச் செயலினும் அத்துறைதனில் மாண்புற விளங்கும் கலைமாமணி அவர்களை வாழ்த்திப் பாராட்டுகிறோம். அதே வேளையில் அவருக்குச் சிறப்புச்செய்த மதுரைக்காமராசர் பல்கலைக் கழகத்தையும் பாராட்டுகிறோம்.

வாழிவாழி முனைவர்பட்டம் பெற்றோய்வாழி வாழியே
வாழிவாழி எங்கள்விசுவ நாதம்வாழி வாழியே
வாழிவாழி எண்பதாண்டின் இளைஞவாழி வாழியே
வாழிவாழி பொன்னியாற்றின் மணலின்நீடு வாழியே!

———

கடவுள் கொள்கையே தமிழ்க்கொள்கை

தமிழ் மொழியின் கொள்கையை அறிவதற்கு அந்தத் தமிழ்மொழிச் சொற்களே சான்றாகப் போதும். இரண்டு சொற்களை மட்டும் இங்கே காணலாம்.

1. 'உண்மை' என்பது தமிழ்மொழிச் சொல். அதன்பகுதி 'உள்' என்பது. புறத்தே பார்ப்பதை விட உள்ளே பார்ப்பது தமிழ்மொழிக்கு உரியதென்று இதனால் தெரிகிறது. உள்ளே பார்ப்பதென்பது எவ்வளவு உள்ளுக்கும் செல்லும்; ஆதலால் உயிர்க்குயிராகிய கடவுளை இச் சொல் உணர்த்தும்; மொத்தத்தில் நுட்பமாகப் பார்ப்பது (சூக்குமமாக) 'உண்மை' எனப்படும்.

2. 'அவனி' என்பது மற்றொரு பெயர். 'அ' என்பது இதன்பகுதி. உலகத்தை 'அவனி' என்று சொல்வதுண்டு. அவன் (அக்கடவுள்) உலகெங்கும் கலந்திருக்கிறான் என்னும் கருத்து இதிலிருந்து தெரிகிறது. 'அ' என்பது அருளியலை உணர்த்துவது. அறிந்த வெளிப்படையான சுட்டுச்சொல். 'அவ்வுலகம்' எனத் திருக்குறளில் வருவதும் 'அந்நெறி' எனத் திருமந்திரத்தில் வருவதும், இங்கே கருதிப் பார்க்கத்தக்கவை. ஆதலால் 'அவன்' என்பவன் இங்கே கடவுள்.

இவற்றிலிருந்து தமிழ்மொழிக் கொள்கை 'கடவுட் கொள்கை' என்று நன்கு தெரிகிறது.

—அருட்டிரு அழகரடிகள்

முனைவர் (டாக்டர்) முத்தமிழ்க் காவலர்
கி. ஆ. பெ. விசுவநாதம்*

எண்பத்தோராண்டு இளைஞராகச் செம்மாந்திருக்கும் திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் 1899 நவம்பர் 10ஆம் நாள் திருச்சிராப்பள்ளியில் வணிகக்குடும்பத்தில் தமிழ் தழைத்தோங்கப் பிறந்தார். பிறந்தநாள் தொட்டுத் தமிழெண்ணத்தோடே வளர்ப்புப் பெற்றார்.

மறைத்திரு மறைமலையடிகளார், நாவலர் சோமசுந்தர பாரதியார் முதலிய புலமைத் தமிழறிஞர்களோடு இடையரு உறவும் உணர்ச்சியும் கொண்டு தமிழிலக்கியங்களை ஆர்வமொடு கற்றார். தவத்திரு. வாலையானந்த அடிகளிடம் சைவசித்தாந்தத் தெளிவு பெற்றார். திரு. மாசிலாமணி முதலியாரிடம் நாட்டு மருத்துவக் கலையைக் கேட்டறிந்தார். இவற்றோடு இசை நாடகக் கலையறிவுகளையும் பெருக்கிக்கொண்டார். அதனால் **முத்தமிழ்க் காவலர்** என்ற பட்டத்தினைத் திருச்சிராப்பள்ளித் தமிழ்ச்சங்கம் இவருக்கு வழங்கிச் சிறப்பித்தது. சித்த மருத்துவ மாநாடு **சித்த மருத்துவ சிகாமணி** என்ற பட்டத்தினை அளித்தது; தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் சென்ற ஆண்டு **கலைமாமணி** என்ற பட்டத்தினை வழங்கிப் பெருமை சாற்றியது.

திரு. விசுவநாதம் தம் செவ்விளமைக் காலத்து அரசியலில் வேணவாக் கொண்டிருந்தவர் எனினும் பின்னர் அவ்வவாவினைத் தேய்பிறையாக்கிக்கொண்டு சாதியொழிப்பு, தீண்டாமையொழிப்பு, அறியாமையொழிப்பு, பெண்டிர் முன்னேற்றம், கலப்புமணம், தன் மானவியக்கம் என்ற சீர்திருத்தத் தடங்களில் ஏறுபோல் நடந்து பொதுத்தொண்டில் வீறெய்தினார்.

'தமிழர் நாடு' இதழ் நடத்தியும் தமிழர் கழகம் கண்டும் திருச்சிராப்பள்ளி நகரக் கலைக்கழகத்தின் தலைவராக முத்தமிழ் வளர்த்தும், தமிழிசை இயக்கத்தின் பொதுச் செயலாளராகத் தமிழிசை நங்கைக்குப் புத்துயிர் ஊட்டியும், தமிழ்ப் படைத்தலை வராய்ப் போராட்டம் பல கண்டு இடையூறு விலக்கித் தமிழைக் காத்து நிறுத்தியும், சிறந்த 49 தமிழறிஞர் ஒருங்கு உவப்பக் கூடி

---

*பட்டமளிப்பு விழாவில் மதுரைப் பல்கலைக் கழகம் வழங்கிய தகுதியுரைச் சுருக்கம்.

ஆராயும் தமிழகப் புலவர்குழு அமைத்தும், முத்தமிழ்க் காவலர் கி. ஆ. பெ. விசுவநாதம் ஏற்றிவைத்த தமிழ்விளக்கு நாடறிந்த புகழ்விளக்காகும்.

திரு விசுவநாதம் தமிழ் இலக்கியத்திற்கும் தமிழ் வளர்ச்சிக்கும் செய்திருக்கும் தொண்டுவகை பலப்பல. தமிழகத்தும் இந்தியப் பிற மாநிலங்களிலும் அயல்நாடுகளிலும் இவர் ஆற்றிய இலக்கியப் பொழிவுகள் எழுச்சியான ஆழ்ந்த தமிழறிவை இளையோரிடத்தும் எளியோரிடத்தும் விதைத்துள்ளன. இவர்தம் தமிழ்மொழிநடை சிறு சிறு அடுக்காய், தித்திக்கும் செஞ்சொல்லாய், ஏற்ற இறக்கம் வாய்ந்த இசைவனப்பாய், புள்ளிக்கணக்கினதாய், உள்ளம் பாய்ந்து உணர்வூட்டும் ஆண்மையதாய் இயங்கும் தன்மைத்து.

திரு. விசுவநாதம் எழுதிய பல தமிழ் நூல்கள் தனியமைப்பு உடையவை. வள்ளுவர் உள்ளம், திருக்குறட் புதைபொருள், வள்ளுவரும் குறளும், திருக்குறட் கட்டுரைகள் என்பவை செம்மாந்த பெருமித நடைதழுவிய ஆய்வுகளாகும். நல்வாழ்வுக்கு வழி, மும்மணிகள், நான்மணிகள் என்பவை நீதி மூலங்களைத் தக்க உரைநடையில் விளக்குபவை. ஐந்து செல்வங்கள், ஆறு செல்வங்கள், எண்ணக்குவியல்கள் என்ற நூல்கள் இளையரையும் சமுதாயத்தையும் ஒழுக்க வழிப்படுத்தும் புதுமுறை அறப் பனுவல்கள். இவர் அரிதின் முயன்று எழுதிய 'அறிவுக்கு உணவு' என்ற நீதிக்களஞ்சியம் இதுகாறும் பதினான்கு பதிப்பும், தமிழ் மருந்துகள் என்ற உடல்நலக் களஞ்சியம் பதினேழு பதிப்பும் பெற்றுள்ளமை இந் நூல்களின் மக்கட் செல்வாக்கைப் புலப் படுத்துகின்றன.

'தமிழ்ச்செல்வம்' என்பது உணர்ச்சி பொதிந்த நாடக நூலாகும். திரு. விசுவநாதரின் இலக்கியநூல் பலவற்றுள் கோபுரம் அனையது 'தமிழின் சிறப்பு' என்ற இனியநூல்.

உயர்தனிச் செம்மொழியாம் தமிழ் இலக்கியத்திற்கு நெடிய அமைப்பாலும் அயராச் சொற்பொழிவாலும் ஆழ்ந்தகன்ற எழுத்துப் படைப்பாலும் உரப்படுத்தி வளம் பெருக்கி அறுபதாண்டுகட்கு மேலாக ஒரே குறிக்கோளொடு தாமும் தளராது யாரையும் தளர விடாது தொண்டாற்றி வரும் தமிழ்ச் சான்றோர் முத்தமிழ்க்காவலர் கி. ஆ. பெ. விசுவநாதம்.

———

தமிழின் தலைமையை நாட்டும் தனிச் சொற்கள்

[ஞா. தேவநேயன்]

20 பகு

புல் = துளை, துளையுள்ளது, உட்டுளையுள்ள நிலத்திணை. ''புறக்கா ழனவே புல்லென மொழிப'' (தொல். மர. 86).

புல்—பொல். பொல்லுதல் = துளைத்தல்.

பொல்—பொள். பொள்ளுதல் = துளைத்தல்.

பொள் —பொழு—போழ். போழ்தல் = துளைத்தல், பிளத்தல், பிரிவு படுத்தல்.

பொழு—பொகு. பொகுதல் = துளைபடுதல். பொகுத்தல் = துளைத்தல், ஓட்டை செய்தல். (யாழ். அக.) ஒ. நோ: தொழு—தொரு.

பொகு—பகு. பகுதல் = பிளவு படுதல், பிரிவு படுதல்.

பகுத்தல் = பிளத்தல், பிரிவு படுத்துதல், பங்கிடுதல், வகைப் படுத்துதல்.

பகுசொல் = முதனிலை ஈறு முதலிய உறுப்புக்களாகப் பகுக்கப்படுஞ் சொல். பகாச்சொல் = பல வுறுப்புக்களாகப் பகுக்கப் படாச் சொல்.

பகுவாய் = 1. பிளந்தவாய். 2. அகன்றவாய். 3. வாயகன்ற தாழி. 4. பிழா.

பகு—பகுதி = பகுப்பு, பிரிவு, அரசிறை, திறை.

பகுதி—பாதி = இரு சமப்பாகமாகப் பகுக்கப்பட்ட பொருட் பகுதி, அரை.

பாதித்தல் = இரு சமப்பங்காகப் பிரித்தல்.

பகு—வகு. வகுதல் = பிளத்தல், பிளவு படுதல்.

வகுத்தல் = 1. பகுத்தல். 2. கூறுபடுத்துதல். 3. பகிர்தல். 4. இனம் பிரித்தல், வகைப் படுத்துதல். 5. ஏற்படுத்துதல். 6. படைத்தல்.

வகுத்தல் = பிரித்தற் கணக்கு.

வகுத்தான் = ஊழமைத்த இறைவன், ஊழ். "வகுத்தான் வகுத்த வகையல்லால்" (குறள். 377).

வகு—வகுதி = வகுப்பு. ' வகுதியின் வசத்தன" (கம்பரா. இரணியன். 69).

வகு—வகுந்து = வழி. "வகுந்து செல் வருத்தத்து" (சிலப். 11 : 167). வழி வகுத்தல் = வழியமைத்தல்.

வகு—வகுப்பு = 1. கூறுபடுத்துகை. 2. வகிடு. 3. இனம் பிரிக்கை. 4. பிரிவு. 5. தடுக்கப்பட்ட அறை. 6. குலம்.

வகு—வகம் = வழி. (யாழ். அக).

வகு—வக்கு = 1. வகை. 2. வழி. வாங்கின கடனைக் கொடுக்க வக்கில்லை. (உ. வ.).

வகு—வகிர். வகிர்தல் = 1. கீறுதல். 2. உச்சந் தலையிலிருந்து நெற்றி நடுவரை தலைமயிரை இரு கூறாகப் பிரித்தல். 3. பிளத்தல். 4. துண்டுபடுத்துதல். 5. பங்கு செய்தல்.

வகிர்—வகிடு = தலைமயிர் உச்சியொழுங்கு.

வகிர் = வழி. (பிங்.).

வகு—வகை = 1. வகுப்பு. 2. கூறுபாடு. 3. குலம். 4. இனம். 5. முறை. 6. வழி.

ம., தெ. வக (உ), க. வகெ (ஐ).

வகைதல் = 1. வகிர்தல். 2. பிரிவு படுத்துதல். 3. வகைப் படுத்துதல்.

வகைச்சல்—வகச்சல் = மாலைவகை. "திருமாலை வகச்சல் வளையம்" (கோயிலொ. 59).

வகையார் = இனத்தார்.

வகையுளி = செய்யுளை இசை நோக்கி அசையுஞ் சீருமாகப் பிரிக்கை. (யாப். வி. 375).

பகு—பகல் = 1. பகுக்கை. 2. சமமாகப் பகுக்கும் நடு. (திவா.). நடுநிலைமை. "அகல்வையத்துப் பகலாற்றி" (பதிற்றுப்.

90 : 9). 3. நுகத்து நடுவாணி. "நெடுநுகத்துப் பகல் போல" (பட்டினப். 206) 4. நண்பகல். 5. நள்ளிரவு. "அரையிருள் யாமத்தும் பகலுந் துஞ்சார்" (சிலப். 4 : 81). 6. நண்பகல் ஒளி. (திவா.). 7. ஒளியுள்ள அரைநாள். "பகல்விளங்குதியாற் பல்கதிர் விரித்தே" (புறநா. 8). 8. இரவுஞ் சேர்ந்த முழுநாள். "ஒல்வ கொடாஅ தொழிந்த பகலும்" (நாலடி. 169). 9. பகலைச் செய்யுங் கதிரவன். "பன்மலர்ப் பூம்பொழிற் பகன்முளைத்தது போல்" (மணி. 4 : 92).

ம. பகல், க. பகல் (g), தெ. பகலு (?).

பகல்—பகலவன் = கதிரவன். "பகலவ னனையானும்" (கம்பரா. கங்கை. 61). பகல்—பகலோன் = கதிரவன்.

பகல்—பால் = 1. பகுத்தல், பகுத்துக் கொடுக்கை. "பாலுங் கொளாலும் வல்லோய்" (பதிற்றுப். 10 : 19). 2. பகுதி, கூறு. "இருபாற் பட்ட ஒருசிறப் பின்றே" (தொல். புறத். 16). 3. பொருட் கூறு. "பால்வரை கிளவி" (தொல். எழுத். 165). 4. வகை. "முப்பாற் புள்ளியும்" (தொல். எழுத். 2), "மடவா ரைம்பா லணையும்" (திவ். பெரியதி. 7 : 5 : 3). 5. பாதி. "பானாளிரவில்" (கலித். 90). 6. பக்கம். "பாஅனின்று கதிர்சோரும்" (புறநா. 22). "ஒருபாற் கோடாமை சான்றோர்க் கணி" (குறள். 118). 7. குலம். "கீழ்ப்பா லொருவன் கற்பின்" (புறநா. 183). 8. திசை. (பிங்.). 9. இடம். (யாழ். அக.) அப்பாற் போ. (உ வ.) 10. வேளை. அப்பால் வா. (உ. வ). 11. இருதிணை ஐம்பாற் பிரிவு. "இரு திணை மருங்கின் ஐம்பா லறிய" (தொல் கிளவி. 10). 12. ஈரெண் பாகுபாடு. "பன்மைப் பாலாற் கூறுதல்" (தொல். சொல் 62, இளம்பூ). 13. இன்ப துன்பக் கூறு. "பால்வரை தெய்வம்" (தொல். கிளவி. 58). 14. நூற்பெரும் பிரிவு. அறத்துப்பால் (திருக்குறட் பிரிவு).

பகு—பகவு = 1. பிளவு, வெடிப்பு, குப்பு. (யாழ். அக.). 2. துண்டு. "எட்பக வன்ன சிறுமைத்தே யாயினும்" (குறள். 889). 3. பங்கு. (யாழ். அக).

பகவு—பகவன் = உயிர்கட்கெல்லாம் உணவைப் பகுத்தளித்துக் காப்பவன், கடவுள். "பகவன் முதற்றே யுலகு" (குறள். 1).

பகு—பக்கு. பக்கெனல் = வெடித்தற் குறிப்பு.

பக்கிசைத்தல் = (செ. கு. வி.) விட்டிசைத்தல். (செ. குன்றாவி.) வேறுபடுத்திக் கூறுதல். "அதுவும் இதுவும் எனப் பக்கிசைத் தோதப்பட்ட" (சி. போ. சிற். 12 : 4 உரை).

பக்கு=1. பிளப்பு. (W). 2. கவர்படுகை "தங்கள்ளத்தாற் பக்கான பரிசொழிந்து" (தேவா. 17 : 3). 3. பை. "பக்கழித்துக் கொண்டீயெனத்தரலும்" (கலித். 65 : 14), "பகர்வர் பக்கிற் ரேன்றும்" (ஐங்குறு. 271).

பக்கு விடுதல்=1. பிளத்தல்.

> "இரவென்னும் ஏமாப்பில் தோணி கரவென்னும்
> பார்தாக்கப் பக்கு விடும்." (குறள். 1068)

2. பிரம்படி யுண்ட தோலறுதல். (W).

பக்கடுத்தல்=நொறுங்குதல். "பக்கடுத்தபின் பாடியுய்ந்தானன்றே" (தேவா. 785 : 11)

பக்கு—பக்கம்=1. பகுதி. 2. தொழிற்கூறு. "அறுவகைப் பட்ட பார்ப்பனப் பக்கமும்" (தொல். புறத். 20). 3. சாரி (Side). "பக்க நோக்கி நிற்கும்" (திவ். திருவாய் 5 : 5 : 5). 4. விலாப் புறம். 5. சிறகு. "இசைபடு பக்க மிருபாலுங் கோலி" (பரிபா. 21 : 31). 6 திசை. தென்பக்கம் (உ. வ.). 7. இடம். "ஊழையு முப்பக்கங் காண்பர்" (குறள். 620). 8. தாட்புறம். அட்டையின் உட்பக்கம் (உ. வ).

மறைமலையடிகள் வரலாறு, 50-ஆம் பக்கம் (உ. வ.). 9. நூல். "வாயினுங் கையினும் வகுத்த பக்கமொடு" (தொல், புறத். 41).

10. அருகு. "பக்கஞ் சார்ந்தவர் பான்மையனுயினன்" (மணி. 16 : 16). 11. சார்பு. அவர் தொடுத்த வழக்கு எதிரி பக்கம் தீர்ப்பாயிற்று, இரண்டாம் உலகப்போரில் சப்பான் செருமானியர் பக்கஞ் சேர்ந்திருந்தது. 12. உளச்சார்பு. நட்பு, அன்பு. 13. சுற்றம். "பக்கஞ் சூழ வடமீன் காட்டி" (கல்லா : 18). 14. படை. "தாவரும் பக்கம் எண்ணிரு கோடியின் தலைவன்" (கம்பரா. இலங்கைக் கேள்வி. 40).

15. திங்களாற் கணிக்கப்படும் காலப்பகுதி. வெண்பக்கம் (வளர் பிறைக்காலம்), கரும்பக்கம் (தேய்பிறைக் காலம்). 16. திங்களின் கலைநிலை. எட்டாம் பக்கம்.

17. ஏரணத்தில் உண்மை காண அல்லது மெய்ப்பிக்க எடுத்துக்கொள்ளப்படும் மேற்கோள்.

18. பெயரெச்சத்தை யடுத்து 'இடத்து' என்னும் பொருளில் வரும் வினையெச்ச வீறு. எ - டு. வரும்பக்கம்=வருமிடத்து.

அக்கம் பக்கம், பக்கக்கன்று, பக்கக்குடுமி, பக்கச்சுவர், பக்கச் சொல், பக்கச் சூலை, பக்கத்தூணை, பக்கத்து வீடு, பக்கப் பலகை, பக்கப் பாட்டு, பக்கப்பாளை, பக்கமேளம், பக்கவடம், பக்கவழி, பக்கவளை, பக்கவாட்டு, பக்கவெட்டு, பக்கவேர் முதலிய கூட்டுச் சொற்கள் தொன்று தொட்டு உலக வழக்கில் வழங்கி வருகின்றன.

பக்கம்—பக்கர் = இனத்தார்.

பக்கம்—பக்கல் = 1.பக்கம் "என்பக்க லுண்டாகில்" (பெரியபு, இயற்பகை. 7) 2. இனம் (W.)

பக்கு—பக்கறை = 1. பை, 2. துணியுறை.

பக்கு—பங்கு = 1. உடற்பாகம். "பங்குலவு கோதையுந் தானும்" (திருவாச. 16 : 9). 2. பாதி (சூடா.) 3. பாகப் பகுதி. "பங்கிற்கு மூன்று பழந்தர வேண்டும் பனந் துண்டமே" (தனிப்பா.) 4. பக்கம். என் பங்கில் தெய்வம் இருக்கிறது. (உ.வ) 5. இரண்டு அல்லது இரண்டரைச் செறு (ஏக்கர்—acre) நன் செயும் பதினறு செறு புன்செயுங் கொண்ட நிலம். (C. G. 288).

பங்கன் = தன் பாகமாகக் கொண்டவன். "வேயுறு தோளி பங்கன்" (தேவா.), "மங்கை பங்கனே" (தேவா. 549 : 5).

பங்கு—பங்கம் = 1. உடற்பாகம். "பங்கஞ் செய்த மடவா ளொடு" (தேவா. 855 : 5). 2. துண்டு (W.) 3. பிரிவு. "பங்கம் படவிரண்டு கால் பரப்பி" (திருவாலவா. 16 : 22, கீழ்க்குறிப்பு). 4. சிறுதுகில். (பிங்.) பங்கு—பங்கி. பங்கித்தல் = 1. பகுத்தல், பங்கிடுதல். 2. வெட்டுதல், துணித்தல். "அங்கத் தெவையு மழியச் சிலரைப் பங்கித் தடைவார்" (சிவதரு, சுவர்க்கநரக. 78).

பங்கி = 1. பாகமாகப் பெற்றுக்கொண்டவன் "நஞ்சினைப் பங்கி யுண்டதோர் தெய்வ முண்டோ" (தேவா. 302 : 6). 2. ஆருண்டிற் கொருமுறை ஊர் நிலத்தை ஊரார்க்குப் பங்கிட் டடைக்கும் முறை. (W. G.) 3. பங்கு கொண்டது. எ-டு : திரிபங்கி (சொல்லணி வகை) பகு—பகிர். பகிர்தல் = பங்கிடுதல். பகு—பகை. பகைத்தல் = வெறுத்தல், மாறு கொள்ளுதல், பகை—ம, பக, க, தெ. பக (g).

பகை—பகைஞன், பகைவன்.

பகு—பாகு = 1. பகுதி. (W.) (பாகிடுதல் = பங்கிடுதல், பாகு படுதல் = பிரிவு படுதல்.) 2. பக்கமுள்ள கை, தோள்.

பாகு—பாகம் = 1. பகுக்கை. (சூடா.) 2. கூறு "தினையின் பாகமும் பிரிவது திருக்குறிப்பன்று" (திருவாச. 5 : 37). 3. பாதி "பாகம் பெண்ணோ டாயின பரிசும்" (திருவாச. 2 : 78). 4. பாகை (degree.)

பாகம்—பாகன் = 1. பெண்ணை யிடப் பாகமாகக் கொண்ட சிவன். "நாரி பாகன்" (தேவா. 1172 : 9). 2. கருமத் துணைவனான பாங்கன். 3. பாங்காயிருந்து யானையைப் பேணுபவன். "யானை யறிந்தறிந்தும் பாகனையே கொல்லும்" (நாலடி. 213). 4. தேரைச் செலுத்தும் தேர்ப்பாகன் "தேரிற் பாகனா யூர்ந்த தேவதேவன்" (திவ் பெரியதி. 7 : 5 : 2). ம. பாவான், மராத். பாகா (உ). பாகு—பாகை (degree).

பாகு—பாகி. பாகித்தல் = பங்கிடுதல்.

பாகி[1] = பாகமுள்ளது. எ - டு : திரிபாகி (சொல்லணி வகை).

பாகி[2] = தேரோட்டும் பெண். (திவ். பெரியாழ். 1 : 3 : 9).

பாகன்—பாகு = யானைப்பாகன். "பாகுகழிந் தியாங்கணும் பறைபட வருஉம் வேக யானை" (சிலப். 15 : 46).

பாகு—வாகு = கை, தோள், அழகு. வாகுவளையம் (தோள் வளையம், தோள்வளைவி,—வ. பாகுவலய (g).

வாகு—வாக்கு = பக்கம். "இரண்டு கைவாக்கு மியங்கலிப்ப" (திருவிளை. தடாதகை. 26.) காயப்போட்ட துணி காற்றுவாக்கிற் பறந்துபோய் விட்டது. (உ. வ.)

பாகு—பாங்கு = பக்கம், துணை, தோழமை, தன்மை, அழகு, கண்ணோட்டம். பாங்கு - பாங்கர் = பக்கம். பாங்கு—பாங்கன் = தோழன். பாங்கி = தோழி.

பாகு—பாக்கு = 1. பகுதி. 2. ஒரு தொழிற்பெய ரீறு. "எழுதேம் கரப்பாக் கறிந்து" (குறள். 1127), "அஞ்சுதும் வேபாக் கறிந்து" (குறள். 1128). 3. ஓர் எதிர்கால வினையெச்ச ஈறு. "வான்பான் பாக்கின வினையெச்சம்" (நன். 343). எ - டு : உண்பாக்குச் சென்றான்.

பாக்கு—வாக்கு = ஓர் எதிர்கால வினையெச்ச ஈறு.

கொள்வாக்கு வந்தான் (தொல். சொல். 231, உரை).

பாக்கு—பாக்கம் = 1. நெய்தல் நிலத்தூர், பட்டினப் பகுதி.

எ - டு : மருவூர்ப்பாக்கம், கோடம்பாக்கம்.

"கொழும்பல்குடிச் செழும்பாக்கத்து" (பட்டினப். 27). 2. ஊர். "கட்கொண்டிக் குடிப்பாக்கத்து" (மதுரைக். 137). 3. அரசனிருப்பு. (பதிற்றுப். 13 : 12, உரை) 4. நகர். க., தெ. பாக்க.

பாக்கம்—வாக்கம் = நெய்தல் நிலத்தூர். எ - டு : கத்திவாக்கம்.

பாக்கம்—பாக்கை = 1. நெய்தல் நிலத்தூர். 2. ஊர். "நென்னலிப் பாக்கை வந்து" (பதினொ. திருவே. திருவைந் 74) எ - டு : கொள்ளிப்பாக்கை.

பகு—பா. பாத்தல் = பகுத்தல். "பாத்தூண் மரீஇ யவனை" (குறள். 227).

பா - பாத்தி = 1. பகுதி, "மருவின் பாத்தியிற் றிரியுமன் பயின்றே." (தொல். எழுத். 172), 2 செய்ப்பகுதி. "வளர்வதன் பாத்தியுள் நீர்சொரிந் தற்று" (குறள். 718). 3. பங்கு. (W.) 4. வீடு. (பிங்.)

பாத்தி—பத்தி (para) = 1. எழுதப்பட்ட செய்தியின் தனிப் பகுதி, 2. பாத்தி, 3. வரிசை.

பத்தி—பந்தி = கூடியுண்பார் பகுதி அல்லது வரிசை.

பா—பாத்து. பாத்துதல் = பகுத்தல், "படுதிரை வையம் பாத்திய பண்பே" (தொல். அகத் 2).

பாத்து = 1. பகுக்கை 2. பங்கு. 3. பாதி, 4. இணை.

பாத்து —பாது = பங்கு. பாதிடுதல் = பங்கிடுதல்.

மேலையாரியச் சொற்கள்

பக்கு(பை) —**ON**. baggi, **ME**. bagge, **E.** bag.

பக்கம்—**L.** pagina, **OF.**, **F.**, **E.** page.

இதற்கு **L.** *pangere,* to fasten என்று மூலங்காட்டுவது பொருந்தாது. **E.** paginate = பக்கமிடு.

பாங்கு (இடம்), பாக்கம் (ஊர்), பாக்கை (ஊர்)—**L.** *pagus*, a place, village, district, province.

பாங்கன்—**OF.**, **ME.**, **F.** *page*, a boy or man, usu. in livery, employed as personal attendant of person of rank and to go on errands. paidos (பைதல்) என்னும் கிரேக்கச் சொல்லி

னின்று திரிந்த paggio என்னும் இத்தாலியச் சொல்லை இதற்கு மூலமாகக் காட்டுவது பொருந்தாது.

சமற்கிருதச் சொற்கள்

paksh, to take a part or side, (W).

பக்கம்—**paksha**, a wing, RV; the shoulder, the flank or side or half of anything, RV; the half of a lunar month (sukla or krishṇa paksha); a side, party, faction; place; one of two cases or one side of an argument, a thesis, the proposition to be proved in a syllogism; an army, favour, proximity, neighbourhood etc.

பந்தி—**pankti**, a row or set or collection of five.

பாகு—**bahu**, the arm.

பகு—**bhaj**, to divide, distribute, allot or apportion to or share with. ஒ. நோ: புகு (உண்)—**bhuj**.

bhakta, distributed, assigned, allotted, RV.

bhakti, distribution, partition, separation, RV; a division, portion, share; the being a part of; that which belongs to anything else, attachment, fondness for, devotion, homage, piety, faith.

bhaktri, devotedly attached, an adorer, worshipper.

bhaga, dispenser, gracious lord, patron.

bhagavat, possessing fortune, prosperous, happy, RV; adorable, venerable, AV.

bhagaval, or **bhagavan**, in comp. e. g. bhagavad—gita.

bhagavati, name of Lakshmī or Durgā.

bhagin, prosperous, happy.

bhagini, a sister ('the happy or fortunate one' as having a brother).

bhajaka, distributor, apportioner.

bhaga, a part, portion, share, allotment, inheritance, lot, good fortune, luck, destiny.

bhagavata, relating to or coming from Bhagvat, i. e. Vishṇu or Krishṇa, a follower or worshipper of Bhagavat.

1. **bhagya**, to be shared or divided, divisible.

2 **bhagya**, entitled to a share, lucky, fortunate; good fortune, fate, destiny.

bhaj, sharing or participating in.

bhajaka, a divisor.

bhajana, shaving or participating in.

bhajita, shared, divided, distributed, portioned.

bhajya, to be shared or distributed., to be divided.

மேற்காட்டிய தமிழ்ச் சொற்களெல்லாம், பகு என்னும் ஒரே மூலச் சொல்லினின்று தொடர்ச்சியாகத் தோன்றியவை யென்பது, கூர்ந்து நோக்குவார்க்குத் தெற்றென விளங்கும். ஆயின், வடமொழியில், அவை பக்ஷ், பஞ்ச்சன் (pañcan), பஜ் (bhaj), பஹ் (bah) என்னும் தொடர்பற்ற நால்வேறு மூலத்தினின்று தோன்றியவையாகக் காட்டப்பட்டுள்ளன. அம் மூலங்களுள் bah என்பதற்கு banh என்பதே அடிமூலம் என்றும் கூறப்பட்டுள்ளது. அதற்கு வளர்தல் அல்லது மிகுதல் என்பதே அடிப்பொருள். கை என்னும் சினைப்பெயருக்குப் பக்கத்திலிருப்பது என்பதே யன்றி வளர்வது என்னும் பொருள் பொருந்தாது. பந்தி என்னுஞ் சொல்லிற்கு (ஐந்து) பஞ்சன் என்னும் எண்ணுப் பெயரும் மூலமாகாது.

பால் என்னுஞ் சொல்லிற்குப் பகுதி, ஊழ் என்னும் இரு பொருள் இருப்பதுபோன்றே, பாக்கு என்னும் சொல்லிற்கும் இருத்தல்வேண்டும். "பலரறியார் பாக்கியத்தால்" என்னும் குறளடிக்கு (1141), "அந் நிலைபேற்றைத் தெய்வத்தால் யானே அறிவதல்லது கூறுகின்ற பலரும் அறியார்" என்று பரிமேலழகர் உரைத்திருப்பதை நோக்குக. அவர் தெய்வம் என்றது பால் வரை தெய்வத்தை.

> *"கிளைவயி னீக்கியிக் கெண்டையங் கண்ணியைக் கொண்டுதந்த*
> *விளைவையல் லால்விய வேனய வேன்தெய்வ மிக்கனவே.'* (6)
>
> *"பொன்னிவ் வுயர்பொழில்வாய்ச் சூழுடை யாயத்தை நீக்கும்*
> *விதிதுணையா."* (7)
>
> *"சொற்பா லமுதிவள்......நற்பால் வினைத்தெய்வந் தந்தின்று"* (8)

என்று திருக்கோவை கூறுதலையுங் காண்க.

பத்தி (பக்தி) என்னுஞ் சொல்லிற்கு ஒருவன் பாற்பட்ட தன்மை என்பதே மூலப்பொருள்.

அப்பரடிகளும் சமண சமயமும்

[டாக்டர் சொ. சிங்காரவேலன், எம்.ஏ., பிஎச்.டி.,

அ. வ. அ. கல்லூரி, மாயூரம்]

(முன் இதழ் ௯௪௪ஆம் பக்கத் தொடர்ச்சி)

தமக்குக் கனவிடைத் தோன்றி ஆட்கொண்ட ஓர் அனுபவத்தைப் பதினோராம் பாடலில் கூறுவது இவ்வாறு :

''முன்னாள் செய்த தொழுதலும் ஓர்
சொப்பனத்தே தோன்றிப் பண்பாய்,
அல்லலறுத் தாட்கொண்ட தேவனுகும்
அறங்காத்த நாயகர்தம் மருளினாலே''

நறுங்கொண்டையின் நீர்வளம் 'நந்து (சங்கு) உலவும்' (1) என்பதனாலும், தமிழ்வளம், 'நற்றமிழ்சேர்' (2) என்பதனாலும், சமண சமயக் கருத்து நலம் ' நன்னெறிசேர்' (3) என்பதனாலும், புகழ் வளம் 'நாட்டியசீர்' (5) என்பதனாலும், 'நாற்றியசீர் (10) என்பதனாலும், 'நல்லியல்சேர்' (11) என்பதனாலும், விளக்கப்பட்டுள்ளன. 'நட்டணை' (9) என்ற சொற்பொருள் இனிது விளங்கவில்லை.

''ஓதமோ ர கந்தானம் என்றேஉச் சரித்தே
உன்னடிப் பாலுறவே வேண்டும்'' (6)

என்ற பாடற்பகுதி, அருக பரமேட்டிக்குரிய அருள் மந்திரத்தை எடுத்துரைப்பதாக உள்ளது.[19A]

எண்சீர் விருத்த யாப்பமைதியில் பாக்கள் உள்ளன. அடிகள் வகுத்த 'தாண்டக' யாப்புக்கு முன்னோடிப் பாக்களாக இவற்றைக் கொள்ளலாம்.

இனி 'ஜோதி' (4), 'ரக்ஷிப்பானே' (10), 'ஜினாலயம்' (2) 'ஜெயஜெயென்ன' (5) 'ஜினபதி' (7) என்ற சொற்கள் இப் பதி

19-A. See for details, the X Chapter on "Appar's Jaina Hymn" in *A Descriptive and Critical Study of Appar Tevaram (Hymns)*" Thesis submitted for the degree of Doctor of Philosophy by C. Singaravelan, to Annamalai University (1972)

கத்துள் கையாளப்பட்டுள்ளன. அப்பரடிகள் வட சொற்களைக் கையாளும் இயல்பினரே; ஆனால், மிகக் குறைவான சொற்களையே கையாண்டுள்ளார்; தேவாரப்பாக்களில் இவர் கையாண்டுள்ள வட சொற்கள் **893** ஆகும்; **3066** பாட்டுகளுக்கு இந்த அளவே எடுத்தாண் டுள்ளார். இது நூற்றுக்கு 28·9% விழுக்காடு ஆகும். ஆனால், "வட சொற்கிளவி வடவெழுத் தொரீஇ எழுத்தொடு புணர்ந்த சொல்லா கும்மே"[20] என்ற பழந்தமிழ்த் தொல்காப்பிய நெறியை எங்கும் மீறினாரல்லர். தமிழ்ப் படுத்திய வட சொற்களே அவர் தமிழ்ப் பாட்டுக்களிற் காணப்படுவன. சமண சமயத்தை சார்ந்தபோது மட்டும் இவ்வாறு வடசொற்களையே எடுத்தாண்டு பாடும் கருத் துடையர் ஆயினர் என்று கொள்ளுவதும் பொருத்தமற்றதாகத் தோன்றுகின்றது. அன்றியும் 'மாய்கை' (5) 'துலைய' (5) ஆகிய பிழைபட்ட சொல் வடிவங்களும் இப் பதிகத்துள் காணப்படு கின்றன. இவை ஏடு எழுதுவோரால் நேர்ந்த பிழைகளாகக் கொண்டால் ஒழிய வேறு அமைதி காணவியலாது.

'இத் தடைகள் மட்டுமே—அப்பரடிகளாக மாறிய தரும சேனரால் இப் பதிகம் பாடப்பட்டிருக்கலாம் என்பதற்கு மாறு கின்றன, என்றாலும் தக்க சான்றுகள் கிடைக்கும் வரையில், இவை அப்பர் சமண சமயம் சார்ந்த காலை பாடிய சமணப் பாட்டுக்களே' என்றே கொள்ளலாம்.

சமணர் பற்றிய தேவாரக் குறிப்புகள் :

இனி, தேவாரப் பாட்டுக்களுள் அப்பர் அடிகளார் சமணர்களைப் பற்றிக் குறித்துள்ள குறிப்புக்கள் பற்றி நோக்குவோம். பெரும்பாலும் ஒவ்வொரு பதிகத்திலும் இச் சமண பௌத்தர்களைப் பற்றிய குறிப்பு வருகின்றது. தம்முடைய வாழ்வில், சமண சமயம் சார்ந்த பின்னரும் ஓர் உணர்ச்சி அடிகளார்க்கு இருந்திருக்கும் போலும். சமணசமய அன்பு, அறக் கோட்பாடுகள் அவருடைய உள்ளத்தைப் பெரிதும் கவர்ந்திருந்தன. ஆனால், அன்றைய நிலையில் தமிழகத்துச் சமணர்நிலை அவரது அடி மனத்திற்குப் பொருந்துவதாயிருந்திராது என்று எண்ணலாம். சமுதாயத்திற்கும் உலகிற்கும் செய்யத்தக்க நற்பணிகளை—துன்பம் துடைக்கும் உயர் தொண்டுகளை ஆற்ற அப் புதிய சமயந்தானும் அடிகளார்க்குத் தோன்றவில்லை. உள்ளத்தே இந்த ஆழ்ந்த கவலையே கடுஞ் சூலையாக உருவெடுத்தது என்றும் கருதலாம். இறைவன் திருவருளால் இச் சூலை எழுந்தது என்று சேக்கிழார் கருதுவதற்கு இது பெரிதும் ஒத்ததே. ஆகவே, கடுஞ்சூலைவாய்ப்பட்டார் தருமசேனர். ஒய்வற்ற கல்வி நலமும்,

---

20. தொல்காப்பியம்—நூற்பா 884.

சொற்போர்களில் ஈடுபட்ட சோர்வும் வேறு இந் நோய்க்குக் காரணங்கள் ஆகலாம். பாதிரிப் புலியூர் சமணர் தந்திர மந்திரங்களுக்குப் பணியவில்லை இக் கொடிய நோய். இந்த நோயினின்றும் விடுதலைபெற எண்ணிய அடிகட்கு, புதிய சமயச் சார்பின் திறத்தால் நோய் வீடு பெருமற் போகவே, தமக்கையாருக்கு ஆள் அனுப்புகின்ருர். தமக்கையார் சமண்பாழிக்கு வாராமற் போகவே தாமே புறப்பட்டுத் திருவதிகை வருகின்ருர். நீறணிந்து திருக்கோயிலுக்குள் திலகவதியாருடன் வழிபடச் செல்கின்ருர். இவ்வாறு,

''நீறணிந்தார் அகத்திருளும் நிறைகங்குற் புறத்திருளும் மாறவரும் திருப்பிள்ளையெழுச்சிக் காலமாகிய விடியற்காலத்தில், திருவதிகை வீரட்டேசுவரர் திருமுன்பு நோய் நீக்கம்பெற, 'உரைத்தமிழ் மாலைகள் சாத்தும் உணர்வு முந்துற' லால் ''கூற்ருயினவாறு'' என்றெடுத்துக் கோதில் திருப்பதிகம் ஒன்றினைப் பாடுகின்ருர். 'மன்னும் பதிகம் அது பாடியபின் வயிறு உற்று அடும் கடும்பிணி' முற்ற நீங்கப்பெற்றுத் தம்மையும் ஆட்கொண்ட 'முதல்வன் கருணைக் கடல் மூழ்கி' மகிழ்ந்தார் அடிகள்.[21] இவ்வாறு சமண சமயத்திலிருந்து விடுபட்டு மீளவும் சிவநெறி சார்ந்தபோது அடிகள் நடுத்தர வயதைக் கடந்தவராக இருந்தார் என்று எண்ணலாம். முற்பகலில் உணவு சமைத்தால் காலத்தில் உண்ணலாம். பிற்பகலில் உணவு சமைக்கத் தொடங்கினுல் காலம் தவறித்தானே சோறு கிடைக்கும்!; அவ்வாறு 'பிற்பகல் உணவு செய்யும் பேதைமார் வாழ்வு போன்று' தம் வாழ்வும் ஆயிற்று என்று அடிகள் வருந்தும் பாடற்பகுதியும் இங்கு ஒப்பிட்டுணரத்தக்கது.[22]

கொல்லாமைச் சமணர் கொடுமைகள் :

இதன் பிறகு சமணர்களால் அடிகட்கு விளைந்த கடுஞ் சோதனைகள் பல; நீற்றறையில் இடுதல், யானையை விட்டு இடறச் செய்தல், நஞ்சு கலந்த சோற்றினை இடுதல், கல்லொடு கட்டிக் கடலிற் பாய்ச்சுதல் ஆகிய எல்லாச் செயல்களிலும், சிவபிரான் திருவடிகளே பற்றுக்கோடாகக் கொண்டு வென்று மேம்பட்டார் திருநாவுக்கரசர்.

கொல்லாமைதான் சமண சமயத்திற்கு அடிப்படைக் கோட்பாடு; 'ஒன்ருக நல்லது கொல்லாமை' என்ற வள்ளுவர் அறத்தைப்[23]

---

21. *திருத்தொண்டர் புராணம்—1338, 1339, 1340, 1341,* பாடல்கள்.

22. *திருநாவுக்கரசர் தேவாரம்—4—28—1.*

23. *திருக்குறள் 323.*

பின்பற்றிய சமணர்கள் 'வினைவேறு சொல்வேறு பட்டவர்களாக' அக் காலத்தே விளங்கியமைக்கு[24] இச் செயல்களும் தக்க சான்றுகளாம். 'கொல்லாமை மறைந்து உறையும் சமண் சமயம்' என்ற சேக்கிழார் குறிப்பு இங்கே விளக்கமாகி விட்டது. தம் முடைய சமயம் சார்ந்த தருமசேனர் கோட்பாட்டினின்றும் விலகிச் சிவநெறி சேர்ந்த நிலையில்; சமணர்கள் வாளாவிருத்தலே நெறி; வலிந்து கொன்றிடக் கருதியது பிழை; அதற்கு அரசியற் செல்வாக் கைப் பயன்படுத்த நினைத்தது அதனிலும் பெரும்பிழை. சமணர் களின் இச் செயல்கள் முற்றும் தோற்றுப் போயினமை மக்கள் மனங்களிலே இருந்த மதிக்கற்பாட்டைக் கெடுத்து வீழ்த்தி விட்டது. மன்னனும் கூட மதியாத நிலை விளைந்துவிட்டது. வலிவும் பொலிவும் பெற்று விளங்கிய சோழநாட்டுத் தொண்டை நாட்டுச் சமண் சமய நெறி, செல்வாக்கிழந்தமைக்குக் காரணமாக இந் நிகழ்ச்சி அமைந்துவிட்டது. 'உயிர்க் கொலை புரிதல் பெரும் பாவம்' என்ற கோட்பாடு அவர்களைப் பொறுத்தவரையில் 'பொய் யாய்ப் பழங்கதையாய்ப் போய்விட்டமையை' மக்கள் உணர்ந்து பழைய சிவநெறி மருங்கு முன்னைவிடப் பெரிய பற்றுடன் திரும்ப லாயினர்; அடிகளாரது 'தமிழோடு இசை கலந்த' கொள்கை விளக்கம் தமிழகத்தின் ஊர்கள்தோறும் நடைபெறலாயிற்று; ஏறத் தாழ இதே காலத்தில் 'நாளும் இன்னிசையால் தமிழும்' சிவநெறியும் பரப்பிடத் தொடங்கிய இளைய ஞாயிருகிய திருஞான சம்பந்தர் தொண்டும் இணைந்தது; பாண்டி நாட்டிலும் நாடே கண்டு வியக்கத்தக்க கருத்து வெற்றி சிவநெறிக்குக் கிடைத்தது; இவற்ருல் சமண சமயச் சரிவு தமிழகத்தே இவ்விடைக் காலத்தே விளைந்தது. மகேந்திர வருமனுடைய 'மத்த விலாசப் பிரகசனம்' என்ற வடமொழி நாடகமும் இக் காலச் சமணர்களின் நடைமுறை ஒழுக்கச் சீர்கேட்டை மக்கள் உணர எடுத்துரைத்தமை இங்குக் குறிப்பிடத் தக்கது.

சமணர்களைப் பற்றிய குறிப்புகள் :

அப்பரடிகள் சமணரது நடைமுறைப் பழக்கங்களை எடுத் தோதிக் கண்டித்துள்ளவையே மிகப் பல. அவர்களுடைய தத் துவக் கருத்தையோ, சமய அடிப்படையையோ அடிகள் எடுத்து ஓதி மறுக்கின்ற செய்திகள் அவர்தம் திருப்பாட்டுகளிற் காணப் பெற வில்லை. தலைமயிரைக் கைகளாலேயே பறிக்கும் இயல்புடைய வர்கள்;[25] பெண்கள் நகைத்தற்கும் நாணிக் கதவடைத்தற்கும்

24. Ibid 819.

25. திருநாவுக்கரசர் தேவாரம்—4—5—4.

இடமாக ஆடையின்றித் திரிபவர்கள்;[26] மயிற்பீலியைக் கையில் எடுத்துச் செல்லும் இயல்பினர்;[27] பாசிபடர்ந்த பற்களும், மாசு படிந்த உடலும் உடையவர்கள்;[28] குறிக்கோள் மறந்து கண்டதே கருதுபவர்கள்;[29] உண்ணும்போது ஊமைகள்போல உரையாடாது உண்பவர்கள்;[30] தலைமொட்டையாக உள்ளவர்கள்;[31] மூக்கினால் ஓதும் மந்திரத்தை உடையவர்கள்;[32] நின்றுண்ணும்போது கையெலாம் நெய்பாயக் கழுத்துவரை நிறையுமாறு கால்களை நிமிர்த்து நின்றபடி உண்பவர்கள்;[33] உறிமுடிகுத்தண்டிகை சுமப்பவர்கள்.[34]

சமயப் பொறை:

இவ்வாறெல்லாம் சமணர்களைப் பற்றி ஆங்காங்கு அடிகள் தம் தேவாரத் திருப்பாட்டுக்களில் உரைப்பதைக் காணலாம். இவற்றுள் இரண்டோரிடங்கள் நீங்கலாக மற்றவையனைத்தும் சமணர்களுடைய பழக்கவழக்கங்களைக் குறிப்பனவே தவிர, அளவை யடிப்படையில் சமணர்களின் தத்துவக்கோட்பாடுகளைத் தவிர்க்கும் நிலையில் ஓரிடமும் காணப்பெருமை கருதத்தக்கது. உலகியலைக் கடந்து, '**முதல்வன் கருணைக் கடல் மூழ்கி நின்றவர்**' ஆதலால் அவ்வாறு பேசிட அடிகளார்க்கு மனம் இல்லை என்றும் கருதலாம். **சமண சமயக் கோட்பாடுகளில் நல்லனவற்றைத் தழுவிக் கொண்டு 'தயா மூல தன்ம வழி'** என்று சிவநெறியைக் குறிக்கும் அளவிற்குப் பின்னரும் அவர்க்கு அச் சமயத்தை மதிக்கும் பெருந்தன்மை இருந்தது என்பதையே இது காட்டுகிறது.

''ஆறு சமயத்த வரவரைத் தேற்றுந் தகையன
தேறிய தொண்டரைச் செந்நெறிக்கே ஏற்றுந் தகையன''

என்று சிவபெருமான் திருவடிகளை ஏத்திப் புகழும் பெருந்தகவுடைமையை அடிகள் திருப்பாட்டுகளிற் காண்கின்றோம்.[35] எத்தனையோ கொடுஞ்செயல்கள் செய்தும் கூட, அடிகளார் மனத்தே சமணர்மாட்டு எத்தகைய கொடிய காழ்ப்புணர்ச்சியும் தலையெடுக்காமை,

''பொறுத்தல் இறப்பினை என்றும் அதனை
மறத்தல் அதனினும் நன்று''

---

26. Ibid. 4—5—8.
27. Ibid. 4—39—2
28. Ibid. 4—39—4
29. Ibid. 4—42—9
30. Ibid. 4—101—5; 4—101—6.
31. Ibid. 5—58—4
32. Ibid. 5—58—2.
33. Ibid. 6—11—9.
34. Ibid 6—3—8
35. Ibid. 4—100—7

என்ற குறள்நெறி[36] பிறழாக் குணக்குன்றான அடிகளார் வாழ்வு சான்றாக அமைந்துள்ளது. இத்தகு சமயப் பொறைக்குத் தக்க எடுத்துக்காட்டாக அடிகளார் விளங்கியுள்ளார். 'எல்லாம் சிவன் செயல் என்றுஎண்' என்று[37] கருதிய அடிகளாரின் பண்பட்ட உளத்திற்கு, மாற்றார் செய்த மாண்பற்ற செயல்கள்கூடக் கொடியன வாகத் தோன்றவில்லை. ஆம்; சமண சமயத்துடன் அடிகளாரக்கு உண்டாகிய தொடர்பும், அதனின்றும் விடுதலை பெற்ற பின்பும் அச் சமயத்தைப்பற்றி அடிகளார் கொண்டொழுகிய பண்புடைமையும் சமய உலகிற்கே வழி காட்டும் விழுமிய பண்புகள் ஆகும்.

———

பல்கலைக் கழகங்களுக்குப் பாராட்டு

கல்லூரியிற் படித்துப் பட்டம் பெற்றவர்கட்கே, முனைவர் (டாக்டர்) பட்டம் வழங்குவது பல்கலைக் கழகங் களின் வழக்கமாயிருந்தது. அவ் வழக்கத்தினை மாற்றி அண்மையில் (28-9-79இல்) சிலம்புச் செல்வர் ம. பொ. சிவஞானம் அவர்கட்கு அவர்தம் கல்வி மேம்பாடு, பேச் சாற்றல், அவர் எழுதிய நூல்களின் சிறப்பு நற்றொண் டுகள் ஆகியவற்றைக் கருதிப் பாராட்டி, சென்னைப் பல்கலைக்கழகம் முனைவர் பட்டம் வழங்கிச் சிறப்பித்தது.

அவ்வாறே முத்தமிழ்க் காவலர், திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்களுக்கு அவர்தம் கல்வி, பேச்சாற்றல், அவர் எழுதிய நூல்களின் சிறப்பு, நற்றொண்டுகள் ஆகியவற்றைக் கருதி அண்மையில் (29-11-79இல்) மதுரைக் காமராசர் பல்கலைக்கழகம் முனைவர் பட்டம் வழங்கிச் சிறப்பித்தது. தமிழறிஞர்களைப் பாராட்டிய திறத்தால் இவ்விரண்டு பல்கலைக் கழகங்களும் பெருமை சேர்த்துக் கொண்டன என்பது நினைந்து பாராட்டுதற் குரியதாகும்.

---

36. *திருக்குறள் 152.*

37. *சிவபோகசாரம்—குருஞானசம்பந்தர் — பா — 73* (பணி யறுத்தல்.)

தெலுங்குப் பழமொழிகள்

[பேராசிரியர் இரா. மதிவாணன்]

இனிய தமிழ்மொழியில் எண்ணரிய பழமொழிகள் பண்டு தொட்டு வழங்கிவருகின்றன. எப்படி வாழவேண்டும் என்பதற்கும் எப்படி வாழக்கூடாது என்பதற்கும் வழி காட்டும் வாழ்வியல் சட்டங்களாக அவை அமைந்துள்ளன. பேரிலக்கியங்களேயும் பெருமைமிக்க அற நூல்களேயும் கற்று அறிய வேண்டியவை அனைத்தையும் ஓரிரு தொடர்களில் அமைந்த பழமொழிகள் திட்ப நுட்பமாக விளக்கி விடுகின்றன.

உணவு படைக்குமுன் இலையில் ஊறுகாயை முதலில் படைப்பதும், ஒருவரோடு பேசத் தொடங்குமுன் அப் பொருள் தொடர்பான ஒரு பழமொழியைக் கூறியபின் பேசத் தொடங்குவதும், தென்னகத்தில் நிலவி வந்த மரபு. இதனை, 'ஊணினு மும்பு உப்பேரி வாக்கினு மும்பு பழஞ்சொல்லு' என்னும் மலையாளப் பழமொழியும், 'ஊட்டகமுந்தெ உப்பினிகாயி மாத்துகெமுந்தெ காதெ' என்னும் கன்னடப் பழமொழியும் விளக்கிக் காட்டுகின்றன.

தமிழகத்தில் ஓரிலக்கம் பழமொழிகள் வழங்கி வருவதாகக் கூறுகின்றனர். ஆயின், அவற்றுள் பத்தில் ஒரு பகுதிதான் தொகுக்கப்பட்டுள்ளது. ஓரின மக்களின் பண்பாட்டு வெளிப்பாடுகளான பழமொழிகள், அவ் வினத்திலிருந்து பிரிந்து தனித்து வாழும் அவ்வினமொழி மக்களிடையிலும், மாற்றமின்றி அவ்வாறே வழங்கி வருகின்றன.

தமிழிலுள்ள பழமொழிச் செல்வம் ஏனைத் திரவிடமொழிகளிலும் வழங்கி வருவதைச் சுட்டிக் காட்டுவதே இக் கட்டுரையின் நோக்கம். முதற்கண் தெலுங்கில் வழங்கிவரும் சில பழமொழிகளைத் தமிழ்ப் பழமொழிகளோடு ஒப்பிட்டுக் காண்போம்.

பழமொழிகளை ஐந்து வகையாகப் பிரித்துக்கொள்ளலாம். அவை: வினவடிவிலமைந்த பழமொழிகள், அறிவுரை மற்றும் அறவுரைப் பழமொழிகள், பட்டறிவை (அனுபவம்) வெளிப்படுத்தும் பழமொழிகள், நகையாட்டுப் பழமொழிகள், பிறிதுமொழிதலாக அமைந்த உவமைப் பழமொழிகள் என்பன.

௩. வினு வடிவிலமைந்த பழமொழிகள்

தமிழ்	தெலுங்கு
1. அந்த இடிஇடித்து இந்த மழைதானு ?	1. அன்த உரிமீ இன்தேனு குரிசேதி ?
2. அனைவரும் பல்லக்கில் ஏறினுல் சுமப்பவர் எவர் ?	2. அந்தரு அந்தலமெக்கிதே மோசேவாரெவரு ?
3. சேற்றை மிதிப்பானேன் காலைக் கழுவுவானேன் ?	3. அடுசு தொக்கனேல காள்ளு கடுகனேல ?
4. மரம் நட்டவன் தண்ணீர் ஊற்ற மாட்டானு ?	4. செட்டு நாட்டின வாடு நீளு போயடா ?

௨. அறிவுரைப் பழமொழிகள்

தமிழ்	தெலுங்கு
1. கடனில்லாச் சோறு கவளமாயினும் போதும்	1. அப்புலேனி கூடு சிப்புடைதனு சாலு
2. மாமியும் ஒரு வீட்டு மருமகளே	2. அத்தகூடா ஒக இன்ட்டி கோடலே
3. அணையும் விளக்குக்கு ஒளி மிகுதி	3. ஆரிபோயே தீபானிகி தீப்தி எக்குவ
4. மனைக்கு விளக்கு மனைவி	4. இன்ட்டிகி தீபம் இல்லாலு

௫. பட்டறிவுப் பழமொழிகள்

தமிழ்	தெலுங்கு
1. கொடுப்பவனைப் பார்த்தால் இறப்பவனும் எழுந்து வருவான்	1. இச்சே வான்னி சூஸ்தெ சச்சேவாடைனு லேஸ்தாடு
2. எந்தக்கால் இடறினுலும் தலைச்சுமைக்கே கேடு	2. ஏ காலு ஜாரின மோபுகே மோசம்
3. எல்லாம் தெரிந்தவனும் இலன், ஒன்றும் தெரியாத வனும் இலன்.	3. அன்தா தெலிசினவாடுலேடு ஏமீ தெலியனிவாடுலேடு
4. பிறர் குற்றம் காண்பவன் தன் குற்றம் காண்பதில்லை.	4. தப்புலென்னுவாரு தம தப்புலு எருகரு

ஃ. நகைமூட்டுப் பழமொழிகள்

தமிழ்	தெலுங்கு
1. சகுனஞ் சொல்லுமாம் பல்லி, கழுநீர்ப்பானையில் விழுமாம் துள்ளி	1. அந்தரிகி சகுனம் செப்பே பல்லி, குடிதிலோ பட்டட்லு
2. தங்கச்சிக்குச் சோறு போட்டுத் தம்பிடி கணக்கு எழுதுவானும்	2. அக்கசெல் லெள்ளாகு அன்னம்பெட்டி லெக்க ராசினட்லு
3. இரும்பு அடிக்கும் இடத்தில் ஈக்கு என்ன வேலையாம்!	3. இனு கரிகெ சோட்ட ஈ கலகு ஏமி பணி?
4. பேச்சுக்கு எங்கள் வீட்டுக்கு வா, சோற்றுக்கு உங்கள் வீட்டுக்குப் போ	4. மாட்டகு மா இன்ட்டிகி, கூட்டிகி மீ இன்ட்டிகி.
5. குதித்துக் குதித்துக் குத்தினாலும் அதுவே கூலி, குதிக்காமல் குத்தினாலும் அதுவே கூலி	5. எகிரெகிரி தன்சினா அன்தே கூலி, எகரக தன்சினா அன்தே கூலி

ரு. பிறிதுமொழிதலாக அமைந்த உவமைப் பழமொழிகள்

தமிழ்	தெலுங்கு
1. காட்டில் எரித்த நிலா	1. அடவிலோ காசின வெண் ணெல
2. பழுத்த மரத்துக்கே பல திசையிலும் கல்லடி	2. காசின செட்டுகே கர்ர தெப்பலு
3. நாய் வாலை நிமிர்த்த முடியாது	3. குக்க தோக சக்கனவு துந்தா?
4. குரைக்கும் நாய் கடிக்காது	4. மொறிகெ குக்க கறவது

உலகில் பல்வேறு இனத்தாரிடையிலும், பல்வேறு மொழியாரிடையிலும் ஒரே கருத்துள்ள பழமொழிகள் வழங்கலாம். எனினும், குறிப்பிட்ட ஓர் இனத்துப் பிரிவினரிடையில் வழங்கும் பழமொழிகள் கருத்தால் மட்டுமன்றிச், சொல்லாலும், பொருளாலும், தொடராலும் ஒத்திருக்கின்றன என்பதை மேற்கண்டவற்றால் அறிகிறோம். ஏறத்தாழ இவை மொழி பெயர்ப்பு போலவே காணப் படுதலால் பழந்தமிழ்ப் பழமொழிகளே புதுத் திரவிட மொழிகளில் திரிபுற்றுக் காணப்படுகின்றன எனலாம்.

———

நீரின்றி அமையாது உலகு

[செ. ச. சீனிவாசன், பி.இ., எம்.எசி. (பொறியியல்)]

வள்ளுவப் பெருந்தகை மக்கள் வாழ்க்கைக்கு நீர் அச்சாணி போன்றது என்ற முக்கால உண்மையை—நீரின் இன்றியமையா மையை—அழகாக, "நீரின்றி அமையாது உலகு" என்று தம் மணிக் குறளில் மொழிந்துள்ளார். இதை ஒட்டியே நல்லிசைப் புலமை வாய்ந்த மெல்லியல் ஔவையும் "கொன்றை வேந்தனில்",

"நீரகம் பொருந்திய ஊரகத்து இரு" என்றும்,

தனிப்பாடலில்,

"வரப்புயர நீருயரும்
நீருயர நெல்லுயரும்
நெல்லுயரக் குடியுயரும்
குடியுயரக் கோலுயரும்
கோல் உயரக் கோன் உயரும்"

என்றும் பாடியுள்ளார்.

மேற்கூறியவற்ருல் "நீரின்றி அமையாது உலகு" என்ற கருத்தின் உண்மையை எவராலும் மறுக்க முடியாது. அஃது எவராலும் மறக்கவும் இயலாது, எளிதில் இசைவைத் தெரிவிக்க வேண்டிய தொன்ருகும். இங்ஙனமிருக்க, இவ் வாராய்ச்சி எற்றுக்கு? பாமரர்களே அறிந்த பொருள் பற்றிப் பொறியாளர் களுக்கு அறிவிக்க முயல்வது எற்றுக்கு? நீரில் என்ன புதிர் உள்ளது? என அடுக்கடுக்காக வினவலாம்.

இதைப் போன்றே மூதறிஞர் பலர், "உள்ளங்கை நெல்லிக் கனி" போன்று தெரிந்த பொருள்களில் புதிர் உள்ளது. யாவரும் மேற்போக்காக அறிந்துள்ளனரே அன்றி நுண் கருத்தை முற்றிலும் அறிந்ததில்லை. 'கைப்புண்ணைக் காணக் கண்ணாடி தேடும்', நிலையில் உள்ளனர் என்று தெள்ளத் தெளியக் காட்டி யுள்ளனர். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் தயாசெனிசு பட்டப்பகலில் கடை வீதியில் விளக்கு ஒன்றை ஏந்திக்கொண்டு சென்ருராம். வீதியில் உள்ளோர் திகைத்து எதைத் தேடுகின் றீர்கள்? என வினவ, அன்னார் "நான் மனிதனைத் தேடுகின் றேன்" என்ருராம். குறிப்பாக, "நீவிர் மக்கள் இனத்தைச்

சார்ந்தவர் எனக் கருத அருகதை அற்றவர்'' எனச் சுட்டிக் காட்டி யுள்ளார். அவருக்குப் பின்னர் வந்த சாக்ரடீசு ''மனிதனே! உன்னை அறிவாயாக'' என்றார். இவ்வாறு கூறி, மனிதன் தன்னைப் பற்றியும் தன் ஆற்றலைப் பற்றியும் அறிந்திலன் என்று சுட்டிக் காட்டியுள்ளார். கலிலியோ ''கண்ணுக்குப் புலப்படாத அண்டங் களைப் பற்றி எளிதில் அறிய இயலுகிறது, எனினும் அருகிலுள்ள நீரைப்பற்றி ஒன்றுமே அறிய இயலவில்லை''. என்று ஏங்கினாராம். அண்மையில் நோபல் பரிசு பெற்ற மருத்துவர், அலெக்சுகரெல் என்பார் ''மனிதன் ஒரு புதிர்'' என்ற நூலில் மனிதன் தன்னை அறிந்திலன் என்று வியந்து அவன் அறியாமையை நீக்க மன மிரங்கி எழுதியுள்ளார். வள்ளுவப் பெருந்தகையும் உலகப் பொது மறையாம் திருக்குறளில், ''வான் சிறப்பு'' என்ற அதிகாரத்தில் மழையைப் பற்றியும் மக்கள் இனத்திற்கு அதன் இன்றியமையா மையையும் விளக்கி அழகாகத் தம் மணிக்குறளில் பல சொல்லக் காமுருது நுண்ணிய கருத்துக்களைத் திண்மையாகத் தீட்டியுள்ளார். இவரை ஒட்டியே தமிழ் மூதாட்டியாம் ஔவையாரும், ''மாரியல்லது காரியமில்லை'' என அறுதியிட்டுள்ளார். ஒழுக்கத்திற்கு மாரியால் உண்டாகும் நீரே அடிப்படை என்றும், சுருக்கமாக நாகரிகத்தின் அடிப்படையே நீர் என்றும், ஏனைய எல்லா நாகரிகமும் நீர் நாகரிகமே என்றும் மொழிந்துள்ளார்.

மேற் கூறியவற்றால் ஒரு பொருளைப் பற்றி யாவரும் மேலாகப் பொதுவுற அறிந்திருப்பதால் அதைப்பற்றிய நுண்ணறிவு பெற்றனர் எனக் கொள்ளக்கூடாது எனப் புலப்படும். மாறாக, ஒரு பொருளைப் பற்றிப் பரவலாக யாவரும் அறிந்துள்ளதே அதன் இன்றியமையாமைக்குச் சான்று. ஆம் : நீர் ஓர் அதிர்ச்சி தரவல்ல பொருள் அன்று. ''நீரின்றி அமையாது உலகு'' என்ற வள்ளுவத் திருமகனாரின் வாக்கும் ஒரு பொதுச் செய்தி அன்று; புதுச் செய்தியும் அன்று. புதுப் பொருளும் அன்று. நீரைப்பற்றி நுணுகி அறிவது இன்று மிக மிகத் தேவையான ஒன்றாகும்.

நீர் ஒரு பொருள் அன்று. அஃது நிலத்தைவிடப் பரந்துள்ளது எனினும் பொன்னைவிட அருமையுடையது. மனித இனத்திற்கு அரசியலை விடத் தேவையானது எனினும், அது பொருள் அன்று. உணவு, உடை, இருப்பிடம் இம் மூன்றும் பெற நீரைப் பயன்படுத்து கின்றோம். நாம் மின்சார உற்பத்தி செய்கின்றோம். நீரைப் பங்கீடு செய்கின்றோம், வீணாக்குகிறோம், மாசு படுத்துகின்றோம். நீர், தனிப்பட்டவர்களுக்கிடையே—பொதுமக்களிடையே (குழாய்ச் சண்டைக்கும்) நாடுகளுக்கிடையே சச்சரவுகளுக்கும் மூல காரண மாகின்றது. நீர், உடல் நலத்திற்கும், பொருள் ஈட்டுவதற்கும்,

வெள்ளத்தால் ஏற்படும் கொள்ளை நோய்க்கும், பொருள் அழிவிற்கும் காரணமாக அமைகிறது. இதனைத் தெய்வப் புலவர்,

> "துப்பார்க்குத் துப்புஆய துப்புஆக்கித் துப்பார்க்குத்
> துப்பாய தூஉம் மழை"　　　　எனவும்,

> "கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய்மற் றாங்கே
> எடுப்பதூஉம் எல்லாம் மழை"　　　　எனவும்,

அழகாக அருளியுள்ளார்.

குரங்கிலிருந்து தோன்றிப் பின்பு வால் அற்று, காட்டில் விலங்குகளுடன் வாழ்க்கை நடத்திய மனிதன் நாகரிகம் பெற்று. நாடமைப்பதற்கு வழிகாட்டியது நீரன்றி, வேறொன்றுமில்லை. ஏன்? மனிதன் காட்டிலிருந்து, நீரோடை காட்டும் பாதையிலேயே நடந்து சிறுகச் சிறுக வாழ்க்கையை வளமாக்கிக் கொண்டான். தொன்று தொட்டு வளர்ந்த நாகரிகங்கள் யாவும் ஆற்றங்கரைகளிலும், கழிமுகங்களிலும்தான் திகழ்ந்தன. எகிப்து நாகரிகம், வளங் கொழிக்கும் நைல் ஆற்றினால் தோன்றியது. சிந்து, கங்கை, கிருட்டிணா, பொன்னி ஆற்றங்கரைகளிலே, சமவெளிகளிலே மிளிர்ந்த நாகரிகங்களைப் பற்றிக் கூறவும் வேண்டுமோ? "சோழ வள நாடு சோறுடைத்து" என்று ஔவை மொழிந்தது காவிரியின் அருளால் அன்றோ? திரை கடல் ஓடித் "திரவியம்" தேடியதும் நீர் மேல்தான். யவனர்கள் பாண்டி நன்னாட்டின் முத்தைப் பெறக் கடல் கடந்துதான் வந்தனர். கடாரம் கடந்தான் கங்கை கொண்ட சோழன். பண்டைய மனிதன் மழையை வருணன் என்று வருணித்தான்; இடிக்கு இந்திரனைத் தலைவனாக உருவகித்தான். கிரேக்கர்கள் தாம் வணங்கும் கடவுளர்குழாம் மாரியின் உறைவிடமான வானத்தை உறைவிடமாகக் கொண்டுள்ளனர் என்று கருதினர். எனவே, இயல், இசை, நாடகம், ஆடல், பாடல் யாவும் ஆற்றங்கரைகளிலே ஆற்றோட்டம் போல் தங்கு தடை இன்றிப் பொங்கிப் பெருகி நாகரிகப் பரிமாற்று, பண்டமாற்று, இனக்கலப்பு, மொழிக்கலப்பு, அறிவியற் பரிமாற்று முதலியவை நீரின் வழியாக நிகழ்ந்தன. இங்ஙனம் பல மொழிகள் பேசும் பல நாட்டு நாகரிகங்கள் தோன்றின.

நீர் வியக்கத்தக்க விந்தையான ஒரு கூட்டுப்பொருள். இஃது உயிர் வளி, நீர் வளி முதலியவற்றின் சேர்க்கையினால் உண்டான கூட்டுப் பொருள். ஆயினும், அதன் தன்மையே தனித்தன்மை. உயிர் வளியைப் போன்றோ நீர்வளியைப் போன்றோ அமையாது தனித்தன்மை பொருந்திய தனிப்பொருளாகும். மெல்லியதாகத் தோன்றினும் கல்லையும் கரைக்கவல்லது. ஏன்?

மலையைச் சிறு துகள்கள் ஆக்குவது வானினின்று இழியும் மணி நீர்த்துளிகளே. மண் தோன்றுவதற்கு நீர்தான் காரணம். இந்த நிலம் பரிதியினின்று தீக் கோளமாகப் பிரிந்து கல்லாகிக் குளிர்ந்து மெல்லிய நீரால் கணக்கற்ற ஆண்டுகளில் தாக்கித் தகர்க்கப்பட்டுப் பொடிந்து மண்ணானது. புவியியல் வல்லுநர் இதனை வானிலைத் தாக்கம் என்பர். அன்னர், ஆறுகளை மனிதனாக உருவகிப்பர்; வானினின்று தோன்றும்போது பச்சிளங்குழந்தையாம். மலையில் வீழ்ந்து கல்லையும் காட்டையும் தாக்கித் தூளாக்கி, தூக்கிச் செல்லும் போது இளமைப்பருவமாம். மண்ணைத் தூக்கிச் செல்லும் திறமும் தூக்கிச் சென்ற மண்ணைக் கைவிடும் ஆற்றலும் சமமாக இருக்கும் நிலை முதிர்ச்சியுற்ற நிலையாம். ஆறு இறுதியில் கடலில் கலக்கும் நிலை, தள்ளாடிக் கோலூன்றிப் பார்வை இழந்த முதுமைப் பருவமாம். வெள்ளப் பெருக்கால் திண்மையான அணைகள் அழியும். காடுகளும், வீடுகளும் இம் மெல்லிய நல்லியல் நங்கை நல்லாள் திருவளர் செல்வி நீரம்மையால் கடிது அடித்துச் செல்லப்பட்டுக் கடலில் சேர்க்கப்படும். வண்டலை அடித்துச் சென்று சமவெளி களில் பரப்பி நிலத்தை வளமாக்குவது நீர். நீர் எதையும் கரைக்க வல்லது. நீர் எங்கும் உலகெங்கும் தோன்றுவதாலும் தனிப்பட்ட பருப்பொருள் வேதியியல், பண்புகளால் செழுமை அடர்த்தி விழுக்காடு, தட்ப வெப்பநிலை போன்ற அறிவியல் கூறுகளுக்குத் தரமாக அமைகிறது.

நீர்ப்பரப்பு நிலப்பரப்பைவிடப் பெரிதாகும். நீர்ப்பரப்பு பூவுல கின் ஐந்தில் மூன்று பங்கு; நிலப் பரப்போ எஞ்சியது. பூமி நீரால் சூழப்பட்டால் 240 மீட்டர் ஆழம் இருக்கும். பூமியில் மொத்த தூய நீர் 9, 000 கன மைல்கள். இஃது ஆண்டொன்றுக்கு 85 செ. மீ. மழைப் பொழிவால் விளைவது.

நீரின் தேவை வியக்கத்தக்கது. ஆழாக்கு அரிசி விளைவிக்க 1.8 டன் நீர் தேவை; 1 பவுண்டு அரிசிக்கு 4·10 டன் நீர் தேவை. 1 பவுண்டு கோதுமைக்கு 500 பவுண்டு நீர் தேவை. 1 பவுண்டு கத்தரிக்காய்க்கு 380 பவுண்டு நீர் தேவை. 1 பவுண்டு காய்கறிக்கு 608 பவுண்டு நீர் தேவை. 1 வாழைப்பழத்திற்கு 304 பவுண்டு நீர் தேவை. 1 முட்டைக்கு 1 டன் நீர் தேவை. 1 மனிதனுக்குத் தேவையான 2,500 கலோரி உணவு தயாரிக்க நாளொன்றுக்கு 33 டன் நீர் தேவை. இக் கணக்கின்படி ஒருவர் 70 ஆண்டுகள் வாழ்ந்தால் உணவுக்கே 7, 50, 000 டன் நீர் தேவை. 1 முழம் துண்டுக்கு 600 பவுண்டு நீர் தேவையாகிறது. 1 டன் எஃகு தயாரிக்க 290 டன் நீர் தேவை. 1 டன் விறகிற்கு 304 பவுண்டு நீர் தேவை. ஒரு பவுண்டு எடையுள்ள செடி, கொடியில் ¾ பவுண்டு

நீர் உள்ளது. பருவ காலங்களில் 500 பவுண்டு நீரை உட்கொள்ளும். நீர் விடாய் கொண்ட மனிதன் உறிஞ்சுவதைப்போல இருபது மடங்கு உறிஞ்சுமாம். மேற்கூறிய புள்ளிவிவரங்களைவிட வியக்கத்தக்க அளவில் உண்ணும் பொருள்களில் நீர் மிகுதி. ஏன்? மனிதன், மரம், செடி, கொடிகளின் எடையில் பெரும் பங்கு நீர்தான்.

அரிசி, கோதுமை முதலியவற்றில் 13 நூற்று விழுக்காடு நீராகும்; கம்பு உளுந்து பயறு முதலியவற்றில் 10 நூற்று விழுக்காடும் கீரைகளில் 75 நூற்று விழுக்காடு முள்ளங்கி, கத்தரிக்காய் முதலியவற்றில் 90 விழுக்காடும், உருளைக் கிழங்கு, மீன் முதலியவற்றில் 75 நூற்று விழுக்காட்டுக்கு மேலும் நீர் உள்ளது; பாலில் 90 நூற்று விழுக்காடும், முட்டையில் 75 நூற்று விழுக்காட்டுக்கு மேலும் நீர் உள்ளது. மனித உடலில் ஏறக்குறைய 65 நூற்று விழுக்காடு நீராகும். தசையில் 75 நூற்று விழுக்காடும், இரத்தத்தில் 90 நூற்று விழுக்காடும் நீர் உள்ளது. நீர் உடலுக்கு வளர்ச்சியையோ ஆற்றலையோ தராவிட்டாலும் உடலுக்குப் பல இன்றியமையாத பயன்களைக் கொடுக்கிறது. உணவைச் செரிக்கச் செய்து இரத்தத்துடன் கலக்கச் செய்யவும் உடலில் ஏற்படும் கழிவுப் பொருள்களை வெளியேற்றவும் குருதியை நீர்ம நிலையில் வைத்திருக்கவும், நுண்ணுயிர்கள் உயிருடன் இருக்கவும் செரிப்பு நீர்கள் நன்கு சுரக்கவும் நீர் கட்டாயமாகின்றது. உடலின் வெப்பம் சமநிலையில் இருக்கவும் நீர் பயன்படுகின்றது. உணவின்றிப் பல கிழமைகள் வாழலாம். ஆனால், நீரின்றிச் சில நாள்களுக்குமேல் உயிர் உடலில் தங்காது.

மேற்கண்ட புள்ளிவிவரங்கள் நீரை எந்த அளவுக்கு இயற்கை பயன்படுத்துகிறது என்பதைக் காட்டுகிறது. உயிருக்கு உயிராக இருப்பது நீர் என்பது புலப்படும். இங்ஙனம் இருக்க மழையின் அளவும், உலகின்கண் உள்ள நீரின் அளவும் என்றுமே மாறாது இருக்கும்போது நீரின் தேவை பெருமளவில் பெருகிக் கொண்டே வருகிறது. இந்திய நிலத்தின்மீது ஆண்டுதோறும் ஓடும் நீரின் அளவு 1,525 மில்லியன் ஏக்கர் அடி, ஊற்றுநீர் அளவு 344 மில்லியன் ஏக்கர் அடி என்று கணக்கிடப்பட்டுள்ளது. மக்கள் தொகை சென்ற நூற்றாண்டில் இருந்ததைப்போல் தற்போது இரு மடங்காகும். இந்த நூற்றாண்டின் முடிவில் இன்று இருப்பதைப்போல இருமடங்காகும். எனவே நீரின் தேவை அஞ்சத்தக்க அளவு விரியும். அமெரிக்கா மற்றும் நாகரிகம் மிக்க மேலை நாடுகளிலும் உள்ள மக்கள் நீரை மாசு படுத்துவதில் வல்லுநர்கள்! தானியங்களின் எண்ணிக்கை அளவு கடந்து பெருகுவதால்

நச்சுப்படுத்தப்பட்டு உள்ளதாம். சப்பானின் நிலைமை தூயகாற்றை விலைக்கு வாங்கும் அளவுக்கு வந்துவிட்டதாம். கழிவுப்பொருள்களை ஆறுகளிலும் நீர் நிலைகளிலும் கண்மூடித்தனமாகக் கலந்து நச்சுப்படுத்தி அவதியுறுகின்றனர். மாசு படுத்துவதைக் கட்டுப் படுத்தச் சட்டங்கள் பல சடுதியில் நிறைவேற்றுகின்றனர். அமெரிக்கா, பிரான்சு, உருசியா, சப்பான், சீனு முதலிய நாடுகள் கதிரியக்க ஆய்வுகள் செய்வதால் கடலையே நச்சுப்படுத்துகின்றனர். சப்பான் நாட்டில் குடிநீர் பற்ருக்குறையால் ஊற்றுநீரை அதிகமாக வெளியேற்றிப் பல இடங்களில் 3 மீட்டர் முதல் 6 மீட்டர் வரை நில மட்டம் தாழ்ந்து விட்டதாம். பல கட்டடங்கள் பைசா கோபுரமாகச் சாய்ந்துள்ளனவாம்.

தேவை அளவின்றிப் பெருகுவது ஒரு புறமிருக்க அருகிவரும் நீரை இவ்வாறு மாசுபடுத்தலாமா? பொய்யில் புலவர் இந் நெருக்கடியினின்று நீங்குவது எங்ஙனம் என்று கூறியுள்ளார்:

''ஆகாறு அளவிட்டி தாயினும் கேடில்லை
போகாறு அகலாக் கடை''

''வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்
வைத்தூறு போலக் கெடும்.''

பொறியாளர்கள் திருவள்ளுவர் வாயுறைவாழ்த்தில் மேற்கூறிய அறவுரைகளையும் சிரமேற்கொண்டு விரைந்து செயல்பட வேண்டியது எங்ஙனம்? நீர் நெருக்கடி வரும் முன்னர் காக்கவேண்டும். மழையின் அளவை அளக்க மழைமானிகள் அதிகமாக நிறுவ வேண்டும். ஆற்றில் போகும் நீரை அளவிடவேண்டும். நீர்த் தேக்கங்கள், ஏரிகள் குளங்கள் முதலியவை மண்ணுல் தூறுவதைத் தடுக்க நில அரிப்பைத் தடுக்கவேண்டும். அவற்றினின்றும் கால்வாய்களிலும், நிலத்தின் அடிக்கு ஊறிச்செல்லும் நீரையும் ஆவியாகி வானத்திற் செல்லும் நீரையும் குறைக்கவேண்டும். நீரை வீணுக்காது அளவறிந்து பங்கீடு செய்யவேண்டும். உணவுப் பொருள்களை விளைவிக்க ஆவன செய்தல்வேண்டும். நீரை மாசு படுத்துவதைத் தவிர்க்கவேண்டும். வெள்ளக் கெடுதியினை நீக்க வேண்டும். கடல்நீரைக் குடிநீராக மாற்றவேண்டும். ஊற்றுநீரை அளவறிந்து பயன்படுத்தவேண்டும். செயற்கைமழை பொழிவிக்க, கடிதே ஆராய்ச்சி நிகழ்த்தி, ''பெய்யெனப் பெய்யும் மழை'' என்ற நிலையைக் கடிதே உருவாக்கவேண்டும். ஒரு வடிநிலத்தினின்று கடலில் வீணுகக் கலக்கும் நீரை, நீர்ப் பற்ருக்குறையால் அவதியுறும் வடி நிலத்துக்குச் செலுத்தவேண்டும். மேலும் அறிஞர்பலர், நீர் அருகி வருவதை அறிந்து அதைப் பற்றி ஆராய்ச்சி நடத்தப்

"பல நாட்டு நீர்மவியல் பத்தாண்டுகள்'' என 1964-74, ஆண்டுகளை முடிவு செய்துள்ளனர்.

'மால்தூஸ்' என்பவர் மக்கள் தொகைப் பெருக்கத்தைப்பற்றிப் பல ஆண்டுகளுக்கு முன்னர் எச்சரித்து உள்ளார். ஆனால், அவர் கணித்தபடி மக்களினம் பூண்டற்றுப் போகவில்லை. ஆங்கிலத்தில் "தேவைதான் புதுக்கண்டுபிடிப்புகளுக்குத் தாய்'' என்ற முதுமொழி உண்டு. எனவே வள்ளுவர் நெறியில் அருமை உடைத்து என அயராது முயற்சி செய்வோமானால் கடைத்தேறி வழியேற வழியுண்டு. நீர் அருக அருக நீரைப் பற்றிய அறிவு பெருகி வளமாகி வாழ வழியுண்டு. கடைப்பிடிப்போமாக!

———

நம்முடைய மக்கள் முன்னேற...

தமிழ் மக்களிற் பெரும்பாலார் ஒருவர்பாலுள்ள குற்றங்களை மற்றவர் எடுத்துப் பேசுபவராய்ப் பகைமையையும் மனவருத்தத்தையும் பரவச் செய்து வருகின்றனர்கள். இத்திய பழக்கத்தை ஒழித்தால் அன்றித் தமிழ்மக்கள் முன்னேற்றமடைவது சிறிதும் முடியாது. ஒருவர்பாலுள்ள குற்றங்களை மறைத்து அவர்பாலுள்ள நலங்களை எடுத்துப் பேசுவதற்கே எல்லாரும் விடாப்பிடியாய்ப் பழகுதல்வேண்டும். ஒவ்வொருவரும் தங்கள் தங்களால் இயன்ற உதவியை மற்றவர்களுக்கு மனமாரச் செய்து, அவர்களை மேன் மேல் உயர்த்தி விடுதல்வேண்டும். தாம் செய்யும் உதவிக்குக் கைம்மாறுவதொன்றை எதிர்பார்த்திருத்தல் ஆகாது. அப்போதுதான் நம்முடைய மக்கள் உண்மையான முன்னேற்றத்தை அடைவார்கள்.

—மறைமலையடிகள்

மறைமலையடிகளார் அறிவுரைக்கோவை, பக். 203-204

வானவெளியில் இன்பப் பயணம்

[என். கே. வேலன், பி.ஏ.]

வானவெளியில் மக்கள் பயணம் செய்வதற்கு இப்பொழுது ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. வானவூர்திகளைப்போல் விண் கலன்களையும் போக்குவரத்துக்குப் பயன்படுத்தலாம் என அறிஞர் கள் கூறுகின்றனர் நிலவில் இறங்கிய 11ஆம் ஆண்டு நிறைவு விழா அமெரிக்க நாட்டில் கொண்டாடப்படுகின்றது. விண்கலத் தில் ஏறிப் பயணம் செய்வதற்குத் தொழில் தலைவர்கள் பலர் இடம் பிடித்து வைத்துள்ளனர். அவர்களுக்கு இசைவுச் சீட்டுகளும் வழங்கப்பட்டுள்ளன.

இந்த விண்கலம் வானவூர்தியைப் போலிருக்கும். எரிபொருள் களை ஒரு தொட்டியில் வைத்து அதனுடன் இணைப்பார்கள். அதி லிருக்கும் ''ராக்கெட்டு'' விண்கலத்தை மேலே அனுப்பிவிட்டுக் கீழே விழுந்துவிடும். அதனை எடுத்து மீண்டும் மீண்டும் பயன் படுத்தலாம். 'கொலம்பியா' என்ற புதிய விண்கலத்தில் அமெரிக்க வீரர்களை முதலில் அனுப்பி ஆய்வு செய்வார்கள். இத் திட்டம் நிறைவேறினால் பிற கலன்களை வானவெளியில் செலுத்துவார்கள். வேறு நாடுகளும் ஆராய்ச்சியில் பங்குகொள்ள முன்வந்துள்ளன.

விண்கலன்களைச் செலுத்தும் நிலையங்களும், அவற்றை அடக்கியாளும் நிலையங்களும், இயங்கவைக்கும் நிலையங்களும், விண்கலன்கள் வந்து இறங்கும் பாதைகளும் 'கேப் கென்னடி' என்னும் இடத்தில் அமைக்கப்பட்டுள்ளன.

வானவெளி என்பது காற்றில்லாத வெற்றிடமாகும். அஃது எல்லையற்றதாகப் பரந்து விரிந்து கிடக்கின்றது. பூமியின் ஈர்ப்பு ஆற்றலுக்கு அப்பால் சென்றுவிட்டால் எடையற்ற நிலை வரு கின்றது. இந்த நிலையில் ஆராய்ச்சிகள் நடைபெறுகின்றன. 'சல்யூட்-6' என்ற ஆய்வுக் கலத்தில் 175 நாள்கள் தங்கி இருந்து ஆய்வுகள் நடத்திவிட்டு இரண்டு சோவியத் வீரர்கள் பாதுகாப் பாகப் பூமிக்குத் திரும்பி வந்தனர். வானவெளியில் நீண்டகாலம் வாழமுடியும் என்பதனை நடைமுறையில் செய்து காட்டியுள்ளனர்.

அமெரிக்க நாட்டினரும் சோவியத் நாட்டினரும் போட்டி யிட்டுக்கொண்டு இந்த ஆராய்ச்சிகளில் ஈடுபட்டுள்ளனர். இது

வரை வானவெளியில் இரண்டாயிரத்திற்கு மேற்பட்ட செயற்கைக் கோள்களை அனுப்பி ஆராய்ச்சிகள் செய்துள்ளனர். 1969 இல் மனிதன் நிலவில் இறங்கியபிறகு பல்வேறு விண்கலன்கள் செவ் வாய், புதன், வியாழன், வெள்ளி முதலிய கோள்களுக்கு அனுப் பப்பட்டன. சனி மண்டிலத்திற்கு அனுப்பிய விண்கலன் 1981 இல் அங்குப்போய்ச் சேரும் எனக் கூறப்படுகின்றது. ஐந்தாறு முறை விண்கலன்களை நிலவில் இறக்கிப் பார்த்தனர். 12 வான வீரர்கள் நிலவில் இறங்கி 96 கிலோமீட்டர் தொலைவு நடந்து ஆய்வுகள் நடத்தியுள்ளனர்.

இவ் வாராய்ச்சிகளில் நன்மையும் தீமையும் கலந்துள்ளன. நீர்வளத்தையும் நிலவளத்தையும் பெருக்கலாம். கனிப் பொருள் களைக் கண்டுபிடிக்கலாம். அதனால் பொருளாதாரம் முன்னேற்ற மடையும். உலக நாடுகளுடன் தொடர்பு கொள்ளலாம். வான உலகங்களைப் பற்றிய செய்திகளையும் தெரிந்துகொள்ளலாம். ஆயினும் உலக நாடுகளுக்குள் பகைமை ஏற்பட்டால் விண்கலன் களிலிருந்து போர்புரிவார்கள். பகைவர்களை எதிர்த்து அழிப் பதற்கு விண்கலன்களைப் பயன்படுத்துவார்கள். ஆதலால் ஒருவ ரோடு ஒருவர் மோதிக்கொள்ளக் கூடாது என்று உலக நாடு களின் தலைவர்கள் எச்சரித்துள்ளனர்.

இக் காலத்தில் ஒற்றுடலுக்கும் விண்கலன்களைப் பயன் படுத்துகின்றனர். எல்லாவற்றையும் ஒற்றரைக் கொண்டு அறிதல் ஒவ்வோர் அரசாங்கத்தின் கடமையாக இருக்கின்றது.

''எல்லார்க்கும் எல்லாம் நிகழ்பவை எஞ்ஞான்றும்
வல்லறிதல் வேந்தன் தொழில்'' —குறள்.

நம்மை வலிமைப்படுத்திக்கொண்டு தற்காப்பினைத் தேடிக்கொண் டால் பகைவருடைய செருக்குத் தானாகவே அடங்கிவிடும்.

''வகையறிந்து தற்செய்து தற்காப்ப மாயும்
பகைவர்கண் பட்ட செருக்கு'' —குறள்.

நமது நாட்டு அறிஞர் பலர் விண்வெளி ஆராய்ச்சியிலும், அணு ஆராய்ச்சியிலும் திறமை பெற்றுள்ளனர். 'ஆரியபட்டா' 'பாஸ் கரா' என்னும் செயற்கைக் கோள்கள் நம்முடைய அறிஞர்களின் முயற்சியால் வானவெளியில் செலுத்தப்பட்டன. இரண்டாவது முயற்சியில் சிறிது தடுமாற்றம் ஏற்பட்டது. மீண்டும் திருத்தங்கள் செய்து அனுப்பினால் முழு வெற்றி கிடைக்கும்.

''முயற்சி திருவினை யாக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும்'' —குறள்.

வானவெளியில் குடியிருப்புக்கள் கட்டுவதற்கு அமெரிக்கர்கள் திட்டமிட்டுள்ளனர். ஏறக்குறைய 50 ஆண்டுகளில் வானவெளி யிலும் நிலவிலும் குடியேற்றங்கள் வரலாம் எனக் கூறப்படு கின்றது. வானவெளியில் இருபதாயிரம் மக்கள் வாழ்வதற்கு ஏற்ற குடியிருப்பு ஒன்று அமைக்கலாம் எனச் 'செரார்டு ஒனீல்' என்ற அமெரிக்க அறிஞர் கூறுகின்றார். கதிரவன் ஈர்ப்பும், நிலவின் ஈர்ப்பும், பூமியின் ஈர்ப்பும் சம நிலையிலிருக்கும் இடத்தில் அதனை அமைக்க முடியும் என்பதே அவர்தங் கருத்தாகும்.

மிகப் பெரிய கண்ணாடி வில்லைகளை விண்கலன்களில் வைத்துக் கதிரவனின் ஒளி இரவு நேரத்திலும்கூடப் பூமிக்கு வந்து சேரும்படி செய்வார்கள். வானவெளியில் மூன்று கிலோமீட்டர் நீளமுள்ள ஆய்வுக்கூடம் அமைப்பதற்கு முயற்சி செய்து வருகின் றனர். கதிரவனின் வெப்ப ஆற்றல் மின் ஆற்றலாக மாற்றிப் பூமிக்கு அனுப்பப்படும். இதன் பொருட்டு நிலவில் மின்சார நிலையம் அமைக்கப்படும்.

தரையிலிருந்து செய்யமுடியாத ஆராய்ச்சிகளையெல்லாம் வானவெளியில் செய்து முடிக்கின்றனர். வானவெளியில் மிதந்து கொண்டிருக்கும் ஆராய்ச்சி நிலையங்களுக்கு வேண்டிய பொருள் களைச் சிறிய விண்கலன்களில் எடுத்துக்கொண்டுபோய்க் கொடுக் கின்றனர். பெரிய விண்கலன்களுக்கு வேண்டிய எரிபொருள் களும், அவற்றிலிருந்து ஆய்வுகள் நடத்தும் அறிஞர்களுக்கு வேண்டிய உணவுப் பொருள்களும் சிறிய விண்கலன்களின் மூலம் அனுப்பப்படுகின்றன. ஓரிரண்டு ஆண்டுகளில் இன்பப் பயணி களையும் விண்கலன்களில் ஏற்றிச்செல்வார்கள். வானவெளியில் பயணம் செய்யும்போது படைப்பின் வியத்தகு செயல்களைக் கண்டு மகிழலாம்.

———

அபேட்சகர் வேட்பாளராயினர்!

முன்பு வேட்பாளர் என்ற சொல்லை நானும் ஒரு நண்பரும் பயன்படுத்தியபோது பலர் அதைக் கேட்டு எள்ளி நகையாடினார்கள். வேட்பு என்ன— ஆளர் என்ன என்று கிண்டல் பேசினார்கள். ஆனால் இப்போது அபேட்சகர் எல்லாம் வேட்பாளராகி விட்டார்கள்!

—**பேரறிஞர் அண்ணா**

மறைமலையடிகளாரும் நாட்குறிப்பும்

மறைமலையடிகளார் 1898 முதல் 1950இல் இறையடி சேரும் வரை முறையாக நாட்குறிப்பு எழுதிவந்துள்ளனர். அவ்வவ் வாண்டில் அச்சிடப்பெற்ற நாட்குறிப்பினை விலைக்கு வாங்கி அதன்கண் நாடோறும் முறையாக எழுதி வந்தனர். ஆனால், 9—9—1946 முதல் 6—11—1949 முடியவும் 7—11—1949 முதல் 14—8—1950 முடியவும் $5\frac{1}{2} \times 4$ அங்குல கோடிட்ட குறிப்பேடு களைத் தாமே ஆக்கச் செய்து அவற்றின்கண் எழுதியுள்ளனர். அடிகளார் எப்போதும் நாட்குறிப்பினை ஆங்கிலத்திலே எழுதி வருவதுதான் வழக்கம்.

15—8—1950 முதல் அவர்கள் இன்னுயிர் 15—9—1950இல் பிரியும் வரை நோயுற்றுப் படுக்கையில் இருந்தமையால் நாட் குறிப்பினை எழுதவில்லை. 1898 முதல் அடிகளாரால் எழுதப்பெற்ற நாட்குறிப்பிலுள்ளவை மாணவர் பயிற்சிக்குரிய கோடிட்ட ஏடுகளில் (Exercise Note-books) படி எடுக்கச் செய்து பாதுகாப் பாக இப்போது வைக்கப்பெற்றிருக்கின்றன.

மறைமலையடிகள் நூல்நிலையமும் நாட்குறிப்பும்

17—9—1948 நாட்குறிப்பில் எழுதப்பெற்றிருப்பது

"As directed by my Lord Ambalavanar with Ammai I wrote a letter to Mr. V. Subbiah Pillai younger brother of my late son-in-law V. Thiruvarangam Pillai asking him to purchase my Mansion and Library.

"May our Lord grant us to get a handsome price for my Mansion and Library."

15—9—1950இல் அடிகளார் இறையடி சேர்வதற்குமுன் 9—9—1950இல் நல்ல நினைவோடு எழுதிய விருப்ப ஆவண (Will)த்தில் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் தமது நூல் நிலையத்தை ஏற்றுப் பொதுமக்களுக்குப் பயன்பெறும்படி நடத்து வதற்கு விரும்பினல் அதனிடம் ஒப்புவிக்கும்படி எழுதியுள்ளனர்.

ஆனால் அடிகளார் எழுதிய விருப்ப ஆவணம் நல்ல நினைவோடு எழுதப் பெறவில்லை என்று 1953இல் உயர்நீதி மன்றத்தில் நடைபெற்ற முதல்நிலை வழக்கிலும், 1957இல் நடை பெற்ற மேல்நிலை வழக்கிலும் வழங்கப்பெற்ற தீர்ப்புக்களின்படி 'மறைமலையடிகளார் நூல்நிலையம்' சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகமே நடத்த வேண்டுமென்று முடிவாகியது. மேல்நிலை வழக்குத் தீர்ப்பு வழங்குவதற்கு ஒரு கிழமைக்கு முன் சென்னை இலிங்கிச் செட்டித் தெரு 292ஆம் எண் (இப்போதைய புது எண் 261) உள்ள

திரு சோமு செட்டியார் வீடு விலைக்குக் கிடைக்கப்பெற்றது அம்மை அம்பலவாணர் திருவருட் குறிப்பேயாகும்.

தனிப்பெருங்கருணை வள்ளல் இராமலிங்க அடிகளார் கொள்கைகளைப் பரப்பும்பொருட்டுச் சமரச சன்மார்க்கசங்கம் (பொது நிலைக் கழகம்) அமைத்த மறைமலையடிகளார் தம் நூல்நிலையம் நடைபெறுவதற்கு இராமலிங்க வள்ளலார் 1832ஆம் ஆண்டில் தமது 9ஆம் அகவையில் முதன் முதல் பேசிய சோமு செட்டியார் வாழ்ந்த மாளிகை கிடைக்கப் பெற்றது எத்துணை மகிழ்ச்சிதரும் செய்தியாகும்!

17—9—1948 இல் அம்மை அப்பலவாணர் மறைத்திரு மறைமலை அடிகளார் உள்ளத்திலே உணர்த்திய செய்தி பத்து ஆண்டுகளில் அரும்பிப் பூத்துக் காய்த்துப் பழுத்து மறைமலையடிகள் நூல்நிலையமாக விளங்குகின்றது. 24-8-1958இல் மேதகு ஆளுநர் விட்ணுராம் மேதி அவர்கள் தலைமையில் மாண்புமிகு அமைச்சர் எம். பக்தவத்சலம் அவர்கள் நூல்நிலையத்தை திறந்துத் வைத்ததும், நூலக நுண்கலையில் உலகப்புகழ் பெற்ற எஸ். ஆர். அரங்கநாதன் அவர்களும், பேரறிஞர் அண்ணா அவர்களும் சிறப்புரை ஆற்றியதும் எத்துணை மகிழ்ச்சிதருஞ் செயல்களாகும்.

4—11—1979இல் மறைமலையடிகள் நூல்நிலையத்தின் 20ஆம் ஆண்டு நிறைவு விழா மேதகு உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி எம். எம். இசுமாயில் அவர்கள் தலைமையில் நடைபெற்றதும் திருவருட் குறிப்பாகுமன்றோ?

மறைமலையடிகளாரும் பெரியாரும்

15—9—1950இல் இறையடி சேர்ந்த மறைமலையடிகளார் தாம் எழுதிய 4—8—1950 நாட்குறிப்பில் குறித்திருப்பது ஈண்டுக் குறிப்பிடுவது மகிழ்ச்சிக்குரிய தொன்றாகும்.

"Periyar E. V. Ramasamy Naicker visited me this morning with Mr. Adalarasu and we had long talk for an hour."


Took rest the whole day.

இங்கே கீழே தரப்படும் குறிப்பு மிகவும் பொருத்தமாகும்.

"13—11—1938இல் சென்னையில் நடைபெற்ற தமிழ்நாட்டுப் பெண்கள் மாநாட்டிலே மறைமலையடிகளார் திருமகளார் திருவரங்க நீலாம்பிகை அம்மையார் தலைமையிலே இந்தி எதிர்ப்பியக்கத்தை முன்னின்று நடத்திய பெருமகனார் ஈ. வே. இராமசாமியார் அவர்கட்குப் 'பெரியார்' என்னும் 'சிறப்புப் பட்டம்' வழங்கப் பெற்றது."

மறைமலையடிகள் நூல்நிலையமும் இலங்கை அமைச்சரும்

தமிழ்க்கடல் மறைமலை அடிகளாரை நான் நேரில் பார்த்ததில்லை. நிரம்பவும் கேள்விப்பட்டிருக்கிறேன். அவர் நூல்களைத் தேடி, விரும்பிப் படித்திருக்கிறேன், என் இதயத்தை அவர் எழுத்துக்களிலும், கருத்துக்களிலும் பறிகொடுத்திருக்கின்றேன்.



இன்று அவர் திருப்பெயரால் எழுந்துள்ள நூலகத்தைத் தாமரைச் செல்வர் பெரியவர் உயர்திரு, சுப்பையா பிள்ளை அவர்களுடன் பார்வையிடும் பேறு பெற்றேன். அடிகளின் ஆராய்ச்சிகளை எவ்வண்ணம் புகழ்வது, பாராட்டுவது என்று தெரியாமல் திணறுகின்றேன். கலைமகளின் திருக்கோயிலுக்குள் காலடி எடுத்துவைத்த மக்களைப்போல் வெளியேற முடியாது நிற்கின்றேன். ஆம்! இந்த நூலகத்தில் நுழைந்து செலவிட்ட மணித்தியாலங்கள் என் நெஞ்சில் பசுமை நிறைந்ததாக நிலைத்திருக்கும். என் நெஞ்சு பெருமையினால் நிமிர்கின்றது. தமிழ்மொழியின் அருமை பெருமைகளில் தம்மை மறந்து ஈடுபாடுற்ற ஆங்கிலேய, ஜெர்மானிய, இத்தாலிய, பிரஞ்சு மேதைகளின் எழுத்தோவியங்களைப் புகழ்வதா! தமிழ்ப் பேரறிஞர்களின் ஆய்வால் உருப்பெற்ற உயர்ந்த இலக்கியங்களைப் போற்றுவதா? எனக்கு இன்று ஏற்பட்டுள்ள தமிழ் நிறைவை என்னென்று சொல்வேன்? பெரியவர் சுப்பையாபிள்ளை அவர்களின் தமிழ்ப்பணி ராஜராஜ சோழன் எழுப்பிய 'கலைக்கோயில்' போல உயர்ந்து நிற்கின்றது, அவர் பல்லாண்டு பல்லாண்டு வாழவும், தமிழ்ப்பணி புரியவும் கதிர்காமக் கந்தன், தமிழ்த் தெய்வம் அருள் பாலிப்பாராக.

அன்பன்

9—12—79 **செல்லையா இராசதுரை,**

பிரதேச அபிவிருத்தி, தமிழ்மொழி அமுலாக்கம்,
இந்து சமயம் இந்து கலாச்சார அமைச்சர்.

குறிப்பு: திரு. இரா. முத்துக்குமாரசாமி அவர்கள் எம். ஏ. பி. லிப்., நூலகத்தின் பொறுப்பாளராக இருக்கின்றார். பெயருக்குப் பொருத்தமாகப் பணிபுரிகின்றார். ஆழ்கடலில், மூச்சுப் பிடித்து அழகிய முத்துக்களை அள்ளிவரும் சுழியோடி போல் நூலகம் முழுவதிலும் நுழைவோர் பார்க்க முடியாத அருமையான நூல்களை அவர் கைகள் எடுக்கின்றன. நமக்குத் தருகின்றார். நாம் நம்மை மறந்து படிக்கும்போது பக்கத்தில் நின்று மன நிறைவு பெறுகின்றார். பல்லாண்டு அவர் சிறப்புடன் வாழ்ந்து இந் நூலகத்தை மேலும் வளர்க்க வேண்டுமென்று விரும்புகின்றேன்.

—செல்லையா இராசதுரை

அன்னை தெரேசா பெற்ற நோபல் பரிசு

கல்கத்தாவைச் சேர்ந்த கத்தோலிக்க அறக்கொடை நிலயத்தின் அன்னை தெரேசா அவர்கட்கு அண்மையில், நோபல் பரிசு வழங்க நோபல் குழுவினர் முடிவு செய்த செய்தி அனைவரும் அறிந்ததே. அப் பரிசளிப்பு விழா 10—12—79இல் ஓஸ்லோ என்னுமிடத்தில் நடைபெற்றது.

உலகில் அற உள்ளமும், அமைதியை நிலைநாட்ட விழையும் பண்பும் கொண்டவர்கட்கு அளிப்பதற்கென ஒதுக்கப்பெற்ற இந் நோபல் பரிசினை இவ்வாண்டு அன்னை தெரேசா பெற்ருர். இப் பரிசின் தொகை 192,000 டாலர் (ரூ. 15,50,000) அத்துடன் நோபல் தங்கப் பதக்கமும், நற்சான்றிதழ் ஒன்றும் வழங்கப் பட்டன.

அன்னை தெரேசா அவர்கட்கு இப்போது அகவை 69 ஆகிறது. கன்னியாக வாழ்க்கை நடத்தும் இவர்தம் வாழ்நாள் முழுவதையும் ஏழைகட்கு உதவுவதிலேயே செலவிட்டு வருகிருர். இப் பரிசினைப் பெற்ற முதல் இந்தியக் குடிமகள் இவரே. 1901ஆம் ஆண்டுக்கும் இவ்வாண்டுக்கும் இடையில் இத் துறையில் பரிசு பெற்ற பெண்மணிகளில் இவர் ஆருவது பெண்மணியாவார்.

இவர் தமக்கு அளிக்கப்பட்ட பரிசுத் தொகையினை அறத் திற்கே அளித்துவிட்ட செய்தி முன்னரே வெளிவந்துள்ளது. இப் போது, நடைபெற்ற பரிசளிப்பு விழாவினையொட்டி ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பெரு விருந்து ஒன்றினை இவ்வம்மையார் ஏற்றுக் கொள்ள மறுத்துவிட்டனர். காரணம், அவ் விருந்துக்கு ஆகும் செலவு ஏறக்குறைய 48,000 ரூபா. இப் பெருஞ் செலவினை அவர் விரும்பாததால், அவ் விருந்து கைவிடப்பட்டு, அன்னையார் விருப்பத்திற்கிணங்க, அத் தொகையினைக் கொண்டு கல்கத்தாவி லுள்ள 400 ஏழை மக்கட்கு ஓராண்டு காலத்திற்கு உணவளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

உலகின் செல்வமிக்க நாடுகள் ஏழைகட்கு உதவ முன்வர வேண்டுமெனக் கேட்டுக்கொண்டதற்கிணங்க ஓஸ்லே தேவால யத்தினர் ஏறக்குறைய ரூ 5,50,000/= திரட்டி நன்கொடையாக வழங்கியுள்ளனர்.

பரிசளிப்புக்கு நன்றி தெரிவிக்கு முறையில் மனித வாழ்க் கையின் சிறப்பினை வற்புறுத்தி, ஒரு நாட்டின் குழந்தைகள் அந் நாட்டின் எதிர்காலச் செல்வங்களாகுமாதலால் அவர்களை நாம் போற்றிப் புரத்தல் வேண்டும் என்றும் கூறினர்.

மக்கட் பெருக்கத்தைக் குறைப்பதற்குரிய கட்டாய அறுவை முறையினை அம்மையார் ஏனே விரும்பவில்லை என்பது ஆராய்தற் குரியது.

———

தமிழகத்தில் பல் மருத்துவக் கல்வி

[பேராசிரியர் ஜே. ஜி. கண்ணப்பன், M.D.S., F.I.C.D.,

பல் மருத்துவர், சென்னை]

ஒரு நாட்டின் முன்னேற்றம் தனிமனிதனின் கல்வியறிவினையே பொறுத்துள்ளது. யாவருக்கும் படிப்பறிவு இருக்குமேயானால் ஒரு நாடு முன்னேற்றம் அடைவதற்கு எத்தகைய தடையுமில்லை. இவ் வுண்மையினை அறிவுறுத்தும் வகையில் வள்ளுவர்,

''தூங்காமை கல்வி துணிவுடைமை இம்மூன்றும்
நீங்கா நிலனாள் பவர்க்கு''

எனக் கூறினர்.

இன்றைய நிலையில், கல்வி எனப்படுவது மிகவும் இயல்பானதாகத் தோன்றினும் அதனைச் செயல்படுத்துவதில் மிக்க அதிக அளவில் முயற்சி தேவைப்படுகிறது.

இந்த இருபதாம் நூற்ருண்டில் பல்கலைக் கல்வியைவிட அறிவியல் கல்வி மிக முதன்மை பெற்றது. இக் கருத்தினை வலியுறுத்த எழுதப்பட்டதே இக் கட்டுரை.

தமிழகத்தில் பல் மருத்துவக் கல்வி தோன்றி, கடந்த 1978 ஆம் ஆண்டுடன் 25 ஆண்டுகள் நிறைவு பெற்றுவிட்டதைக் குறிக்குமுகத்தான் தமிழகம் எங்கும் பல் மருத்துவக் கல்வியின் வெள்ளிவிழா கொண்டாடப்பட்டது.

இவ் வெள்ளிவிழாவினை 1978ஆம் ஆண்டு சூலை மாதம் 23ஆம் நாளன்று மதுரை மா நகரில் தமிழக முதல்வர் மாண்புமிகு எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள் துவக்கி வைத்தார்கள். இதன் தொடர்பாகத் தமிழ்நாடெங்கும் பல் நோய் பற்றிய ஆய்வு மற்றும் பல் நோய்க்கு மருத்துவம் ஆகியவற்றுக்காகப் பலவிடங்களில் பல் மருத்துவ முகாம்கள் நடத்திப் பல் மருத்துவக் கல்வித் தொண்டு செய்யப்பட்டது. இவ் விழா 1978 ஆகஃச்டு மாதம் 6ஆம் தேதியோடு சென்னையில் நிறைவு பெற்றது. இந் நிலையில் பல் மருத்துவக் கல்வியின் தோற்றம், வளர்ச்சி, இன்றைய நிலை ஆகியன பற்றி விளக்க வேண்டியது மிக மிக இன்றியமையாததாகும்.

1953ஆம் ஆண்டு ஆகஃச்டு மாதம் 10ஆம் தேதியன்று பல் மருத்துவக் கல்விக்காகச் சென்னை மருத்துவக் கல்லூரியில், ஒரு பகுதியாக (Dental Wing) தனிக் கல்லூரியொன்று துவக்கப்பட்டது

அப்போது பல் மருத்துவப் பேராசிரியராக விளங்கியவர் டாக்டர் எம். ஜி. ராவ் அவர்கள். இப் பேராசிரியரின் பொறுப்பில் பல் மருத்துவ இளநிலை மருத்துவக் கல்வி துவக்கப்பட்டது. அன்று இக் கல்வியினைப் பயில்வதற்கு 15 மாணவர்களே தேர்ந்தெடுக்கப் பட்டனர். அந் நாளில் இப் பல் மருத்துவம், சென்னை மருத்துவக் கல்லூரியிலேயே ஒரு பகுதியாக இயங்கி வந்தது. 1978இல் வெள்ளி விழா கொண்டாடப்பட்டது. பல் மருத்துவத்துக்கெனத் தனி யாகவே ஒரு கல்லூரி இயங்கிய நிலை இதன் வளர்ச்சியைக் காட்டு வதாகும்.

பல் மருத்துவக் கல்லூரியின் புது அமைப்புக்கு அண்மையில் வெள்ளிவிழாக் கொண்டாடப்பட்ட போதிலும், சென்னையில் பல் மருத்துவம் 1929 அக்டோபர் 3ஆம் நாளிலேயே துவங்கப்பட்டு விட்டது. இக் கல்லூரியின் முதல்வராக டாக்டர் B. P. இராஜன் அவர்கள் பதவியேற்றார்.

பல் மருத்துவம் இந்தியாவிலும், சீன நாட்டிலும் பண்டைக் காலந் தொட்டே முதன்மை பெற்று வருகிறது. அதிலும் குறிப் பாகச் சீனரின் பல் மருத்துவம் போற்றுதற்குரியதாக விளங்கு கிறது. இந்தியாவிலும் இந் நாளில் பல் மருத்துவம் என்பது நல்வாழ்வுத் துறையில் அடிப்படையாக அமைந்துள்ளது.

பல்லின் நலத்திலிருந்துதான் பல நலன்கள் விளைகின்றன. பல்லின் நலம் கெட்டால் உடல் நலமே கெடுகிறது. எனவேதான் பல்லினை அடிப்படையாக வைத்துப் பல பழமொழிகள் தமிழ் நாட்டில் வழங்கி வருகின்றன. பற்களைத் தூய்மையாக வைத்துக் கொண்டால் அவை உறுதி பெறுகின்றன என்பதை விளக்க 'ஆலும் வேலும் பல்லுக்குறுதி' என்ற பழமொழி எழலாயிற்று. நல்ல பல் அமைப்பினாலேயே சொல்லும் சிறப்புறுகிறது என்பதை விளக்கப் 'பல்லுப்போனால் சொல்லுப்போச்சு' என்ற பழமொழியும், பற்களால் நன்கு மென்று உண்பதால் உடல் நலம் சீர்படும் என்பதை விளக்கவும், நலவாழ்வுக்கே அஃது அடிப்படை என்பதை விளக்கவும் ''நொறுங்கத் தின்பவர்க்கு நூறு வயது'' என்ற பழ மொழியும் எழலாயின.

செரிமான உறுப்புக்கள் சரியானபடி இயங்க வேண்டுமானால், பற்கள் நல்ல நிலையில் இருத்தல்வேண்டும். செரிமான உறுப்புக்கள் வயிற்றில்தானே உள்ளன என்று நாம் நினைக்கலாம். ஆனால் வாய்தான் அவற்றின் வாயில். இந்த வாயிலிலுள்ள அரைக்கும் உறுப்புக்களான பற்கள் நோய்வாய்ப்பட்டால் அதனால் ஏற்படும் தாங்க முடியாத வலி ஒரு புறமிருப்பினும், உடல் நலமும் பெரிதும் தாக்கப்படுகிறது.

பற்களை இழக்க நேரிட்டால் அவற்றை மீண்டும் அமைக்கும் பல்கட்டும் மருத்துவம் இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னரே தோன்றிவிட்டது எனலாம். இழந்த பற்களைக் கட்டவும், சீர் கெட்ட பல் அமைப்பினைச் சீராக்கவும், இந் நாளில் புத்தம் புதிய மருத்துவ முறைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. பண்டைக் காலத்தில் பல் மருத்துவம் ஒரு சில குடும்பத்தாரின் தொழிலாக இருந்து அம் மரபு வாழையடி வாழையாக வந்துகொண்டிருந்தது. அப்படிப்பட்ட குலக்கல்வி முறையால் பல் மருத்துவம் நெடுங் காலமாக வளர்ச்சியடையாமலிருந்தது. ஆனால், கடந்த 50 ஆண்டுக் காலத்தில் அந் நிலைமாறி இம் மருத்துவ முறை வேக மாக முன்னேறி வருகிறது. பல் மருத்துவம் பல்கலைக்கழகப் பட்டப் படிப்பாகச் செயல்பட்டு வருகின்றது. இங்ஙனம் படிப்படியாகப் பல் மருத்துவம் வளர்ச்சியுற்று வருவது நம் தமிழகத்திற்கு ஒரு பெருமை எனலாம். ஆனால், பல் மருத்துவத்திற்கெனத் தமிழகத்தில் தனிக்கல்லூரி சென்னையில் மட்டுந்தான் இருக்கிறது. அடுத்து அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலும் பல் மருத்துவக் கல்லூரி தொடங்குவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இருப்பினும், இத் துறையில் இளைஞர்களுக்குத் தொழிற் கல்வி அளிக்க, மேலும் பல பல் மருத்துவக் கல்லூரிகள் ஏற்படுதல் நலம். அத்தகைய தொழிற்கல்விக்கு வேண்டிய அடிப்படை வசதிகள் வாய்ந்த பெருநகரங்கள் தமிழகத்தில் உள்ளன. குறிப்பாக மதுரையிலும், கோவையிலும் பல் மருத்துவக் கல்லூரிகளை ஏற்படுத்தலாம்.

பல் மருத்துவப் பயிற்சி அளிப்பதற்கு வேண்டிய வசதி வாய்ப்புக்கள் நம் நாட்டில் நிறைய உள்ளன. இப்போது அதற்கு வேண்டிய கருவிகள் இந்தியாவிலேயே உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன. எல்லாத் துறைகளிலும் மேல் படிப்புப் படித்துப் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் தமிழகத்தில் பலர் உள்ளனர். ஆகையால் இங்குப் பல் மருத்துவக் கல்வியினை மேலும் வளர்க்க எத்தகைய தடையும் இல்லை. படித்துவிட்டால் போதுமா? அத்தனை பேர்கட்கும் வேலை வாய்ப்புக் கிடைக்க வேண்டாமா? என்று சிலர் கேட்டுத் தடை கூறலாம். ஆனால் அஃதொரு பொருத்தமான வாதமாகாது.

ஒரு நாடு முன்னேறுகிறது என்றால் அங்குக் கல்வி கற்றவர் தொகை பெருகுகிறது என்றுதான் பொருள்படும். மக்களிடையே அறிவு வளர வேண்டும். அதற்குக் கல்வி வேண்டும். நோயில்லா வாழ்க்கையும் தக்க பாதுகாப்பும் தேவை. இதுபற்றியே,

''பிணியின்மை செல்வம் விளைவின்பம் ஏமம்
அணியென்ப நாட்டிற்கிவ் வைந்து''

என்ருர் வள்ளுவர் பெருந்தகை.

கல்வியறிவு பெற்றவர்க்கே வேலைவாய்ப்பு கிட்டும், அஃதற்ற வர்கள் கீழ் மட்டத்திலேயே இருந்திட நேரும். அத்தகையவர் களால் நாட்டுக்கு நன்மை இல்லை. வேலையில்லாத் திண்டாட்டம் ஒருபுறமிருப்பினும், கல்லாதவர்களைவிடக் கற்றறிந்தவர்கள் வேலை யில்லாதவர்களாயினும் அதில் குற்றமில்லை. (It is better to be educated un employed than un educated un employed)

நம் நாடு விடுதலை பெற்று 32 ஆண்டுகள் கடந்துவிட்டன. பல துறைகளில், அதிலும் சிறப்பாக அறிவியல் துறையில் நாடு நன்கு முன்னேறியுள்ளது. இதையறிந்த அயல் நாட்டினர் நம் நாட்டு அறிவியல் வல்லுநர்களுக்குப் போதிய நன்மை அளித்துத் தம் நாடுகளில் வேலைக்கு அமர்த்திக் கொள்கின்றனர்.

ஒரு காலத்தில் நம்மவர் அமெரிக்கர்களையும், ஆங்கிலேயர் களையும் போற்றி அழைத்து அவர்களிடம் கல்வி அறிவினைப் பெற்ற காலம் உண்டு. இன்று அந் நிலை மாறி நாம் பிற நாட்டி னர்க்குத் தொழிற் கல்வி போதிக்கும் அளவிற்கு முன்னேறி யுள்ளோம்.

அவ் வகையில் நம் நாட்டுப் பல் மருத்துவர்கள் அயல் நாடு களில் திறம்படப் பணியாற்றி இந்தியாவின் புகழை நிலைநாட்டி வருகின்றனர். இதற்குக் காரணம் நம் நாட்டிலேயே பல் மருத் துவக் கல்விக்கு நல்ல வாய்ப்புக்கள் ஏற்பட்டிருப்பதேயாகும்.

நாடு முன்னேறிக் கல்விக்குரிய வசதி வாய்ப்புக்கள் பெருகி யிருப்பதால் ஒவ்வொரு குடிமகனும் உடல் நலம் பேண, பற்கள் நலம் பேண, மருத்துவம் மேற்கொள்ள விரும்புகிருன். அந்த வகையில் தமிழகத்திற்கு இன்றைய நிலையில் 2000 பல் மருத்து வர்கள் தேவைப்படுகின்றனர். அத்துணை மருத்துவர்களைச் சித்தப் படுத்த, இப்போதுள்ள வசதிகளை வைத்துப் பார்த்தால் ஏறக் குறைய 200 ஆண்டுகள் ஆகும். அதுவரையில் மக்கள் காத்திருக்க முடியுமா ?

எனவே, 'திரைகடல் ஓடியும் திரவியம் தேடு' என்னும் பழமொழிக் கேற்ப, நம் நாட்டு வல்லுநர்கள் அயல்நாடுகட்குச் செல்ல வேண்டியிருப்பதாலும், நாட்டு மக்கட்குப் பணிபுரிய பல் மருத்துவர்கள் போதிய அளவிற்குத் தேவைப்படுவதாலும் பல் மருத்துவக் கல்வியினை மேலும் பெருக்க எல்லா வசதி வாய்ப்புக் களையும் அரசு செய்து தருதல் நலமாகும்.

செய்திகளும் குறிப்புக்களும்

தலைமை நீதிபதிக்குப் பாராட்டுவிழா

சென்னைக் கம்பன் கழகத்தின் சார்பில் 17—11—79 அன்று மயிலை உட்லண்ட்சு விடுதியில், மாண்புமிகு தலைமை நீதிபதி திரு. மு. மு. இசுமாயில் அவர்கட்குப் பாராட்டுவிழா நடைபெற்றது. கோவைக் கம்பன் கழகத் தலைவர் திரு. ஜி. கே. சுந்தரம் அவர்கள் தலைமை தாங்கினார்கள். தலைமை நீதிபதியாகப் பதவி ஏற்ற திரு. இசுமாயில் அவர்களைப் பாராட்டி முனைவர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் உரையாற்றினார். இவ் விழாத் தொடர்பாகத் தேநீர் விருந்தொன்றும் நடைபெற்றது. பெருமக்கள் பலர் இவ் விழாவில் கலந்துகொண்டனர்.

கழகப் புலவருக்குப் பொன்னாடை

நமது சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழக நூலாசிரியர்களில் ஒருவரும், நூற்றுக்கு மேற்பட்ட நூல்களின் ஆசிரியருமான கருப்பக்கிளர் சு. அ. இராமசாமிப் புலவர் அவர்கட்குக் கருப்பக்கிளரைச் சேர்ந்த திரு. மு. பஞ்சாட்சரம் என்னும் அன்பர் ஒருவர், 19—11—79இல் திரௌபதியம்மன் திருக்கோயிலில் தாம் நடத்திய சிறப்பு விழாவில் பொன்னாடை போர்த்திப் பாராட்டிச் சிறப்பித்தார் என்பதறிந்து மகிழ்கிறோம்.

மூன்றாவது சென்னைப் புத்தகக் காட்சி

தென்னிந்திய புத்தக விற்பனையாளர், பதிப்பாளர்கள் சங்கத்தின் சார்பில், சென்னையில் 3ஆவது புத்தகக் காட்சி திசம்பர் 1 முதல் 10ஆம் நாள் முடிய நடைபெற்றது. 1—12—79இல் நிதிஅமைச்சர் மாண்புமிகு நாஞ்சில் கி. மனோகரன் அவர்கள் இப் புத்தகக் காட்சியைத் திறந்து வைத்தார். கல்வி அமைச்சர் மாண்புமிகு செ. அரங்கநாயகம் அவர்கள் திறப்பு விழாவிற்குத் தலைமை தாங்கினார். பள்ளிக் கல்வி இயக்குநர் முனைவர் கே. வெங்கடசுப்பிரமணியம் உரையாற்றினார். இப் புத்தகக் காட்சியினை ஆயிரக்கணக்கான மக்கள் கண்டு களித்தனர். கல்வி ஆர்வலர் பலர் நயமானவிலையில் புத்தகங்களை வாங்கிச் சென்றனர்.

குழந்தை இலக்கிய ஆறாவது மாநாடு

அனைத்துலகக் குழந்தைகள் ஆண்டில் குழந்தை எழுத்தாளர் சங்கத்தின் சார்பில் நவம்பர்த் திங்கள் 12, 13, 14ஆம் நாட்களில் குழந்தை இலக்கிய ஆறாவது மாநாடு சென்னையில் நடைபெற்றது. முதல் நாள் நிதி அமைச்சர் மாண்புமிகு நாஞ்சில் கி. மனோகரன் அவர்கள் மாநாட்டைத் தொடங்கி வைத்தார். குழந்தை இலக்கியச் சங்கத் தலைவர் அழ. வள்ளியப்பா தலைமை தாங்கினார். உயர்நீதி மன்ற நடுவர் திரு. எஸ். மோகன் அவர்கள், எழுத்தாளர்கள் பூவண்ணன், தங்கமணி, பதிப்பாளர் அருணன் ஆகியோருக்குச் சங்கத்தின் சார்பில் பாராட்டுக் கேடயங்கள் வழங்கினார். திரு. ஆர். இராமகிருட்டிணன் ஏ. வி. மெய்யப்ப செட்டியார் திருவுருவப் படத்தைத் திறந்து வைத்துப் பாராட்டினார்.

இரண்டாம் நாள் விழாவில் அமைச்சர் மாண்புமிகு சுப்புலட்சுமி செகதீசன் அவர்கள் தலைமையில், கல்வி அமைச்சர் மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் அவர்கள் புதிய நூல்கள் சிலவற்றை வெளியிட்டதோடு, சிறந்த சிறுகதை, நாடக நூல்களை எழுதிய ஆசிரியர்களுக்குப் பதக்கங்கள் வழங்கினார்.

3ஆம் நாள் விழாவில், கவிஞர் கண்ணதாசன் விழாவைத் தொடங்கி வைக்க, கவிஞர் மீ. ப. சோமசுந்தரம் (சோமு) அவர்கள் தலைமை தாங்க, திரு.அகிலன் அவர்கள் சிறப்புரை ஆற்றினார். திரு. இரத்தினம் அவர்கள் நன்றி கூறியபின் விழா இனிது நிறைவேறியது.

"கிருபானந்த வாரியார் சுவாமிகள் வாழ்க்கை வரலாறு" நூல் வெளியீட்டுவிழா

'அருள் மொழி அரசு' திருமுருக கிருபானந்த வாரியார் அவர்களின் வாழ்க்கை வரலாற்றினைக் கூறும் நூலின் வெளியீட்டுவிழா சிதம்பரம் தில்லைத் திருப்புகழ்ச் சபையினரால், மயிலை திருக் கபாலீசுவரர் திருக்கோயில் திருமுறை மண்டபத்தில் 21—11—79 அன்று நடைபெற்றது. சீர்காழி கோவிந்தராசனின் இறை வணக்கத்தோடு விழா துவங்கிற்று. வானதி திருநாவுக்கரசு அவர்கள் வரவேற்புரை நிகழ்த்த, புலவர் கி. வா. செகநாதன் அவர்கள் தலைமை தாங்க, சிலம்புச் செல்வர், முனைவர் ம. பொ. சிவஞானம் அவர்கள் வரலாற்று நூலினை வெளியிட்டார். உயர்நீதி மன்ற முன்னாள் நடுவர் எஸ். மகராசன் அவர்கள், முனைவர் எஸ். சரவணன் அவர்கள் ஆகியோர் பாராட்டுரை வழங்கினர். திருமுருக கிருபானந்த வாரியார் ஏற்புரையாற்றியபின் விழா இனிது நிறைவேறியது.

மறைமலையடிகள் நூல்நிலைய வளர்ச்சிக்கு நன்கொடை

(செல்வி சிலம்பு ருச-கூசுஆம் பக்கத் தொடர்ச்சி)

உயர்திரு. வ. சுப்பையா பிள்ளை அவர்கள் கழக ஆட்சியாளர்	10	00
,, இரா. சுந்தரம் பிள்ளை கழகச் செயற்குழு உறுப்பினர்	10	00
மாண்புமிகு செல்லையா இராசதுரை அவர்கள் இலங்கை அரசு இந்துசமய அமைச்சர்	200	00
உயர்திரு. மோசசு பொன்னையா, மதுரை	100	00
,, பேரா. சி. நயினார் முகம்மது	100	00
,, S. D லூர்து எம். ஏ., திருநெல்வேலி	20	00
,, பா. நாராயணன், ஆத்தூர்	10	00
,, Dr. R. கோவிந்தராஜன் M.D.	10	00
,, ஆ. சுப்பையா பிள்ளை அவர்கள். கழக மேலாளர்	5	00
,, A. T. A. ஈஸ்வர், சென்னை	5	00

முதறிஞர் இராசாசி 102வது பிறந்தநாள் விழா

முதறிஞர் இராசாசி அவர்களின் 102வது பிறந்தநாள் விழா 9—12—79இல் சென்னைக் கலைவாணர் அரங்கில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. இராசாசி அவர்களின் பல்வேறு ஆற்றல்கள் பற்றிய கருத்

தரங்கு ஒன்று முற்பகலில் நடைபெற்றது. மாலையில் சட்ட மன்ற மேலவைத் தலைவர் முனைவர் ம. பொ. சிவஞானம் அவர்கள் விழாவுக்குத் தலைமை தாங்கினார். சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. எம். வெங்கடாசலம், இ. ஆ. பெ. வரவேற்புரை நிகழ்த்தினார். உயர்நீதி மன்றத் தலைமை நீதிபதி மாண்பமை மு. மு. இசுமாயில் அவர்கள் மூதறிஞர் இராசாசி அவர்களின் திருவுருவப்படத்தினைத் திறந்து வைத்து விரிவுரையாற்றினார். பெருமக்கள் பலர் சிறப்புரை ஆற்றிய பின் கூட்டுறவுத்துறை அமைச்சர் மாண்புமிகு திரு. கே. ஏ. கிருட்டிண சாமி விழா நிறைவுச் சொற்பொழிவாற்றினார்.

மதிப்புரை

TIRUVALLUVAR — By S. MAHARAJAN — Published by Sahitya Akadami, Price Rs. 2-50

இந்திய இலக்கியச் சிற்பிகளின் வரிசையில் முதலிடம் பெறத்தக்க வள்ளுவப் பெருந்தகையினைப் பற்றி எழுதப்பட்டு, சாகித்ய அகாடமி யால் வெளியிடப்பட்டுள்ளது இந்த நூல். வழக்கம்போல் திருவள்ளு வரின் வாழ்க்கை வரலாற்றினை மட்டுமோ, அல்லது திருக்குறள் உரை நயம் பற்றியோ எழுதாமல் வள்ளுவரையும் அவர்தம் குறளையும் பல கோணங்களிலிருந்து ஆய்ந்து எழுதியுள்ளார் இந் நூலாசிரியர் திரு. மகராசன் அவர்கள்.

திருவள்ளுவர் மயிலையில்தான் வாழ்ந்தார் என்பதை முழுவதும் ஒப்புக்கொள்வதோடு அக் காலத்தில் மயிலையில் வாழ்ந்த கிறித்தவப் பாதிரிமார்களுடன் கலந்துரையாடி, அதன் விளைவாகவே திருக்குறளை வள்ளுவர் வடித்திருப்பதாகக் கூறப்படும் கருத்தினைத் திட்டவட்டமாக மறுத்துள்ளார் நூலாசிரியர். வள்ளுவர் கிறித்து பிறப்பதற்கு முன்னரே தோன்றி வாழ்ந்து மறைந்தவர் என்றும் அதன் காரணமாகக் கிறித்தவக் கருத்துக்கள் குறளில் இடம்பெற எத்தகைய வாய்ப்பும் இல்லை என்றும் அறுதியிட்டுக் கூறுகிறார். இவ் வகையில் தீர்வு காணப்படாதிருக்கும் வள்ளுவர் காலத்தைப் பற்றி இந் நூலாசிரியர் தீர்வு கண்டுள்ளார். திருவள்ளுவர் உஆம் நூற்றுண்டிற்குச் சில ஆண்டுகள் முன்னர் வாழ்ந்தவர் என்று கூறுகிறார்.

மரக்கறி உணவின் மாண்பினை வலியுறுத்துவதற்காக நிறுவப் பட்டுள்ள மரக்கறி உண்போர் உலகப்பேராயத்தினைச் (World Vegetarian Congress) சேர்ந்த உறுப்பினர் சிலர் இந்தியாவுக்கு வருகைதந்தபோது அவர்களுடன் கலந்துரையாடும் நல்வாய்ப்புப் பெற்ற இந் நூலாசிரியர் வள்ளுவர் ‘கொல்லாமை’ என்னும் அதிகாரத்தில் கூறியுள்ள கருத்துக்களை அவர்களுக்கு எடுத்துக்கூறி அவர்கட்கு எவ்வாறு ஊக்கமளித்தார் என்பதையும், வள்ளுவத்தின் சிறப்பினை அவர்கள் உணரும்படி செய்த வகைகளையும் இந் நூலில் காணலாம்.

‘தர்மார்த்த காம மோட்சம்’ என்ற வடமொழிப் பாகுபாட்டினைப் பின் பற்றியே வள்ளுவர் தமது திருக்குறளைச் செய்துள்ளார் என்று கூறப்படும் கருத்தினைப் போக்குவதற்கு ஒரு தனிப் பகுதியையே ஒதுக்கியுள்ளார் நூலாசிரியர் திரு. மகராசன் அவர்கள்.

வள்ளுவர் அறம்—பொருள்—இன்பம் என்பன பற்றிக் கூறி 'வீடு' என ஒன்றைக் கூருததற்குக் காரணம் கூற வந்த இந் நூலாசிரியர் வானுலகு (Heaven) பூவுலகு (Earth) என்பன தனித்தனி அண்டங்களல்ல எனவும், மக்கள் இப் பூவுலக வாழ்க்கையில் கடைப்பிடிக்கும் சீரிய வாழ்க்கை முறையே வானுலகப் பேற்றினைத் தருமாகையால் 'வானுலகம்' பற்றி வள்ளுவர் தனியாகக் கூறவில்லை என்றும் தமக்கே உரிய முறையில் கருத்துக்கூறுவது குறிப்பிடத்தக்கதாகும்.

இந் நூல் இந்திய மொழிகளில் மட்டுமின்றி உலகத்தின்' பல்வேறு மொழிகளிலும் மொழிபெயர்க்கப்படுமானல் 'திருக்குறள் மேலும் பலமொழிகளில் மொழிபெயர்க்கப்பெறவும் அது வெகு விரைவில் உலகெங்கும் பரவுவதற்கும் வாய்ப்பாக அமையும்.

சிலம்புச் செல்வி (சிலப்பதிகார நாடகம்)

[ஆசிரியர்: மு. வை. அரவிந்தன், எம். ஓ. எல்., தமிழ்த் துணைப் பேராசிரியர், அரசினர் கலைக்கல்லூரி கிருட்டிணகிரி. வெளியீடு: கண்ணம்மை பதிப்பகம், 54/F ஜாபர்சா தெரு, திருச்சி-8, விலை: ரூ. 6.00]

முத்தமிழுள் சிலப்பதிகாரம் ஒரு நாடகத் தமிழ்நூல். எனினும் அது நாடக வடிவில் அமையவில்லை. தொடர்நிலைச் செய்யுட்காப்பியமாகவே அமைந்துள்ளது. இக் குறைபாட்டினை நீக்கி, இளங்கோவடிகளின் கவிதையடிகளைக் கொண்டே உரையாடல்களை அமைத்துள்ளார் இந் நூலாசிரியர். மூல இலக்கியத்தில் மாற்றம் சிறிதும் இல்லாமல் நாடகம் செய்யுள் நடையில் நன்கு அமைந்துள்ளது. இளங்கோவடிகளின் நாடகத் திறனை அறிந்தின்புற இந் நாடகம் பயன்படும். நூலாசிரியரின் முயற்சி பாராட்டத்தக்கது.

மணமக்களுக்கு

ஆசிரியர்: முத்தமிழ்க் காவலர் கி. ஆ. பெ. விசுவநாதம். கிடைக்குமிடம்: பாரி நிலையம், 59 பிராட்வே சென்னை-1, விலை: ரூ. 1-25]

சீர்திருத்தங்கள் அனைத்துக்கும் அடிப்படையாய், மற்றவர்களுக்கு ஓர் எடுத்துக்காட்டாய் விளங்குவது சீர்திருத்தத் திருமணம். சீர்திருத்தம் என்பது தமிழ் நன்மக்கள் தமக்கே உரிய பண்டைய மரபின் வழி கொள்ளத்தக்கன கொண்டு தள்ளத்தக்கன தள்ளி வாழ்தலேயாகும். இடைக்காலத்தில் நம்மவரிடையே புகுந்த வேண்டாத - அறிவுக் கொவ்வாத முறைகளை விலக்கித் திரு. வி. க., நாவலர் சோமசுந்தர பாரதியார் ஆகியோர் நடத்தி வைத்த தமிழ்த் திருமண முறைகளையே முத்தமிழ்க் காவலர் அவர்கள் கடைப்பிடிப்பதோடு மணமக்களுக்கு நல்ல பல அறிவுரைகளைக் கூறுகிருர். பயனுள்ள நூல். தமிழ்த் திருமணம் செய்து கொள்ளவும் செய்விக்கவும் விழைவோர்க்குத் தக்க வழிகாட்டியாகத் திகழ்கிறது இந் நூல்.

திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்திற்காக, சென்னை, 80, பிரகாசம் சாலை, அப்பர் அச்சகத்தில் திரு. வ. சுப்பையா அவர்களால் அச்சிடப்பெற்றது.
ஆசிரியர்: வ. சுப்பையா



இடமிருந்து ஆறாவது நிற்பவர் டி. எஸ். மணியம்

தூத்துக்குடி அரிமா சங்கம்

ஊனமுற்றோர்க்கு ஒளிமிக்க எதிர்காலம்

எண்சாண் உடம்பினிலே இலங்குகின்ற உறுப்பெல்லாம்
திண்ணமுறப் பயன்படுத்தல் திகழ்நிலையில் உயர்நிலையாம்
கையின்றிக் காலின்றிக் கமழ்உறுப்பில் சிலஇன்றேல்
மெய்யினிலே குறையென்பார்! மெய்யில்லை, குறைமொழியே!
உடலினிலே ஒருபகுதி திடனின்றிப் போனாலும்
கடனாற்றத் தக்கபணி காட்டிவிடில் புரியாரோ!
பிறவிமுதல் கவனித்துப் பிழைபலவும் தடுத்திடுவோம்!
திறமான வாய்ப்பளித்தால் ஊனமுற்றோம் எனயாரும்
கவலுவதும் இல்லாத கண்ணியத்தைக் காத்திடுவோம்!
தன்காலில் தான்நிற்கப் பணிபுரியும் வாய்ப்பளித்தால்
பொன்னானோர் உளம்எழுவார்! பிறருக்குப் பொதியாகார்!
உறுப்பிழந்த மாந்தர்கள் உயர்வுடனே திகழ்ந்திடவே
பொறுப்பேற்றுத் தோள்கொடுத்துப் பணிசெயவே உதவிடுவோம்!

திருநெல்வேலி டி. எஸ். மணியம் கம்பெனி

தொடர்பு கொண்டுள்ள நிறுவனங்கள்

1. அசோக்லேலண்ட் லிமிடெட்.
2. அடிசன் கம்பெனி.
3. சிம்சன் குழு, தொழிலகங்கள்.
4. சென்னை விண்ணூர்தி நிலையம்.
5. 'மெட்ராஸ் சிமென்ட்ஸ்' துலுக்கப்பட்டி.
6. இந்தியா சிமென்ட்ஸ், தாழையூத்து.
7. இண்டஸ்டிரியல் கெமிக்கல்ஸ், சங்கர்நகர்.
8. தரங்கதாரா கெமிக்கல்ஸ், ஆறுமுகனேரி.
9. டி. வி. சுந்தரம் ஐயங்கார் அண்டு சன்ஸ், மதுரை.
10. சதர்ன் ரயில்வே, அயினாவரம்,
11. நெய்வேலி லிக்னைட் கார்ப்பரேஷன்.
12. தமிழ்நாடு தொழிலாளர் கூட்டுறவுக் கழகங்கள், முதலியன.

கழகப் புதிய வெளியீடுகள்

மேல்நிலைப் பள்ளி மாணவர்கட்கேற்ற பொருளியல் நூல்கள் (Economics)

பேராசிரியர் மா. பா. குருசாமி அவர்களால் எழுதப் பட்டு, சென்னைப் பல்கலைக் கழகப் பொருளியல் துறைத் தலைவர் டாக்டர் வேதகிரி சண்முகசுந்தரம் அவர்களின் அணிந்துரை பெற்ற நூல்கள் :

ஆங்கிலேயர் ஆட்சிக்கு முந்திய இந்தியப் பொருளாதாரம்
(Indian Economy before British Rule)

ஆங்கிலேயர் இந்தியாவுக்கு வருமுன்னர் இருந்த இந்தியப் பொருளாதார நிலையினையும், அவர்களின் வருகைக்குப்பின் ஏற்பட்ட நன்மை தீமைகளையும் கூறும் நூல். ரூ. 5-00

ஆங்கிலேயர் ஆட்சியில் இந்தியப் பொருளாதாரம்
(Indian Economy during British Rule)

இந்தியாவில் ஆங்கிலேயர் ஆட்சி ஏற்பட்டபின் இந்தியப் பொருளாதாரத்தில் ஏற்பட்ட மாறுதல்கள், ஒருமைப் பாடு ஆகியன பற்றி இந் நூலில் கூறப்படுகின்றன. ரூ. 5-00

பொருளாதார அமைப்புக்கள் (Economic Systems)

முதலாளித்துவம், சதர்மமம், கூட்டுப் பொருளாதாரம் ஆகிய மூவகைப் பொருளாதார அமைப்புக்கள் பற்றிக் கூறுகின்றது இந்நூல். ரூ. 4-00

வருவாயும் வேலைவாய்ப்பும்
(National Income and Theory of Employment)

இந்திய நாட்டு வருவாய்க் கணிப்பு, வேலை வாய்ப்புக்கள், வேலை இன்மையால் விளையும் சிக்கல், வருவாய்ப் பகிர்வு ஆகிய செய்திகள் இந் நூலில் கூறப்படுகின்றன. ரூ. 4-00

பணம், அங்காடி, பொருளாதார வளர்ச்சி :

பணம் மனித வாழ்க்கையில் எப்படி யெப்படி யெல்லாம் பயன்படுகிறது-பண வீக்கம் என்றால் என்ன-அங்காடிகளின் செயல்முறைகள், வகைகள் யாவை-பொருளாதார வளர்ச்சி என்றால் என்ன-மூலதனம் ஆக்கமுற என்ன செய்ய வேண்டும்-முதலீடு என்றால் என்ன-அதன் வகைகள் யாவை என்பன போன்ற அரிய பொருளாதாரக் கருத்துக்கள் இந்நூலின்கண் விளக்கப்படுகின்றன. விலை ரூ. 7-50

MAGNIFICENT MADURAI
—Yogi. Shuddananda Bharati

மதுரைமாநகரில் சிவபெருமான் நிகழ்த்திய திருவிளையாடல்கள் பற்றிய கருத்துக்களையும், மதுரையின் தெய்வீக மாண்பினையும், தமிழரல்லாத வெளிநாட்டினரும் படித்து மகிழும் வண்ணம் ஆங்கிலத்தில் எழுதப்பட்டுள்ளது இவ்வழகிய சிறு நூல். ரூ. 1-75

அப்பர் அச்சகம், சென்னை-1.